# யாரோ யாரோடி...

## 1

"அம்மா முன்னாடி எப்படிக்கா பேசறது, நான் மாட்டேம்பா!" அழகாக வளர்த்து மெடிக்கூர் செய்து பாலிஷில் பளபளத்த தன் விரல் நகங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டே கேட்டாள் பிரணத்தி.

"ச்சசோ... பிரணா, இந்தக் காலத்துப் பொண்ணு மாதிரி கொஞ்சம் பிகேவ் பண்ணேன். வருண் ஒரு வாரம் முன்னால் போன் செஞ்சப்ப பேச விட்டாயா? அப்பா பக்கத்திலே உட்கார்ந்து பேப்பர் வாசிச்சுகிட்டிருந்தாங்க. அதனால், 'நான் வருண் பேசறேன்...' என்று சொன்னவுடன், போனை நீ வைச்சாச்சுன்னு சொன்னே. அவன் என்ன நினைப்பான்."

"அக்கா! நிஜம்மா சொல்லிட்டா... ஏன்னா, எனக்குப் பயமா இருக்கு. இந்தப் போன்ல பேசற வேலையே வேண்டாம்னு சொல்லிடேன் அவர்கிட்டே!" கெஞ்சினாள் பிரணத்தி.

''நேத்தும் பேசினானாமே? அப்ப ஏன் கட் பண்ணினே?''

''அது நான் வேணும்னே கட் பண்ணலே, தெரியாமல் பதட்டத்தில் பட்டன்லே கைபட்டுருச்சு!'' பெரிய நீண்ட கண்களில் பாவனையுடன் அவள் சொல்ல, கௌசல்யா சிரித்து விட்டாள்.

''நீ எப்படி என் தங்கச்சியா வந்து பிறந்தியோ. நான் அப்பா அம்மாகிட்டே சண்டை போட்டு ஒத்த கால்ல நின்னு காதலித்த மணியையே கல்யாணம் பண்ணிகிட்டேன். தெரியாமதான் கேக்கறேன். வருண் உனக்கு அம்மா, அப்பா, பார்த்து வைச்ச மாப்பிள்ளைதானே. இனிமே உன்கிட்டே பேசவே மாட்டேன் என்று சொல்விட்டான். உன் மேலே ரொம்ப கோபம் அவனுக்கு. அவன் கோபத்தைக் குறைக்கணும்னா, நீதான் இனி போன் செய்யணும்.''

''கோபப்பட்டுக் கல்யாணத்தை நிறுத்தி விடுவாரா அக்கா,'' என்று நைந்த குரலில் பிரணத்தி கேட்க, சிரிப்புதான் வந்தது கௌசல்யாவிற்கு.

இவ்வளவு கொள்ளை அழகுடன் இருக்கும் பெண்ணை மணக்க மறுப்பதற்குக் கடவுள் அல்லவா அவதாரம் எடுத்து வரவேண்டும். சாதாரண மனிதர்களால் மறுக்க முடியுமா? சந்தேகம்தான். உண்மையில் பிரணத்தி கொள்ளை அழகு. உள்ளும் புறமும் ஒரு சேர மலர்ந்த காணக்கிடைக்காத அபூர்வ அழகுப் பெட்டகம்தான்.

''இப்ப நான் வருண் செல் நம்பர் தரேன். குறிச்சுக்கொள். நாளைக்குப் போன் பண்ணு. இன்னைக்கு அவன் பாண்டிச்சேரி போயிருக்கான். ஏதோ சுவாரசியமான ப்ராஜக்ட்டாம். அதைப் பற்றி ஆசையாகச் சொல்லலாம்னுதான் உன்கிட்டே பேச முயற்சி பண்ணியிருக்கான்,'' என்ற கௌசல்யா, சிரிப்புடன் பேனாவையும், பேப்பரையும் எடுத்த தங்கையைக் கண்டவுடன் -



''உனக்கும் ஆசைதானடி!'' என்று வயிற்றில் குத்தினாள்.

அக்கா சொன்ன நம்பரைக் குறித்துக் கொண்டு பாதுகாப்பாகத் தன்னுடைய அலமாரியில் கொண்டு வைத்தாள்.

''மறந்திடாதே பிரணா, ரொம்ப முக்கியம். வருணுக்கு நிஜமாகவே உன் மேல் கோபம். நீ மட்டும் போன் பேசி விட்டால் எல்லாம் சரியாயிடும். அம்மாவும், அப்பாவும் இதில் ஒன்றும் தவறு சொல்ல மாட்டார்கள். பயப்படாதே!''

சரி என்கிற மாதிரி தலையை ஆட்டிய பிரணத்தி, ''அக்கா! நாளை நீ எத்தனை மணி ஃப்ளைட்லே லண்டன் கிளம்பறே? டிரெய்னிங் முடிந்து என் கல்யாணத்திற்கு 'டாண்'னு வந்துடுவேயில்லே?'' என்று கேட்டாள்.

''எர்லி மார்னிங் ஃப்ளைட். நீ கவலையே படாதே. உன் கல்யாணத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்னாலேயே வந்துடுவேன். எல்லாம் ப்ளான் பண்ணித்தானே போறேன்.''

மாருதி வாசலில் நிற்கும் சத்தம் கேட்கவே, இருவரும் வெளியே வந்தார்கள். காரின் டிரைவிங் சீட்டில் இருந்து இறங்கிய சுப்ரஜா, மகள்கள் இருவரையும் கண்டதும் உதட்டில் புன்சிரிப்புடன் காரைப் பூட்டினாள். காலேஜ் புரொஃபஸர் வேலையின் அசதி அவர் முகத்தில் இல்லை. சுறுசுறுப்பான பெண்மணி அவர்.

''கௌஸி! எப்பம்மா வந்தே. திங்ஸ் எல்லாம் டேக் பண்ணியாச்சா? நீ கேட்ட பொடி எல்லாம் ரெடி பண்ணி டைனிங் டேபிள்லே எடுத்து வைச்சிருந்தேன். எடுத்தியா? லண்டன்லே கிப்ட் பண்ணணும்னு கேட்டியே, சந்தனப் பொடியும், சந்தன எண்ணெயும் காதிகிராப்ட்லே வரும்போது வாங்கிட்டு வந்தேன். சரிதானா பாரு!'' என்று கையில் இருந்த கேரி பேக்கை அவளிடம் நீட்டினார் சுப்ரஜா.

''செல்ல அம்மா, வாங்கிட்டு வந்தீங்களா? மறந்துடுவீங்களோன்னு நினைச்சேன். தாங்க்ஸ்மா!'' என்று சொல்லி



அவரைக் கட்டிப் பிடித்துக் கன்னத்தில் முத்தமிட்டாள், கௌசல்யா.

''ஐயோ... விடு கௌஸி, வேர்த்துப் பூத்து வந்திருக்கேன், முதல்ல குளிச்சிட்டு வரேன்,'' என்றபடி அவர் மகளின் பிடியை விலக்கினார்.

''பிரணா! இன்னைக்கு காலேஜ் போய் மார்க்ஷீட் வாங்கிட்டு வரணும்னு சொன்னியே, போய் வாங்கிட்டு வந்தியா,'' என்று கேட்டபடி தன்னுடைய அறைக்குள் நுழைந்தார்.

''ம்ம்.. வாங்கியாச்சு. சாமி படத்துக்கு முன்னாடி வைச்சிருக்கேம்மா.''

''ஏய் கழுதை, இவ்வளவு நேரம் நான் பேசிட்டுதானே இருந்தேன். என்கிட்டே காட்டவே யில்லை. காட்டு... காட்டு...'' என்று அவசரப்பட்ட கௌசல்யா, தங்கை கொண்டு வந்து காட்டிய மார்க்ஸ் பார்த்துப் பெருமையுடன் தங்கையை ஆசையாக முத்தமிட்டாள்.

அதற்குள் குளித்து, உடை மாற்றி விட்டு வந்த சுப்ரஜா,

''பிரணா, கௌஸிக்கு டிபன் ஏதாவது பண்ணிக் கொடுத் தாயா?''

''அதெல்லாம் வந்தவுடனேயே வக்கணையா வெட்டியாச்சு. பிரணா கல்யாணத்துக்கு இப்பவே மண்டபம் புக் பண்ணணும் என்று அப்பா சொன்னாங்களே. எந்த மண்டபம் புக் பண்ணியிருக்குமா?''

''ராணி மெய்யம்மையே புக் பண்ணியிருக்காராம். நான் கல்யாணத்துக்கு முன்னாலே ஒரு மாதம் லீவு போடலாம்னு இருக்கேன், கௌஸி. சமயத்துக்கு நீயும் லண்டன் போறியேன்னுதான் கஷ்டமா இருக்கு.''



''ட்ரெயினிங்கைத் தள்ளிப் போடுன்னு எவ்வளவு முறை சொன்னேன் நீ கேட்கவே யில்லையே!'' குறையோடு சொன்னார் சுப்ரஜா.

''எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த நுணுக்கமான, மைக்ரோஸ் கோபி நரம்பியல் சர்ஜரிக்கு லண்டன் ஹாஸ்பிட்டல்லே, ட்ரெயினிங் கிடைச்சிருக்குன்னுதான் உங்களுக்குத் தெரியுமே அம்மா. வாய்ப்புகள் ஒருமுறைதான் வரும். அப்பொழுது நாம் பயன்படுத்திக்கவில்லை என்றால் அப்புறம் நாமம்தான், மணிக்கும் அதே சமயம் ட்ரெயினிங் கிடைத்தது நம் அதிர்ஷ்டம் தானேம்மா. மணியோட லண்டன் ப்ரண்டு, ஆர்வத்துடன் ஆர்களைஸ் பண்ணி எல்லா ஃபார்மாலிட்டிஸையும் பார்த்துக் கொண்டதால் இது முடிந்தது. வெளிநாட்டுக்குப் போய்ப் படிச்சுட்டு வந்த டாக்டர் என்றால் இங்கே மதிப்பும் நூறு மடங்கு உயர்ந்திடும்மா. உங்களுக்குத் தெரியாததா?''

''நீ லண்டன் போறது சந்தோஷம்தான். ஆனாலும்...'' என்று அம்மா இழுக்கத் தொடங்க,

கௌசல்யா பேச்சை மாற்றினாள்.

''நான் பிரணத்திக்காக ஆர்டர் செய்திருந்த ஹாரம், ஜி.ஆர்.டி.யில் நாளைக் கழிச்சு ரெடியாயிடும். இந்தாங்கம்மா பில். மறக்காமல் வாங்கி வைச்சிடுங்க. பணம் அட்வான்ஸ் ஆக அப்பவே கொடுத்திட்டேன். அப்புறம், இன்னொரு மாலை டிசைன் பிரணாவுக்கு நல்லா பிடிச்சிருந்தது. அது கழுத்தை ஒட்டற மாதிரி கேட்டான் பிரணா. அதையும் பிரணாவைக் கூட்டிட்டுப் போய் வாங்கிக் கொடுத்திருங்கம்மா.''

''சரி, எல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீ கிளம்பு, நாளைக்குக் காலையிலேயே வேற எழும்பணும். இங்கேயே இருந்தால் வீட்டைச் சரி பண்ணிக் கிளம்பறது எப்ப?''

''மணி ஏழு மணிக்கு வந்து பிக்கப் பண்ணிக்கறேன்னு சொல்லியிருக்கார்ம்மா?''

## 2

மறுநாள் விடியற்காலை அம்மா, அப்பாவுடன் ஏர்போர்ட் போய் அக்காவை வழியனுப்பிவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் சிறிது நேரம் தூங்கி விட்டாள் பிரணத்தி. எழுந்ததும் அவளுக்குப் பசித்தது. வீட்டோடு இருக்கும் சமையல்காரம்மாள் இரண்டு நாள் லீவில் ஊருக்குப் போயிருந்தாள். கிச்சனுக்குப் போய் அம்மா ஏதாவது பண்ணி வைத்திருக்கிறார்களா என்று பார்த்தாள். காலையிலேயே சாதமும் சாம்பாரும், உருளைக் கிழங்குப் பொரியலும் பண்ணி வைத்திருந்தார் சுப்ரஜா. எடுத்து வைத்துச் சாப்பிட்டாள் பிரணத்தி.

தன்னுடைய தோழி ரம்யா வீட்டிற்கு மத்தியானத்திற்கு மேல் வருவதாகச் சொல்லியிருந்தாள் பிரணத்தி. ஆகவே பாத்ரூம் சென்று முகம் கழுவி, துடைத்தபடி டிரஸ் மாற்றுவதற்காக அலமாரியைத் திறக்கையில் எழுதி வைத்திருந்த வருண் செல்போன் நம்பர் காற்றில் படபடத்தது. கூடவே பிரணத்தியின் இதயமும் படபடத்தது. மெல்ல அதை எடுத்தாள். வருணும் மனதில் வந்தான். உடனே மணப் பெண்ணிற்கே உரிய வெட்கமும் வந்தது.

போன் செய்ய வேண்டும் என்று நினைத்தபோது, கொஞ்சம் பதட்டமானது. அக்கா அவ்வளவு தூரம் சொல்லிச் சென்று இருக்கிறாளே, ஒதுக்கித் தள்ளவும் முடியவில்லை. சாதாரணமாக, இவ்வளவு கூச்சப்படுகிறவள் இல்லைதான். ஆனால் ஏதோ ஒன்று அவளைப் பேசவிடாமல் தடை செய்தது.

சரி என்று மனதைக் கொஞ்சம் சமாதானப் படுத்திக் கொண்டு, போனைக் கையில் எடுத்தாள் பிரணத்தி.



அதே சமயம் விதியும் அவளைக் கையிலெடுத்தது.

பிரணத்தியின் வாழ்க்கைப் போராட்டமும் அவள் அறியாமல் தொடங்கி விட்டது.

எழுதி வைத்திருந்த நம்பரைப் பார்த்துப் பார்த்து மெல்ல பட்டன்களை அமுக்கிய பிரணத்தி கடைசி நம்பரைத் தவறுதலாக அமுக்கினாள். ஒன்று என்று அவள் எழுதியிருந்த எண், ஏழு ஆக அவள் கண்களுக்குத் தென்பட -

அப்பொழுதே பிரணத்தியின் வாழ்க்கையும் மாறி எழுதப்பட்டவாயிற்று. விதியை என்னவென்று சொல்ல!

லைன் கிடைத்தவுடன், எதிர்ப்புறத்தில் பதிலை உணர்ந்து "ஹலோ" என்றாள் பிரணத்தி.

குரலில் ஆயிரம் கூச்சத்தோடு கொப்பளிக்கும் சந்தோஷத்தை அடக்கியபடி, கிசுகிசுப்பாக அவள் சொன்ன "ஹலோ, நான்தான் பிரணத்தி பேசறேன்," என்றது, எதிர்ப்புறத்தில் எப்படி ஒரு வரவேற்பைப் பெற்றிருக்கும் என்று பிரணத்திக்கு 'க்ளு' கூடக் கிடைக்கவில்லை.

ஆனால் போன் எடுத்தவன் ஆகாஷ். தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் பெரிய சாஃப்ட்வேர் கம்பெனியின் எம்.டி. சின்ன வயதில் கம்ப்யூட்டர் மூளையுடன் பலதைச் சாதித்தவன். திருமணம் என்பதை இதுவரை நினைத்தும் பார்க்காதவன். செல்வத்தோடு, கம்பீரமும், ஆண்மையும் நிரம்பிய அவனை வளைத்துப் போடப் பெரிய பண முதலைகள் வலைவீசிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனாலும் இதுவரை எந்த ஒரு சிறு சலனத்திற்கும் வாழ்க்கையில் இடமளிக்காதவன். அப்பேர்ப் பட்டவனுக்குச் சம்பந்தமே இல்லாமல் பெரும் வெட்கத்தோடு அவன் காதுகளில் கிசுகிசுத்த நளினமான அந்தப் பெண் குரல், எதையோ தட்டி எழுப்பியது போன்ற பிரமை ஏற்பட்டது.

யார் என்று புரிபடாத காரணத்தால், ஆனால் அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு, "பிரணத்தி..." என்று பெயரிட்டு



அழைத்து, போனாவை நாடியில் அழுத்தி, புருவம் சுருக்கி, யார் என்று யோசிக்கையிலேயே, தொடர்ந்து அவள், "அய்யோ, அம்மா வந்தாச்சு போல, எனக்குக் கூச்சமாயிருக்கு, வைச்சிடறேன்!" என்று பதட்டமாக வைக்கவும், இவன் குழம்பிப் போனான்.

'புதுமையான போன் கால்' என்று வாய் விட்டு முணு முணுக்கவும் செய்தான். ஆனால் அவள் குரல் நாள் முழுவதும் அவன் காதுகளில் ரீங்காரமிட்டது உண்மை. அந்தக் குரல் அவனை வசியப்படுத்தியது. விதியின் விளையாட்டும் ஆரம்பமானது.

"ஏர்போர்ட் போகணும்னு காலையிலேயே எழுந்தது ஒரே தலைவலி பிரணா, அதான் காலேஜ்லே பர்மிஷன் போட்டுட்டு வந்துட்டேன். நீ ஃப்ரண்ட் வீட்டுக்குப் போகணும்னு சொன்னியே, போகலையா?" என்றார் சுப்ரஜா.

"இதோ கிளம்பிட்டே இருக்கேம்மா!" என்று சொன்ன பிரணத்தியின் கன்னத்தில் வெட்கத்தின் சிவப்பு பளிச்சிட்டது.

அம்மா ஒரு ஐந்து நிமிடம் கழித்து வந்திருக்கக் கூடாதா? என்று உள்ளுக்குள் ஏக்கமாக இருந்தது. அவன் அவளைப் பெயரிட்டு அழைத்த விதம் பிடித்திருந்தது. 'டக்' என்று போனை வைத்து விட்டேனே, திரும்பவும் கோபப்பட்டிருப் பானோ என்று யோசனையாகவும் இருந்தது.

## 3

அடுத்து வந்த இரண்டு நாட்களும் டெலிபோன் மணி அடித்தால் பிரணத்தி தாவிப் போய் எடுத்தாள். வருண் போன் செய்வான் என்று ரொம்பவும் எதிர்பார்த்தாள்.



ஏமாற்றம் அடைந்தாள்.

"பிரணா! நாளைக்கு அப்பா ஃப்ரியாம், காஞ்சிபுரம் போக லாம்னு சொன்னார். கல்யாணத்திற்கு உனக்குத் தேவைப்பட்ட புடவைகள் எடுத்திடலாம். நிறைய கலெக்ஷன் இருக்கும் அங்கே. ரிசப்ஷன் புடவை நல்லா கிராண்ட்டா எடுத்திடலாம். அப்புறம்..." என்று புடவை வகைகளைப் பற்றிப் பேசிக் கொண்டே போனார்.

"எத்தனை மணிக்கும்மா கிளம்பணும்?" பார்த்துக் கொண் டிருந்த 'லி' டி.வி.யில் இருந்து கண்களை விலக்கி அம்மாவைப் பார்த்துக் கேட்டாள் பிரணத்தி.

"காலையில் ஒன்பது மணிக்கெல்லாம் கிளம்பிடலாம். அப்பத்தான் நிதானமா பார்த்து வாங்கிட்டு வரலாம்," என்று சொன்னபடி இரட்டை சோபாவில் மகளின் அருகில் உட்கார்ந் தார் சுப்ரஜா.

பக்கத்தில் வேலைக்கான இண்டர்வியூ கார்டைப் பார்த்த சுப்ரஜா, அதில் கண்களை ஓட்டியபடி புருவத்தைச் சுழித்தார்.

"என்டாம்மா, கல்யாணத்திற்கு இன்னும் மூன்று மாதம்தான் இருக்கு. உனக்கு என்ன இப்ப வேலைக்குப் போகணும்னு அவசியம்."

"போங்கம்மா, எவ்வளவு ஆசையா கம்ப்யூட்டர் என்ஜினியரிங் படிச்சேன். இவ்வளவு படிச்சிட்டு, மாப்பிள்ளை வீட்டுக்காரங்க, பொண்ணு வேலைக்குப் போக வேண்டாம். வீட்டு அரசியா எங்க வீட்டுல இருந்தாப் போதும்னு சொன்னவுடன் நீங்களும் சரின்னு சொல்லியாச்சு.

"கல்யாணத்திற்கு அப்புறம் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க விருப்பப்படி நான் வேலைக்குப் போகப் போவதில்லைதான். கல்யாணத்திற்குத் தான் இன்னும் மூன்று மாசம் இருக்கே. நீங்களும் வேலைக்குப் போய்டுவீங்க. நான் மட்டும் தனியா வீட்டில்... ரொம்ப போர் அடிக்கும்மா."

பிரணத்தி படிக்கும் போதிலிருந்தே நிறைய வரன்கள், அவளை, நான், நீ என்று கொத்திக் கொண்டு போக இருந்தது. ஆனால் படிப்பு முடிந்தவுடன்தான் கல்யாணப் பேச்சையே எடுக்க வேண்டும் என்று அவள் அப்பா ராஜ்குமார் கறாராகச் சொல்லிவிடவே, அச்சமயம் கல்யாணப் பேச்சு நின்று போயிருந்தது. ஆனால் அவள் பரீட்சை எழுதி முடிப்பதற்குள்ளே, வருண் குடும்பத்தினர் ரொம்பவும் ஆசைப்பட்டுப் பிரணத்தியைக் கேட்டார்கள். மிகவும் வசதியான இடம். நல்ல படித்த பையன், நல்ல வேலை, நல்ல சம்பளம், ஜாதகப் பொருத்தமும் அமோகமாக இருந்தது. போதாததற்கு வருண், கௌசல்யாவின் கணவனின் சிநேகிதனின் தம்பி என்ற அறிமுகம். அதனால் அவர்களின் குடும்பப் பின்னணியும் தெளிவாகத் தெரிந்தது. பெண் நூறு சதவீதம் அந்தப் பையனோடு சந்தோஷமாகக் குடும்பம் நடத்துவாள் என்று இமாலய நம்பிக்கை வந்து படித்து முடித்த கையோடு திருமண நாளையும் நிச்சயித்து விட்டார்கள்.

''இல்லை பிரணா, கல்யாண நேரத்தில் இப்ப போய் உன்னை வேலைக்கு அனுப்பினால், நல்லாவா இருக்கும். அவர்கள் வீட்டில் தப்பாக நினைத்து விட்டால்?''

''நீங்க அவங்களுக்குச் சொல்லிடுங்களேன், அம்மா. ப்ளீஸ்மா. சுயமா என் காலில் என்னால் நிற்க முடியும் என்கிற தைரியம் எனக்கு வேணும்மா. உங்களைப் போல எனக்கு வாழ்க்கைக் காலம் முழுக்க வேலை பார்க்கணும்னு ஆசை கிடையாது. ஆனா என் ஆசைக்கு இரண்டே மாசம் வேலைக்குப் போறேன். ப்ளீஸ்மா, செல்லம்மா ப்ளீஸ்,'' என்று அம்மாவின் மடியில் தலையை வைத்து, கன்னத்தில் தாயின் கையை அழுந்தப் பதித்தபடி, கெஞ்சுகையில் சுப்ரஜாவிற்குச் 'சரி' என்று தலையாட்டத்தான் முடிந்தது.

அம்மா சரி என்றவுடன் பிரணத்திக்கு ஒரே சந்தோஷம். அப்பாவை வழிக்குக் கொண்டு வருவது பிரணத்திக்குத்தான்



கஷ்டமே தவிர, சுப்ரஜா கணவனை அழகாகச் சமாளித்து விடுவார்.

பின் அம்மா வழக்கம் போல் கல்லூரிக்குச் சென்று விட, பிரணத்திக்குப் போர் அடிக்கத் தொடங்கியது. கௌசல்யா இருந்தால் கொஞ்ச நேரம் போனிலாவது அரட்டையடிக்கலாம் என்று நினைக்கையிலே ஒரு செல்போன் நம்பர் மனதில் பளிச்சிட்டது.

வருண் அவளுக்கு இன்னும் போன் செய்யாதது மனதைக் குடைந்தது. அவனை ஒரு முறை கூடப் பேச விடாததால் கோபமடைந்திருப்பானோ? மறுபடியும் நான் போன் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறானோ? சமயத்திற்குக் கௌசல்யா கூட இல்லையே என்று பிரணத்திக்கு ஒரே யோசனையாக இருந்தது.

அம்மா நாளை காஞ்சிபுரம் போக வேண்டும் என்று சொன்னது ஞாபகம் வந்தது. கல்யாணப் புடவை, மாப்பிள்ளை வீட்டார் எடுத்துத் தரவேண்டிய முறை. அவளிடம் அவளுக்குப் பிடித்த கலரும் கேட்டுவிட்டுப் போனார் அவள் வருங்கால மாமியார். அப்பவே ரிசப்ஷன் புடவை, வருணுக்குப் பிடித்த நிறத்தில் வாங்க வேண்டும் என்று சின்ன ஆசை இருந்தது.

வருணுக்குப் பிடித்த நிறம் என்னவாயிருக்கும் என்று யோசிக்கையிலே அவனிடம் பேசுவதற்கு ஒரு காரணம் கிடைத்தது போல, கால்கள் தானாக டெலிபோன் இருக்கும் இடத்தில் அவளைக் கொண்டு போய் நிறுத்தின. கைகள் தன்னிச்சையாக அவள் மனதில் பதிந்த அந்த எண்களைத் தட்டின. இவள் ''ஹலோ'' சொல்ல, கேட்டவன் ஆகாஷ்.

இரண்டு நாட்களாக நெஞ்சின் ஒரு மூலையில் சதா நிமிண்டிக் கொண்டே இருந்த அதே கிசுகிசுப்பான குரல், மீண்டும் ஆகாஷின் செவியில் சுகமாக வந்து பாய, ஆகாஷின் கூர்மையான கண்கள் ஒளிபெற்றன.



''நான் பிரணத்தி பேசறேன்...'' என்று பிரணத்தி தயங்கி மெதுவாக நெஞ்சு படபடக்கச் சொல்ல,

ஆகாஷ் இன்னும் அவள் யார் என்று புரியாத காரணத்தினாலும், ஏதாவது சொல்லிப் பிரணத்தியை வருத்தப்பட வைத்து விடக்கூடாது என்ற காரணத்தாலும், ''ம்ம்ம்...'' என்று மட்டும் சொல்லி அவளை மேலே பேசச் சொல்லி ஊக்குவித்தான்.

அவனின் கோபம் அந்த மௌனத்தில் வெளிப்பட்டாற்போலத் தோன்றியது பிரணத்திக்கு. அவள் போனில் ஒழுங்காகப் பேசாததற்கு விளக்கம் கேட்கிறான் என்று நினைத்துக் கொண்டு,

''ரொம்ப சாரி வருண். நீங்க போன் செஞ்சப்ப எல்லாம் ஏனென்றே தெரியாமல் ஒரே டென்ஷன். அப்பா வேற பக்கத்தில் இருந்தாங்க. கூச்சமா இருந்தது. ஸாரி அகெய்ன். வீட்டில் யாரும் இல்லாதபோது நானே உங்களுக்குப் போன் பண்ணறேன். ப்ராப்ளம் சால்வ்ட். சரிதானே?'' என்று கோவையாகப் பிரணத்தி பேச,

ஆகாஷுக்குப் புரிந்து போயிற்று. அது தன்னிடம் பேசுவதற்காக வந்த 'கால்' இல்லை என்று புரிந்த விஷயம் மனசுக்கு எரிச்சலைத் தந்தது.

''ராங் நம்பர்!'' என்று சொல்ல வாயில் வந்த வார்த்தைகள், தொடர்ந்து பிரணத்தி பேசிய பேச்சில் மறந்து போனது.

''நம்ம கல்யாண ரிசப்ஷன் புடவை செலக்ட் பண்ண, அம்மா, அப்பா கூட நாளைக்குக் காஞ்சிபுரம் போறேன். எந்தக் கலர் எடுக்கட்டும். சொல்லுங்க, உங்க சாய்ஸ்தான்.''

அவ்வளவுதான். இதுவரை ஆகாஷ் உணர்ந்திராத உணர்ச்சி ஒன்று தாக்கி அவன் நாவை உலர்த்தியது. அந்தக் குரலின் பாதிப்பை விட அவள் கல்யாணத்தைப் பற்றிப் பேசியது அவனை மிகவும் பாதித்தது.



இது முட்டாள்தனம், கிறுக்குத்தனம், கோணங்கித்தனம் என்று அந்தப் படித்த பெரிய பதவியில் இருக்கும் மனிதனுக்குப் புரிந்துதான் இருந்தது. ஆனால் அவன் உள்ளே இருந்த மனம் அடி வாங்கியது போல அரண்டு கிடந்தது.

பதில் ஒன்றும் எதிர் முனையில் இருந்து வராது போகவே, ''இன்னுமா என் மேல் கோபம்?'' என்று வார்த்தைகள் செல்லச் சிணுங்கலாய் உதிர்ந்தன.

ஆகாஷை எது உந்தியதோ? எது அவளுக்குப் பதில் பேசத் தூண்டியதோ? இன்றுவரை புரியவில்லை.

''பாரம்பரியச் செழுமையைக் குறிக்கும், பசுமையான பச்சை நிறத்தில், மென்மையான, அன்பையும் காதலையும் நிலை நிறுத்தும் ரோஜாப் பூக்களின் சரிகைக் கொத்துக்கள் புடவையெங்கும் கொலுவிருக்க...'' என்று ஆகாஷ் உதட்டைக் கடித்துக் கொண்டு பேச, எதிர் முனையில் பிரணத்திக்கு எதிர்பாராத இன்ப அதிர்ச்சியாக இருந்தது.

பிரணத்தி ஏதாவது டிரஸ் எடுக்க வேண்டும் என்றால் மண்டையைப் போட்டுக் குடைந்து கொண்டிருக்கும் ரகம். ஆனால் அவளின் வருங்காலக் கணவன் நிமிடத்தில் முடிவெடுத்து, அதுவும் மிகவும் அழகாக வேலைபாடுகளையும் கூட வர்ணித்ததில் கொஞ்சம் பெருமையாக இருந்தது.

''நாளை எத்தனை மணிக்குக் காஞ்சிபுரம் போறீங்க?'' என்று அரும்பு மீசைப் பையன் போல் படபடக்கும் இதயத்தோடு, தான் ஏன் இதெல்லாம் கேட்கிறோம் என்று சத்தியமாக ஆகாஷுக்குப் புரியவில்லை.

''காலை ஒன்பது மணிக்கெல்லாம் கிளம்பணும்னு அம்மா சொன்னாங்க. சரி, நான் உங்ககிட்டே காஞ்சிபுரம் போய்ட்டு வந்து அப்புறம் பேசறேன். வேற எதுவும் இல்லையே. வைக்கட்டுமா?'' என்று போனை வைத்தாள் பிரணத்தி.

அவனோடு பேசியது நெஞ்சின் பாரம் இறங்கியது போல் இருந்தது. வருண் பார்ப்பதற்கு ரொம்பவும் மென்மையானவன். நல்ல நிறம். உயரமும் அவளைவிட நான்கு அங்குலம் அதிகம்தான். பூச் சூடல் அன்று அவனைப் பார்த்தபோது பிடித்துத் தான் இருந்தது. கண்களின் சாந்தமும், சிறியவர்கள் கிண்டலடித்தபோது வெட்கத்தில் லேசாகச் சிவந்த முகமும், வெள்ளை நிறத்தில் மொழுக்கென்று குழந்தைத் தனமாக இருந்த முகமும், அவளுக்கு ஜோடியாக இருந்தது போலத்தான் இருந்தது. ஆனால் போனில் பேசியபோது கேட்ட அவன் குரலும், தோரணையும், அவனை இரு வேறு முகமாகக் காட்டியது. குரல் கம்பீரமாகவும், தோரணையோ, தனக்கு இணை உலகத்தில் யாரும் இல்லை என்பது போலவும் இவளுக்குச் சொல்லிற்று. ஆண்மையும், கம்பீரமும் அவளைச் சந்தோஷம் கொள்ள வைத்தது என்னவோ நிஜம்.

## 4

பரிணாம வளர்ச்சியில் மனித இனம் தோன்றியதிலிருந்து மனம் என்ற ஒன்று இருக்கிறது. அது நிலையற்றது. அதனை அடக்கியாண்டால் பசி சோதனைகளைத் தவிர்க்கலாம். ஆனால் மனதை அடக்குவது காற்றை அடக்குவது போன்று இயலாத காரியம்.

அது போலத்தான் ஆகாஷ் மனதை அடக்க முடியாமல், எங்கே போகிறோம்? ஏன் போகிறோம்? எதை வேண்டிப் போகிறோம்? என்று ஒன்றும் யோசிக்காமல், தன் காரைக் காஞ்சிபுரம் நோக்கி ஓட்டிச் சென்றான். இப்படிச் செய்வது அடி



முட்டாள் தனம்தான். மூளை கெட்ட செயல்தான். புரிந்து தானிருந்தது.

இப்படி முகம் கூடப் பார்த்தறியாத பெண்ணால், தான் பாதிக்கப்படுவோம் என்று அவன் கனவிலும் எதிர்பார்க்க வில்லை.

கல்யாணச் சேலைகளுக்கு மிகவும் பெயர் பெற்ற ராசியான அந்தச் சேலைக் கடை முன் தன்னுடைய பென்ஸை நிப்பாட்டினான். இறங்கி கார் கதவைப் பூட்டிவிட்டு பேண்ட் பாக்கெட்டில் சாவியைப் போட்டான். ஆறடி உயரத்தில், 'மா' நிறத்தில், மணல் வண்ண நிற பேண்ட், வெள்ளை நிற முழுக்கைச் சட்டையில் மிகவும் வசீகரமாக இருந்தான். அந்தக் களையான முகத்தில் கண்கள் வெகு கூர்மையாக இருந்தன. சில நொடிகள் கூட விரயம் செய்வது பிடிக்காது அவனுக்கு. நடையில் எப்பொழுதும் ஒரு வேகம் இருக்கும். வேலையிலும் புயல்தான். அப்பேர்ப்பட்டவன், இன்று மெதுவாக அந்தப் பெரிய கடையில் நுழைந்தான். மெல்ல நாற்புறமும் கண்களைச் சுழலவிட்டபடி நடந்தான்.

அவனைக் கண்டதுமே பெரிய பார்ட்டி என்று ஓடி வந்த கடைச் சிப்பந்திகளைத் தன் கைகளால் அமர்த்தினான்.

''இந்தப் பச்சை இல்லை. அதோ, அந்தப் பச்சை... எடுத்துக் காட்டுங்க!'' என்று பக்கத்திலிருந்து வந்த குரலில் சரேலென்று திரும்பினான்.

கண்கள் அகல மறுத்தன.

இவள்தான். இவளேதான். இவளன்றி வேறு யாரும் இருக்க முடியாது என்று நெஞ்சம் அடித்துக் கொண்டது.

அங்கே பிரணத்திதான் கடையை இரண்டாக ஆக்கிக் கொண்டிருந்தாள்.

"கிட்டத்தட்ட இந்த மாநிறம்தான். ஆனால் இந்த ஜரிகை வேலைப்பாடு வேண்டாம். சின்னச் சின்னப் பூக்கள், ரோஜாப் பூங்கொத்து வேலைப்பாடு அமைத்து... இருக்குமா?'' என்று பிரணத்தி கண்கள் ஆர்வமாகக் கேட்க,

"பிரணா! பச்சை நிறம் கேட்டாய், கிடைச்சாச்சுல்ல. அப்புறம் என்ன ரொம்ப பர்ட்டிகுலரா, வேலைப்பாடு பத்தி எல்லாம் கேட்கற. இதெல்லாம் எங்கிருந்து படிச்சே?'' என்று சுப்ரஜா மெதுவாகப் பிரணத்தியிடம் கிசுகிசுக்க,

அதற்குள் கடைக்காரன் பத்துப் பதினைந்து புடவைகள், டிசைன் டிசைனாக எடுத்துப் போட, எல்லாவற்றையும் பார்த்த பிரணத்தி உதட்டைப் பிதுக்கியபடி, "அம்மா! பச்சை நிறத்தில் நான் சொன்ன மாதிரிப் புடவை இல்லை என்றால் எனக்கு வேண்டாம்மா!'' என்றாள் பிடிவாதமாக.

அதற்குள் யாரிடமோ பேசியபடி வந்த ராஜ்குமார், "சுப்ரஜா, பர்சேசிங் எல்லாம் முடிச்சாச்சா?'' என்றார்.

"இங்கே பிரணா ஒரு சேலை எடுக்கறதுக்கே இவ்வளவு டைம் எடுத்தாள் என்றால் நாம இன்னும் இரண்டு நாட்கள் இங்கேயே இருக்க வேண்டியதுதான்!'' என்று கிண்டலாகச் சுப்ரஜா சொல்ல,

"அப்பா! நான் நினைத்த மாதிரிப் புடவை இல்லைப்பா. வேறு கடை பார்க்கலாமா?'' என்று கேள்வி கேட்டாள் பிரணா.

"இங்கே இல்லை என்றால் வேறு எங்கும் கிடைக்காதும்மா. பேசாமல், இருப்பதில் நல்லதா நாலைஞ்சு எடுத்துக் கொள். அதோ பார், அந்தப் பச்சை உடம்பு முழுவதும் சரிகை. அட்டகாசமா இருக்கு. எடுத்துக்கம்மா!'' என்று சொல்லியும் தந்தார் அவர்.

"வேணும்னா அக்காவுக்கு அதை எடுத்துக்கலாம் எனக்கு வேண்டாம்,'' என்று உதட்டை கடித்துக் கொண்டு தலையசைத்து மறுத்தாள் பிரணத்தி.



முதன் முதலாய்த் தன் வருங்காலக் கணவன் ஆசையாகக் கேட்டது கிடைக்காமல் போய் விடுமோ என்று ஒரே தவிப்பாக இருந்தது.

அதற்குள் கடைச் சிப்பந்தி -

"நீங்க என்ன மாதிரிப் புடவை வேண்டும் என்று விளக்கமாக எழுதிக் கொடுங்கள். அட்வான்ஸும் கட்டி விடுங்கள். ஒரு வாரத்திற்குள் வீட்டிற்கு அந்தப் புடவை நெய்து டெலிவரி செய்து விடுவோம்,'' என்றார்.

பூவாய் மலர்ந்தது பிரணத்தியின் முகம். கடகடவென்று பேப்பரில் அவளுடைய தேவையை எழுதிக் கொடுத்தாள்.

பிரணத்தியையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த ஆகாஷ் நெஞ்சில் பிரணத்தி ஓவியமாகப் பதிந்து போனாள். ஏதோ ஜென்ம ஜென்மமாய்த் தொடரும் பந்தம் போல.

## 5

இவர்கள் புடவை எல்லாம் வாங்கி முடிக்க மணி இரண்டாகி விட்டது. கடைக்காரப் பையனின் உதவியுடன் அவர்கள் புடவை நிறைந்த பையை ஆளுக்கொன்றாகத் தூக்கிக் கொண்டு வெளியே வரவும் அது நடந்தது.

அரசியல் பிரமுகர் ஒருவரை ஜெயிலில் போட உத்தரவு என்ற செய்தி கேட்டவுடன், அந்தப் பகுதியில் உள்ள அந்தக் கட்சியைச் சேர்ந்த கட்சிக்காரர்களைப் பார்த்து எதிர்க் கட்சிக்காரர்கள் கிண்டலடிக்க ஆரம்பித்தது அடிதடி. முதலில்

இருவருக்குள் ஏற்பட்ட தர்க்கம், பின்பு, கட்சி கட்சியாய்ச் சேர்ந்து ஒருவரை ஒருவர் துரத்தி, கம்பு, கத்தியுடன் அடிதடியில் இறங்கியது. கடைகளிலும் பஸ்களிலும் கல்லெறிவதிலும் தொடர்ந்தது. தங்கள் சொத்துக்களையே நாசம் செய்தது.

ஒரு பெரிய கல் கடையின் 'ஷோ' கேஸைச் சேதப்படுத்தும் நோக்கத்தில் எறியப்பட்டது. ஷோகேஷின் முன்பு நடந்து வந்த பிரணத்தியின் முகம் நோக்கி வெகு வேகமாக வந்தது. புடவை பைகளில் கவனம் செலுத்தியிருந்த பிரணத்தி அந்தக் கல் வீச்சைக் கவனிக்கவில்லை. ஆனால் பின்னோடு வந்த ஆகாஷ் அந்தப் பெரிய கல்லின் வேகத்தையும், அது தாக்கப்படும் இடத்தையும் பார்த்து, தன்னையறியாமல் ''ஓ மை காட்!'' என்று வாய்விட்டுக் கத்தி இமைக்கும் பொழுதில் பிரணத்தியின் இடுப்பில் கை கொடுத்து வேகமாக வலப்புறமாக இழுத்தான்.

அவன் இழுத்த வேகத்தில் கையில் இருந்த பைகள் எல்லாம் சரிய, அதனுடன் சேர்ந்து நிலை தடுமாறி விழப்போன பிரணத்தியைத் தூக்கிப் பிடித்து ஆகாஷ் நிறுத்தவும் கலகல வென்ற சத்தத்துடன் கண்ணாடி ஷோகேஸ் உடைந்து, கண்ணாடிச் சிதறல்கள் எங்கும் வேகமாகச் சிதறின. இவர்கள் மேலும் கண்ணாடிச் சில்கள் தெறித்தன. பின்னோடு வந்த மேலும் சில கற்கள் மிச்சம் இருந்த கண்ணாடியையும் நொறுக்கின.

ராஜ்குமாரும், சுப்ரஜாவும் தன்னிச்சை நிகழ்ச்சியாகப் பறந்து வரும் கற்களைக் கண்டு கலவரப்பட்டு வேகமாகக் கடையின் உட்புறமாக ஒதுங்க, மகளும் ஒதுங்குகிறாள் என்று நினைக்க, அவள் கவனிக்காமல் புடவைப் பைகளைப் பரிசீலனை பண்ணிக் கொண்டு வருவதைக் கண்டு, ''பிரணா, இந்தப் பக்கம் ஓடி வந்துவிடு!'' என்று சொல்வதற்குள், ஆகாஷ் நொடிப் பொழுதில் அவளைக் கல் வீச்சில் இருந்து காப்பதற்கும் சரியாகத்தான் இருந்தது.



சடசடவென்று பக்கத்துக் கடைகள் இழுத்து மூட, இரண்டு நிமிடத்தில் ஒரே கூச்சலும், குமளியுமாக அந்த இடமே அல்லோகலப்பட்டது.

''பிரணா ஒன்றும் ஆகவில்லையே,'' என்று ராஜ்குமாரும், சுப்ரஜாவும், மறுபுறத்தில் இருந்து பதட்டத்தில் மாறி மாறிக் குரல் கொடுக்க,

''ஷி இஸ் ஆல்ரைட்!'' என்று குரல் கொடுத்தது ஆகாஷ்.

பிரணத்தி வெலவெலத்துப் போனாள். கூச்சலும் அடிதடியு மாகச் சண்டையிட்டு, மண்டை உடைந்து ரத்தம் பீறிட ஓடும் ஓரிருவரைக் கண்டதும், நடுக்கமடைந்த பிரணத்தி தனக்கு ஆதரவாகப் பக்கத்தில் நின்றவனுடைய கைகளைப் பயத்தில் இறுகப் பற்றினாள்.

சிதறிய கண்ணாடித் துண்டு பிரணத்தியின் மணிகட்டில் குத்தியதில் 'குபுக்' என்று ரத்தம் வந்து கொண்டிருந்தது. ஆகாஷுக்கும் தொடையில் இரண்டு மூன்று கண்ணாடிச் சில்கள் கோடு கிழித்திருந்தன.

முகம் சுருக்கி 'அம்மா' என்று வலியில் முனகியபடி பிரணத்தி கையை உயர்த்துவதைக் கண்டு, ஆகாஷ் அவள் கைகளைக் கவனித்தான். உடனே, தன்னுடைய கைகுட்டை யால் அவள் மணிகட்டில் ரத்தத்தை நிறுத்துவதற்காக அழுத்திக் கட்டி விட்டான்.

அவர்களுக்கு முன்னால் நடந்து சென்ற வயதான தம்பதியர், அடித்து மோதிக் கொண்டு வந்த கும்பலினால் ஆளுக்கொரு திசையில் விழுந்து கிடந்தார்கள். அரண்டு போய் அழுகையில் குலுங்கி எழும்ப முடியாமல் மீண்டும் கூட்டத்தின் மிதியில் சிக்கி விடுவோமோ என்று கிலி பிடித்து இருந்த அந்தத் தம்பதியை ஓடிச் சென்று கை கொடுத்து எழுப்பி, ஓர் ஓரமாகப் பாதுகாப்பாக நிற்க வைத்தான்.

அதற்குள் போலீஸ் ஜீப் ஒன்று 'விர்' என்று விரைந்து வந்தது. ஜீப் சத்தத்தைக் கேட்டு வன்முறைக் கும்பல் 'சட்' என்று அங்கும், இங்குமாகச் சிதறியது. எல்லாம் கண் மூடித் திறக்கும் முன் நடந்து விட்டது. கலவரக் கும்பல் கலைந்து போக, ராஜ்குமாரும், சுப்ரஜாவும் மகளிடம் வேகமாக வந்தார்கள்.

சுப்ரஜாவும் அவள் கைக் கட்டைப் பார்த்தவுடன் கலங்கி விட்டார். அந்தக் கல் மட்டும் பிரணத்தியின் தலையில் பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே நடுக்கமாகத்தான் இருந்தது.

''நான்தான் இந்தப் பக்கமா வா என்று கத்தினேனே, அப்படி என்ன அக்கம் பக்கம் பார்க்காமல் நடை!'' ரொம்பவும் கோபப் பட்டார் ராஜ்குமார். அப்பா திட்டவும் கண்ணோரங்களில் கரித்துக் கொண்டு வந்தது பிரணத்திற்கு. ''சரி.. சரி.. விடு. ஏதோ நம்ம நல்ல காலம். இவர் மட்டும் இல்லை என்றால்...'' என்று கூறியபடி தன் மகளுக்கு உதவி செய்தவனை அவர் கண்கள் தேடின. கூடவே தேடிய சுப்ரஜா, ''அந்த மனிதனை எங்கே காணோம். ஒரு தேங்க்ஸ் கூடச் சொல்லவில்லை. அவன் மட்டும் சமயத்தில் தன்னைப் பற்றிக்கூட நினைக்காமல், உன்னைத் தாவி இழுக்கவில்லை என்றால், என்ன ஆகியிருக்கும் தெரியுமா?'' என்று கேள்வியோடு முடித்தார்.

''அவனுக்கு மேலும் கண்ணாடிச் சில்கள் செருகியதா, பிரணத்தி? பாவம், உனக்காகத் தான் அவரும் மாட்டிக் கொண்டார். ஏதாவது சொன்னாரா?'' என்று சுப்ரஜா கேட்கையில் தான் பிரணத்தியின் கண்கள் தனக்கு உதவியவனை அந்தக் கூட்டத்தில் தேடின.

கலவரத்தில் அவன் முகத்தைக் கூட அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை. தவறோ!



# 6

இரவு மணி ஒன்பது. பிரணத்தி மணிக்கட்டில் கண்ணாடி ஊடுருவல் ஆழமாக இல்லாததால் பெரிதாக ஒரு பாதிப்பும் இல்லை. காஸ் துணியில் பஞ்சு வைத்துச் சின்னதாக ஒரு கட்டு மட்டும் போட்டிருந்தார் டாக்டர்.

''கல்யாணத்திற்குன்னு புடவை வாங்கப் போன பொழுது ரத்தக் காயம் பட்டது மனசுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்குதுங்க!'' என்று சுப்ரஜா கணவனிடம் பால் டம்ளரை நீட்டியபடி சொன்னார்.

''என்னம்மா இதையெல்லாம் நினைச்சுக் கவலைப்படறே. சிந்தனை செய்வதற்கு எவ்வளவோ இருக்கையில் நடந்து முடிந்த சின்னச் சம்பவத்தை மீண்டும் நினைச்சு, அதுக்கும் இதுக்குமா ஏன் பாலம் போடறே?'' என்றார் ராஜ்குமார்.

''கல்யாண விஷயம் இல்லையா? சகுனம் பார்க்கத்தானே செய்யணும்.'

''ஜோஸ்யரிடம் எல்லாப் பொருத்தத்தையும் பார்த்து, திருப்தியான பிறகுதானே நாம் கல்யாணத்தையே பிக்ஸ் செய்தோம்.''

''அதெல்லாம் சரிதான். ஆனா நல்ல விஷயத்திற்காக நாம போகும்போது எந்தத் தடங்கலும் வரக் கூடாதில்லையா? எனக்கு ரொம்ப நெருடலாத்தான் இருக்கு. இத்தனை வருஷத்திலே, நான் இப்படி ஒரு இக்கட்டில் ஒரு நாளும் சிக்கியது கிடையாது. ஒரு விநாடி தப்பியிருந்தாலும், பிரணாவின் உயிருக்கே ஆபத்தாகி இருக்கும் இல்லையா?''

''சுப்ரஜா! இப்படி நினையேன். வருண் யோகம்தான் பிரணத்திக்கு ஆபத்து தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சுன்னு.''

''ஆனாலும்... ரத்தம் சிந்தியது...'' என்று சமாதானப் படாமல் சுப்ரஜா இழுக்க...

''இன்னும் பழங்காலம், பட்டிக்காடாவே இருக்கே சுப்ரஜா. நீ ஒரு புரொபஸர், ஞாபகம் வைச்சுக்கோ. இந்த விஷயத்தை இனி என்னிடம் ஞாபகப்படுத்தாதே, புரிந்ததா?'' என்றபடி, அவர் கையில் இருந்த பைலில் கண்களை ஓட்டினார்.

அதற்குள் பிரணத்தியும் ஹாலுக்குள் வர, சுப்ரஜா தன் முக வாட்டத்தை மறைத்துப் புன்னகைக்கு மாறினாள்.

''அம்மா, இந்த மஞ்சள் பட்டுப் புடவையில் ரத்தக்கறை வந்திருக்கும்மா?'' என்று அன்று காஞ்சிபுரத்தில் வாங்கி வந்த புதுப் பட்டுப்புடவையை விரித்துப் பிரித்தபடி வந்து நின்றாள்.

அந்தப் புடவை புகுந்த வீட்டுக்குப் போனவுடன் பிரணத்தி கட்டுவதற்காக என்று சுப்ரஜா எடுத்தது. அன்று நடந்த கலாட்டாவில் பிரணத்தியின் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்த புடவை. 'பை' சரியாகக் கட்டி வைக்காத காரணத்தால் வெளியே விழுந்து கால் மிதி பட்டு அழுக்காகியும், எலுமிச்சம் பழ சைசில் ரத்தக் கறையுடனும் முழித்தது.

சட்டென்று கணவனிடம் பார்வையைத் திருப்பினார் சுப்ரஜா. அவர் எச்சரிக்கைப் பார்வையைச் சுப்ரஜாவிடம் செலுத்தினார். அந்தப் பார்வை நீயும் குழம்பி, பிரணத்தியையும் குழப்பி விடாதே என்றது.

''இந்தப் புடவையைத் தனியா எடுத்து வைச்சிரு, பிரணா. இனி இது உனக்கு வேண்டாம். வேறு எடுக்கலாம். மத்தப் புடவை எல்லாம் எடுத்துப் பார்த்தாயா? வா... வா... எனக்கும் காட்டு. இன்னொரு முறை பார்க்கலாம்,'' என்று பிரணத்தியின்



கையைப் பிடித்துக் கொண்டு அவள் அறைப் பக்கம் சென்றார் சுப்ரஜா.

மேலும் இரண்டு நாள் சென்றது. பிரணத்தியின் கைக் காயம் இப்பொழுது ஒரு பேண்டைடுடன் இருந்தது.

ஹிண்டுவில் வாண்டட் காலத்தை ஆராய்ந்து கொண்டிருந் தாள். ஒரு இடத்தில் வருண் கார்மெண்ட்ஸில் வேகன்ஸி என்று பார்க்கையில் பிரணத்திக்கு வருணிடம் பேச ஆசை எழுந்தது.

அம்மாவும், அப்பாவும் வீட்டில் இல்லை. இப்பொழுது போன் பேசினால் என்ன என்று தோன்றியவுடனேயே, மனதில் பதிந்து போன அந்த எண்களைப் பக்கத்தில் இருந்த தொலைபேசியில் அழுக்கினாள். வசதியாக சோபாவில் கால் மடித்து உட்கார்ந்து கொண்டாள்.

அவனுடன் பேசும்போதெல்லாம் படபடக்கும் இதயம், இப்பொழுது தன் வேலையைப் படு வேகமாகச் செய்தது.

இரண்டு நாட்கள் பிரணத்தியிடம் பேசாமல் தவித்துப் போனான் ஆகாஷ். அனு அனுவாய்க் கரையும் அஸ்தமனப் பொழுது நிலவுக்காக ஏங்குவது போல, அவன் அவளுடைய போன் காலை ஒவ்வொரு நொடியும் எதிர்பார்த்தான்.

அன்று கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் கம்பெனிக்கு சைட்டு பார்ப்பதற்காகக் காரில் அவன் மறைமலைநகர் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் செல்போன் மணி அடித்தது. 'சட்' என்று அதற்கு உயிர் கொடுத்தான். எதிர் முனையில் குரலை உணர்ந்தவன், துடிப்புற்று, தன்னையுமறியாமல் 'சடக்' என்று காரை நடு ரோட்டில் நிப்பாட்டினான். அது 'சர்' என்று டயர் கிறீச்சிடத் 'திடும்' என நின்றது. நல்ல வேளையாக ரோட்டில் போக்குவரத்து இல்லை. தப்பித்தான்.

அவளின் நலம் என்ற குரலுக்காக ஏங்கியிருந்தவன் சட்டென்று ''பிரணத்தி, சுகம்தானே. ஒன்றும் கவலைப்படும் படி இல்லையே!'' என்று கேட்டே விட்டான்.

நல்லவேளையாக பிரணத்தி எதையும் மூளையில் வாங்கிக் கொள்ளவில்லை. சம்பிரதாயமாக நலம் விசாரிக்கும் வார்த்தைகளாக அவைகளைக் கொண்டு, ''நல்ல நல்ல சுகம். அவ்விடம் எப்படியோ?'' என்று விளையாட்டாகக் கேட்டும் வைத்தாள்.

''எனக்கென்ன குறை. உன்னுடைய போன் கால் ஏன் இவ்வளவு தாமதம்? அந்த வருத்தம்தான் நிறைய!'' என்றான் குரலில் ஏக்கம் காட்டி.

கலகலவெனச் சிரித்தாள் பிரணத்தி.

''இனித் தினமும் உங்களிடம் பேசவில்லை என்றால் சண்டைக்கு வருவீங்க போல இருக்கே.''

''கண்டிப்பாக!'' என்ற குரலில் சின்னச் சிரிப்புடன் சொன்னான் ஆகாஷ். அந்தச் சிரிப்பில் ஒரு தாகம் இருந்ததைப் பிரணத்தி புரிந்து கொண்டாள். நெஞ்சில் சந்தோஷ அலை வந்து நுரை பொங்க மெல்ல மெல்ல எழுந்தது.

மறுபடி காருக்கு உயிர் கொடுத்தபடி, ''மங்கைக்குத் திடீரென்று என் நினைப்பு வந்ததெப்படியோ?'' என்றான்.

''மணவாளனின் பெயரைச் செய்தித்தாளில் படித்தவுடன் மணவாளனின் குரலைக் கேட்கும் ஆசையும் வந்துவிட்டது. அதனால்தான்...'' என்று அவன் பாணியிலேயே பேசிய பிரணத்திக்குச் சிரிப்புத் தாளவில்லை.

கூடவே பேசுவதுதான்தானா என்று ஆச்சர்யமாக இருந்தது.

எவ்வளவு தயக்கம்! எவ்வளவு பயம்! எவ்வளவு கூச்சம்! எல்லாம் எங்கே போனது? இவ்வளவு இலகுவாக அவன் அவனிடம் பேசியது கொஞ்சம் நெஞ்சில் பிரமிப்பைத் தந்தது.

''மணவாளனின் பெயர் செய்தித் தாளில் ஏன் வந்ததோ?'' என்று மேலும் விஷயம் அறியும் நோக்கத்தில் வெகு தீவிரமாக ஆகாஷ் கேட்க,



''பத்திரிகையில் வேலை தேடும் வேட்டையில் இறங்கிய போது...'' என்றவள் 'சட்' என்று நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''என்ன?'' என்று திருப்பத்தில் காரைத் திருப்பியபடி ஆகாஷ் உந்த,

''வருண்! உங்ககிட்டே ஒன்று சொல்லணும், நீங்க எப்படி எடுத்துப்பீங்கன்னு எனக்குத் தெரியவில்லை.''

புருவங்கள் நெரித்தன ஆகாஷுக்கு. பிரணத்தி அவனை வேறு பெயரிட்டு அழைத்தது சுத்தமாகப் பிடிக்கவில்லை. எல்லையில்லாக் கோபம் எட்டிப் பார்த்தது. அப்படி அவள் பெயரிட்டு அழைக்கையில், அவனின் ஆள் மாறாட்டம் மிகவும் பித்தலாட்டுத் தனமாகவும், விகல்பமாகவும் பட்டது அவனுக்கு.

தன்னை வெளிப்படுத்தி, அவளை இழக்கும் தைரியமும் அவனிடம் இல்லை.

மறுமுனையில் பதிலைக் கேட்காமல், பிரணத்தி ''ஹலோ... ஹலோ...'' என்று வேகமாகச் சொல்ல,

''என்ன பிரணத்தி, வேறு ஏதோ சொல்ல வந்தாயே?''

கடவுளே! நெகட்டிவாக இவன் எதுவும் சொல்லிவிடக் கூடாது என்று வேண்டிக் கொண்டு,

''நான் வேலைக்குப் போகலாமா?'' என்று கேட்டால் நீங்கள் என்ன சொல்லுவீங்க?''

''ம்... ம் அதற்கென்ன?'' என்று ஒரு கையால் தலையைக் கோதிவிட்டபடி யோசித்தான் அவன்.

''இல்லை, கல்யாணத்திற்குத் தான் இன்னும் நாட்கள் அதிகம் இருக்குதில்லையா? வீட்டில் போர் அடிக்கிறது. இரண்டு மாதம் வேலைக்கு, இல்லையென்றால் டிரெயினிங்குக்குப்

போகலாமா? என்று யோசனை. உங்களுக்கு ஆட்சேபனை உண்டா? கல்யாணத்திற்குப் பிறகு நீங்கள் கேட்டுக் கொண்டது போல் விட்டு அரசிதான்.''

''நான் வேண்டாம் என்றால் என்ன செய்வாய் பிரணத்தி.''

''மனசு சஞ்சலப்படும். என் விருப்பத்திற்கு மரியாதை யில்லையா என்று கோபப்படும்!'' என்று மனசிலிருப்பதை வெளிப்படையாகக் கூறினாள் பிரணத்தி.

சில நொடிகள் அந்தப் பக்கத்தில் இருந்து பதில் வரவில்லை. ''ஹலோ... என்று பிரணத்தி சந்தேகமாகக் குரல் கொடுக்க,

''ம்ம்... ம்... நான் லைன்லேதான் இருக்கேன். ஃப்யூச்சர் சாஃப்ட்வேர் கம்பெனியைப் பற்றி என்ன நினைக்கிறே?'' என்று மெதுவாக அவன் கேட்க,

''ஓ... அது ரொம்பப் பெரிய சாஃப்ட்வேர் கம்பெனியாச்சே. என்னோட என்ஜினீயரிங் காலேஜ்ல படித்த என்னோட சீனியர்ஸ் இரண்டு பேருக்கு கேம்பஸ் இண்டர்வியூலே அங்கே வேலை கிடைச்சு ஜாலியா செட்டில் ஆயிட்டாங்க. ஆமா, நீங்க ஏன் அதைப் பற்றிக் கேக்கறீங்க?''

அவளின் குவாலிபிகேஷனை அவன் நெஞ்சம் குறித்துக் கொண்டது.

பற்களால் உதட்டை அழுத்தியபடி, ''உனக்கு அங்கு வேலை செய்ய விருப்பமா?'' என்று இழுத்தான் அவன்.

''அப்ப நான் வேலைக்குப் போறதில் உங்களுக்குச் சம்மதமா? உங்களுக்கு அந்தக் கம்பெனியில் யாரையாவது தெரியுமா? நல்ல என்வயர்ன்மெண்ட் அங்க. நிறைய விஷயங்களைக் கத்துக்கலாம், அம்மா அப்பாவும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள்.''



பிரணத்தியின் குரலில் மகிழ்ச்சி கொப்புளித்தது. சம்மதம் கேட்டால் வேலையே வாங்கித் தருகிறேன் என்கிறான். அவளால் நம்பவே முடியவில்லை. அவள் எள் என்னும் முன் எண்ணெயாக நிற்கிறான்.

''நாளைக்குக் காலையில் மவுண்ட் ரோட், ஃப்யூச்சர் சாஃப்ட்வேரில் மிஸ்டர் குருமூர்த்தி என்பவரைப் போய்ப் பார், மற்றது அவர் சொல்வார்,'' என்றான் அவன் மிகச் சாதாரணமாக.

''நான் நினைச்சது போல் இல்லை நீங்கள், யூ ஆர் வெரி நைஸ். தாங்க்ஸ்!'' என்று முகம் மலரப் பதில் கொடுத்தாள், பிரணத்தி. பிறகு தொடர்ந்து,

''புடவை எடுக்கப் போனது பற்றி ஒன்றும் சொல்ல வில்லையே பிரணத்தி. பச்சை நிறப் புடவை கிடைத்ததா?'' என்று அவளிடம் அவளைப் பற்றிய சிறு பாதிப்பாவது இருக்கிறதா என்று அறிந்து கொள்ள வேண்டிக் கேட்டான் அவன்.

அங்கு நடந்த பெரும் கலாட்டாவையும், சகுனக் கேட்டையும் பற்றி ஏனோ அவனிடம் சொல்லத் தயக்கம் ஏற்பட்டது அவளுக்கு. அது கெட்ட சகுனம் என்று எண்ணி விட்டால்? அது அவனைச் சங்கடப்படுத்தினால்? பிரணத்திக்கு முன்பு எப்படியோ? இப்பொழுது அவனிடம் பேசப் பேச ஏதோ ஜென்ம ஜென்மமாய்த் தொடர்ந்து வரும் பந்தம் என்றே எண்ணத் தோன்றியது.

''கிடைக்கவில்லை. அதனால் ஆர்டர் செய்துவிட்டு வந்தோம். நெக்ஸ்ட் வீக் கிடைத்து விடும். சரி, வைக்கிறேன்,'' உடனே கட் பண்ணினாள் அவள்.

செல்போன் டிஸ்ப்ளேயில் வந்த பிரணத்தியின் வீட்டு போன் நம்பரைக் குறித்து வைத்தான் ஆகாஷ்.

## 7

மறுநாள் காலை ஒன்பது மணிக்கெல்லாம் பிரணத்தி ரெடியாகி விட்டாள். தூய வெள்ளை அக்கோபா வேலைப் பாடுடன் கூடிய சுரிதார், பல வண்ண டை அண்ட் டை துப்பட்டாவுடன் பிரணத்தியின் அழகு வெண் தாமரையாகப் பளிச்சிட்டது.

''பிரணா! காலையிலேயே எங்கே கிளம்பிட்டு இருக்கே?'' கொண்டையிட்டு கொண்டே சுப்ரஜா கேட்க,

''ஃப்யூச்சர் சாஃப்ட்வேர்ல எனக்கு இன்னைக்கு இன்டர் வியூன்னு நேத்திக்கே சொன்னேனே.''

''இன்னைக்கே இன்டர்வியூவா? இன்னும் மாப்பிள்ளை வீட்டுக்காரங்ககிட்டே இந்த விஷயத்தை நான் பேசவேயில்லை. அதுக்குள்ள அவசரப்பட்டா எப்படி, பிரணா? நீ எனக்கு டென்ஷனை ஏத்தறே.''

பிரணத்திக்கு வருணிடம் இருந்தே சம்மதம் கிடைத்து விட்டதே. பிறகு கவலை என்ன என்றிருந்தது. அம்மாவிடமோ வருணிடம் தான் பேசியதைப் பற்றிச் சொல்லத் தயக்கம்.

''இன்டர்வியூக்குத் தானேம்மா போறேன். வேலை கிடைத்தது என்றால், நான் வேலைக்குப் போறதைப் பற்றி அவர்களிடம் சொன்னால் போச்சு. அவர்கள் வேண்டாம் என்றால் வேண்டாம். இதுக்கு நீங்க ஏன் டென்ஷனாகறீங்க.''

''சரி, அப்ப இன்னைக்கு சாயங்காலமே அவங்ககிட்டே இது பற்றிப் பேசறேன்.''



''அம்மா! நீ காலேஜ் போற வழிதானே? என்னை டிராப் பண்ணிடுங்களேன்.''

''நான் காலேஜ் போகவில்லை. மியூசிக் அகாடமிலே இன்று ஒரு செமினார். அதற்குப் போகிறேன். அப்பாவைக் கேட்டுப் பார்.''

''எதற்கு அப்பாவைக் கேட்டுப் பார்க்கணும்?'' என்று கேட்டபடி வந்தார் ராஜ்குமார்.

''அப்பா! இன்னைக்கு ஃப்யூச்சர் சாஃப்ட்வேர்லே இன்டர் வியூன்னு சொன்னேனில்லை. அதான் அங்கே டிராப் பண்ணிடறீங்களான்னு கேட்கத்தான்.''

''ஓ... நீ ரெடி என்றால் உடனே கிளம்பு,'' என்றார் அவர்.

கையில் தன்னுடைய சர்டிபிகேட், பயோ டேட்டா, ப்ராஜெக்ட் அடங்கிய ஃபைலும் தோளில் கறுப்பு நிற லெதர் பேக்குடனும், அப்பாவுடன் காரில் ஏறினாள் பிரணத்தி.

வழியெல்லாம் அப்பாவிடம் இன்டர்வியூவில் என்னென்ன முறையில் எப்படிப் பதிலளிக்க வேண்டும் என்று ஒத்திகை பார்த்துக் கொண்டாள். அதற்குள் ஆபீஸ் வளாகமும் வந்து விட்டது. பிரணத்தி இறங்குகையில், ''ஆல் தி பெஸ்ட்!'' என்று சிரித்தபடி பிரணத்தியின் முதுகில் தட்டிக் கொடுத்தார் ராஜ்குமார்.

நான்கு மாடிக் கட்டடம் அது. முன்புறம் இயற்கைக்காக என்று விட்டு விட்டார்கள் போலும்.

பச்சைப் பசேல் என்று ஒரே செடிகள் மயம். செயற்கை நீர் ஊற்று. ஒரு மாடி உயரத்திற்குச் சென்று பூஞ்சிதறலாய்ச் சிதறியது கண்களுக்குப் புத்துணர்ச்சியைத் தந்தது. பூக்காத செடிகளை ஒரு இடமும் பார்க்க முடியவில்லை. வரிசையாக ஒரே உயரத்தில் வளர்த்துப் பராமரிக்கப்பட்டிருந்த செடிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறத்தில் பூத்துச் சொரிந்து கிடந்தன. 'குப்பை' ஒரு

சின்னத் துண்டுக் காகிதம் கூட அவள் கண்களில் தென்படவில்லை. சுற்றுப்புறத்தை ரசித்தபடி, பிரமிப்புடன் நடந்த பிரணத்தியை விழி இமைத்தால் கூட அவள் உருவம் மறைந்து விடுமோ என்று அஞ்சி இமைக்காமல் முதல் தளத்தின் கண்ணாடிச் சன்னல் வழியே பார்த்துக் கொண்டு நின்றான் ஆகாஷ். ரிசப்ஷனில் இவள் பெயர் சொன்னதும், ''எஸ்,எஸ். பிரணத்தி, மிஸ்டர் குருமூர்த்தி இஸ் வெயிட்டிங் ஃபார் யூ!'' என்று இனிமையாகக் கூறி, கூடவே வந்து அவளை அவரின் அறைக்கு அழைத்துச் சென்றாள் அந்தப் பெண்.

ஆபீஸ் உட்புறமும் பிரமாதம்தான். சின்னத் தூசு கூடத் தென்படவில்லை. ஆபீஸ் முழுவதும் குளிர்பதன வசதி கொண்டிருந்தது. வேலை பார்ப்பவர்கள் சோர்வடையக் கூடாது என்ற நினைப்பில் அவர்கள் வசதிக்காக இட நெருக்கடி இல்லாமல் ஒவ்வொரு கேபினும் விஸ்தாரமானதாக இருந்தது. மனதிற்கு உற்சாகம் அளிக்கும் விதத்தில் அமைந்திருந்த கலர் ஸ்கிரீனும் பிரணத்தியைப் பெரிதும் கவர்ந்தது.

குருமூர்த்தி இவளிடம் பிரமாதமாக ஒரு கேள்வியையும் கேட்டு விடவில்லை. இவள் எந்த வேலையில் வசதியாக உணர்வாள் என்றுதான் இரண்டு மூன்று தினுசுகளில் கேட்டார். கேள்விகள் கேட்கப்பட்ட விதம் மிகவும் வித்தியாசமாகப் பட்டது பிரணத்திக்கு.

மிகவும் மரியாதை! ஏன்? வருணின் வார்த்தைகளுக்கு இவ்வளவு மதிப்பா? அவன் மேல் பிரணத்திக்கு மரியாதை கூடியது. வேலைக்கு நாளைக்கே பிரணத்தியைச் சேரச் சொல்லி விட்டார்கள். பிரணத்திக்கு மலைப்புதான். தன்னுடன் படித்த சக மாணவிகள் ஃப்யூச்சர் சாஃப்ட்வேரில் வேலை கிடைக்காதா என்று ஏக்கத்துடன் அதில் தேர்ந்தெடுக்கப்படுவதற்காகத் தங்களைக் கஷ்டப்பட்டுத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கையில், இவளைத் தேடி, 'இந்தா பிடித்துக் கொள் வேலையை!



அதுவும் நீ இஷ்டப்படும் காலம் வரையில்!' என்று கையில் திணித்து விட்டுப் போனது, அவளைப் போதைகொள்ள வைத்தது.

டெலிபோனில் அவன் சொல்லும்போது கூட பிரணத்திக்குச் சிறிது சந்தேகம் இருக்கத்தான் செய்தது. அது எப்படி இவ்வளவு பெரிய நிறுவனம் வருண் சொன்னவுடன் இஷ்டப்படும் காலம் வரை வேலை செய்ய அனுமதி தரும் என்று.

அவனின் தொடர்பு பெரிய இடங்களில் எல்லாம் இப்படி உறுதியாக இருப்பது கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது.

முதல் முதலில் வருணைப் பார்க்கையில், தானுண்டு, தன் வேலையுண்டு இருக்கும் ரகம், குறுகின வட்டத்தில் தன்னை நிலைப்படுத்திக் கொண்டவன் என்று கணித்து வைத்திருந்தாள். அந்தக் கணிப்பு தவறோ என்று டெலிபோனில் அவனிடம் பேசுகையில் சில சமயம் தோன்றியது உண்டு. ஆனால் இப்பொழுது அந்தக் கணிப்பு தவறேதான் என்று முடிவே செய்து விட்டாள் பிரணத்தி.

பிரணத்தி வீடு வந்து சேரும்போது கடிகாரம் மதியம் ஒன்று என்று காட்டியது.

பிரணத்தியின் முகம் தாமரையாக மலர்ந்து கிடந்தது.

அவள் நினைத்தது நடந்து விட்டதே, அவள் அதிர்ஷ்டக்காரியேதான், கல்யாணத்திற்கு முன்பே அவளுடைய ஆசைகளை நிவர்த்தி செய்ய விழையும் கணவன் - யாருக்குக் கிடைக்கும் இந்த பாக்கியம்!

உடனே போனைக் கையில் எடுத்துத் தன் தோழிகள் இரண்டு மூன்று பேரிடம் பேசி, விஷயத்தைச் சொல்லி வெறுப்பேற்றினாள். செய்தி கேட்டவுடன் ''மைகாட்! நிஜம்மாவா?'' என்று வாய் பிளந்தாள் நிவேதிதா. மற்றொரு சிநேகிதியோ, ''கடவுள் ரொம்ப மோசக்காரர். நாங்கள் பிழைப்புக்கு வேலை தேடிட்டு இருக்கோம். ஃப்யூச்சர் சாஃப்ட்வேரிலே கூட நான்



இன்டர்வியூ போனேன். ப்ரொஜெக்ட் அசிஸ்டண்ட் போஸ்ட்டுக்கு. லாஸ்ட் ரவுண்ட் இன்டர்வியூவிலே குவாலிபை ஆகவில்லை. ஆமா, உனக்கு எத்தனை ரவுண்ட் கேள்விகள் வந்தது?'' என்று துருவ, பிரணத்தி தோழியின் வயிற்றெரிச்சலைக் கிளப்பாமல், ஏதோ பேசிச் சமாளித்தாள்.

அடுத்து அவள் விரல்கள் தாளம் போல மடமடவென்று ஆகாஷ் நம்பரைத் தட்டின.

''ஹலோ, நான்...'' என்று அவள் தொடர்ந்து பேசுமுன்,

''என்ன, சந்தோஷம்தானே!'' என்றது அவனது கணீர்க் குரல்.

''வந்து... ரொம்ப தாங்க்ஸ்!'' என் பிரண்ட்ஸுக்கு எல்லாம் ஒரே பொறாமை!'' கண்கள் மின்னப் பிரணத்தி சொல்ல,

''நீ ஒரு வார்த்தை சொல்... எல்லோரையும் வேலையில் சேர்த்து விடலாம்,'' என்றான் குறுஞ் சிரிப்புடன்.

''எனக்கு மக்கு மண்டுகமா, பத்துப் பதினைந்து ப்ரண்ட்ஸ் இருக்காங்க. எல்லோருக்கும் நாளைக்கே அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வந்துவிடுமா?'' குறும்புடன் பிரணத்தி சொல்ல,

'பக்'கென்று சிரித்து விட்டான் அவன். ஆண்மை நிறைந்த அந்தச் சிரிப்பு பிரணத்திக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

''நீங்க யார் மூலமா என் வேலைக்குச் சிபாரிசு செய்தீங்க? உங்க ரெகமண்டேஷனுக்கு அங்கே நிறைய மதிப்பு. பாஸ்ஸை உங்களுக்குப் பர்சனலாகத் தெரியுமா?'' என்று வியப்புக் கலந்த குரலில் கேட்க,


''அப்படியும் வைச்சுக்கலாம்!'' என்று பிடி கொடுக்காமல் அவன் பேச,

பிரணத்தி அதற்கு மேலே தூண்டித் துருவவில்லை. ''நேற்று அக்கா போன் பண்ணினா. நான் உங்ககிட்டே போன்லே பேசினேனா இல்லையான்னு அவளுக்கு ஒரே டென்ஷன்.''

''ம்.. ம்.. ம்..'' என்று மேலே என்ன சொல்வது என்று புரியாமல் மௌனமானான் ஆகாஷ்.



## 8



பிரணத்தி வேலைக்குச் சேர்ந்து வாரம் ஒன்றாகிவிட்டது.

சொன்ன தேதியில் ஆர்டர் செய்திருந்த புடவையும் வந்து விட்டது. புடவை நினைத்ததை விடவும் பிரமாதமாக வந்திருந்தது. சுப்ரஜா கூடச் சேலையின் அமைப்பில் பிரமித்துப் போனாள்.

ஆகாஷுக்கும் போன் செய்து, சேலையின் அழகைப் பற்றிச் சிலாகித்தாள் பிரணத்தி.

வேலை செய்யும் இடத்திலும், கம்பெனி சேர்மனுடன் நேரடியாக எந்த வேலைத் தொடர்பும் இல்லாததால் அவளுக்கு ஆகாஷைச் சந்திக்கும் வாய்ப்பே இல்லை.

ஆனால் தினம் தினம் காலையில் அவளின் வரவுக்காக, அந்த தரிசனத்திற்காக ஆகாஷ் தன்னுடைய அறையின் கண்ணாடி சன்னலில் காத்துக் கிடந்தான்.

பிரணத்தி டீமில் இரண்டு பெண்கள் சிநேகிதிகளாயினர். பெண்கள் மூவர் சேர்க்கையில் அரட்டைக்கும் ஊர் வம்புக்கும் கேட்பானேன்.

''நம்ம பாஸைச் சுத்திச் சுத்தி வருமே மோனா, அது இன்னைக்கு காலையிலேயே ஆபீஸுக்கு வந்தாச்சு, பார்த்தியா?'' என்றாள் காவ்யா.

''அய்யோ! அவ டிரஸ் பார்த்தியா? முன் பக்கம் எவ்வளவு டீப்பா இறங்கியிருக்குன்னு. ஆண்களைப் பார்க்க வரும்போது உடுத்தற டிரஸ்ஸா அது?'' இது மோகினி.

''யார்? நான் பார்க்கவேயில்லையே!'' என்று அறியாத் தனத்தில் பிரணத்தி சொல்ல,

''நீ கம்ப்யூட்டரில் அப்படியே முகத்தைப் பதிச்சுக்கோ, அப்புறம் அக்கம் பக்கம் என்ன நடக்குதுன்னு எங்கே தெரியப் போகுது!'' என காவ்யா கிண்டலடிக்க,

''அவன் நம்ம பாஸோட ஆள் பிரணா. பாஸ் அவளைத்தான் கட்டிக்கப் போறார் அப்படின்னு ஆபீஸ்லே பேச்சு.''

''ஓ...'' என்றாள் பிரணத்தி. இரண்டு பேரும் அமெரிக்காவில் சேர்ந்து படித்தவர்களாம். அது அப்படியே அவர் மேல் தொங்கிட்டுதான் நடக்கும். மானங்கெட்டது!'' என்று மோகினி சொல்ல -

''பொறாமையில் குதிக்காதே. உன்னோட நினைப்பு எனக்குத் தெரியாதா? அவரை பிராக்கெட் போட நீ டிரை பண்ணினது எனக்குத் தெரியாதுன்னா நினைச்சே!'' என்று கண்ணடித்துக் காவ்யா சொல்ல,

''ஒரு பக்க ஆசையின் பலன்?'' என்று சோகமாக அவள் சொல்ல, அவள் பாவனையில் பிரணத்திக்கும் காவ்யாவிற்கும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

பிறகு கொஞ்ச நேரம் வேலையில் சுறுசுறுப்பாக இருந்த பிரணத்தியைக் காவ்யாவின் மெல்லிய குரல் உசுப்பியது.

''பிரணா, ரைட் சைட் காரிடாரில் வந்து கொண்டிருக்கும் பெண்ணைப் பார். ரெட் கலர் டாப்ஸ். ப்ளாக் கலர் ஜீன்ஸ் தெரியுதா? அதுதான் அந்த மோனா. இவ்வளவு நேரம் பாஸ் ரூமில்தான் அம்மா இருந்தாங்க. அப்படி என்னதான் வெட்டி முறிச்சாங்களோ?'' கண்ணடித்தாள் அவள். நிமிர்ந்து பார்த்தாள் பிரணத்தி.

நவநாகரீக யுவதி. வெளுவெளுவென்ற அப்படி ஒரு நிறம். மிகவும் அழகாக இருந்தாள். இவர்கள் பேசியது போல உடையும் அவ்வளவு மோசம் இல்லை.



''வருங்கால முதலாளியம்மா!'' மனசு குறிப்பெடுத்துக் கொண்டது.

''ஜோடிப் பொருத்தமும் சரிதான். ஆனால் இப்படி அடிக்கடி ஆபீஸ் வந்து கொஞ்சிக் குலாவுவதுதான் எங்கள் எல்லோருக்கும் வெறுப்பைத் தருகிறது. சொந்த வாழ்க்கையை ஆபீஸ் டைம்க்கு அப்புறம் வெச்சுக்கலாம், இல்லையா? அனாவசியமா வேலையின்போது டைவெர்ஷன் நமக்கும் இருக்காதில்லையா?'' என்றாள் காவ்யா.

சட்டெனப் பிரணத்திக்கு ஏதோ தோன்ற -

''பாஸை இன்னும் நான் சந்திக்கவேயில்லை!'' என்றாள். சின்ன வயதில் இத்தனை சாதித்த சாதனையாளனைக் காணும் ஆவல் நிறைய இருந்தது.

''நேற்றுக்கூட இங்கே நின்று குருமூர்த்திகிட்டே பேசிகிட்டு இருந்தாரே, நீ பார்க்கவில்லை? பயங்கரச் சுறுசுறுப்பு அவர், இந்த நிமிஷம் இங்க இருந்தார்னா அடுத்த நிமிஷம் நாலாவது ப்ளோரில் அங்கு ஏதாவது வேலை சொல்லிக் கொண்டிருப்பார். எந்த ப்ளோரில் எப்ப ஆஜர் ஆவார்னு சொல்ல முடியாது. ஆனா இந்த ஒரு வாரமா இந்த செக்ஷனுக்கு வருவது குறைந்து தான் இருக்கு. குருமூர்த்தி ஃபுல் இன்சார்ஜ் என்பதால் இருக்கலாம்,'' என்று முடித்தாள் அவள்.

பிரணத்திக்குத் தன்னுடைய பாஸைக் காணும் ஆவல் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போனது. அவனுடைய மோனா விஷயம் தவிர மற்ற விஷயங்களை அவன் அணுகும் விதம் பற்றி மற்றவர்கள் ரசித்துத் தங்களுக்குள் பேசுவதைக் கேட்கும் போதும், மற்ற பெண்கள் அவனை 'ஹீரோ வர்ஷிப்' பண்ணுவதைக் காணும்போதும் அந்த ஆவல் அதிகமானது.

அப்படி எல்லாரையும் அடித்துப் போடும் சிறப்பு அம்சம் என்னவோ என்று சிந்தனையில் ஊறிப் போனாள். நாட்கள் இப்படியாக ஓடியன.

# 9



அன்று மாலையில் பிரணத்தியின் தோழி வீணாவின் கல்யாண நிச்சயதார்த்தம் பெரிய ஹோட்டலில் நடை பெறவிருந்தது.

அம்மா காலேஜில் இருந்து வந்தவுடனேயே கிளம்பி விட்டாள் பிரணத்தி.

''பிரணா! வரும்போது அப்பாவைப் பிக்கப் பண்ணச் சொல்லுங்கன்னு சொன்னீயே, எத்தனை மணிக்கு வரச் சொல்றது?''

''இல்லம்மா, ரம்யா கூடத்தான் போறேன். வரும்போது அவளே டிராப் பண்ணிடறேன்னு சொன்னாள்.''

''அந்த சந்திர ஹாரமாவது கழுத்தில் போட்டுக்கோயேன். உன் கழுத்தில் கிடப்பது ரொம்ப சிம்பிளா இருக்கு.''

எதிரில் இருந்த முழுநீளக் கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள் பிரணத்தி.

அரக்குச் சிவப்பு வண்ணப் புடவை, தங்கக் கம்பி ஜரிகைகள் உடம்பு முழுவதும் ஊடுருவியிருந்தன. அதற்கு மேட்சாக சிவப்புக் கற்கள் கோர்த்த தங்க லாக்கெட் வளையல், கம்மலும் பொருத்தமாக இருந்தது. முகத்தில் மெலிதான மேக்கப். இயற்கையிலேயே சிவந்த உதடு லிப்ஸ்டிக்கில் மேலும் சிவந்தது. காஜலில் மேலும் விரிந்த அழகிய கண்கள். நெற்றியில் அரக்கு நிறப்பொட்டு, கூந்தலில் நெருக்கமாகத் தொடுத்த மல்லிகைச் சரம்.



''போங்கம்மா இதுவே ஜாஸ்தியோன்னு நினைச்சுகிட்டு இருக்கேன்!'' என்று சிணுங்கியபடி அவள் சொல்லவும் ரம்யா வீட்டிற்குள் நுழைந்தாள்.

தாயின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டுப் பட்டுப் புடவை சரசரக்கச் சின்னதாக அவள் அன்று அணிந்திருந்த கொலுசும் கூடவே சலசலக்க ரம்யாவுடன் காரில் ஏறினாள் பிரணத்தி.

வீணாவின் அப்பா பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்ட். அதனால் பிரபலமான பிரமுகர்கள் நிறையப் பேர் வந்திருந்தார்கள். கிட்டத்தட்ட கல்யாணம் போலவே நிச்சயதார்த்தத்தையும் நடத்தி இருந்தார்கள். பிரணத்தியின் செட்டில் எல்லோரும் வந்திருந்தார்கள்.

கால்கட்டு இல்லாத அந்தக் கல்லூரிச் சிட்டுகளின் குதூகலக் குரலும், சிரிப்புச் சத்தமும் அரட்டையும், கிண்டலும் எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்தன. பிரணத்தியிடமும் நிறையக் கிண்டல்.

விழாவிற்குக் கடைசியாக வந்தவன் ஆகாஷ். அவனுக்கு வரவேற்பு மிகவும் பிரமாதமாக இருந்தது.

பிரணத்தியும், அவள் தோழிகளும் சாப்பிடப் போய்விட, அன்றும் பிரணத்தி ஆகாஷைச் சந்திக்கும் வாய்ப்பை இழந்தாள்.

ஆனால் ஆகாஷின் கூரிய கண்களில் இருந்து பிரணத்தி தப்பவில்லை. அப்படிக் கண்டு விட்டவனின் உதடு புன்னகை யில் ரகசியமாய் விரிந்தது.

தேவதை. முதல் முறையாக அவளை இத்தனை அலங் காரத்துடன் பார்க்கிறான். வியந்தான். இதுவரை எந்த ஒரு பெண்ணும் அவன் மனதில் சின்னச் சலனத்தையும் ஏற்படுத்திய தில்லை. ஆனால் பிரணத்தியினிடம் இருந்து ஏதோ ஒன்று அவனைப் பலமாக அவள் புறம் ஈர்த்தது மறுக்க முடியாத



உண்மை. காதல் தன் வேலையைப் படு தீவிரமாக அவனிடம் காட்டியது. அவளைப் பார்க்கும் பொழுதெல்லாம், பார்வையை அவளிடம் இருந்து விலக்குவது கடினமாயிருந்தது. அது சுகமாகவும் இருந்தது.

சாப்பிடும்பொழுது நிவேதிதாதான் அன்று அட்டெண்ட் பண்ணிவிட்டு வந்த இன்டர்வியூவைப் பற்றி மிகுந்த சுவைபட எடுத்துக் கூறிக் கொண்டிருந்தாள்.

அங்கு வேலை கிடைக்காது என்று தெரிந்த பிறகு, அவள் மனதைத் தேற்றிக் கொண்ட விதம் எல்லோரையும் சிரிக்க வைத்தது.

''என்னோட தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற வேலை இது கிடையாது. போடா மடையா என்று சொல்லிவிட்டு ஓடி வந்துவிட்டேன்!'' என்று சொல்லிக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

''ஏய் பிரணத்தி, உன்னோட அவர் பத்தி நீ இன்னும் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை,'' என்று கீர்த்தனா பிரணத்தியின் புடவை முந்தானையை விளையாட்டாக இழுக்க, பஃபே முறையில் பரிமாறப்பட்ட உணவை, மிகுந்த கலாட்டாக்களுக்கிடையே சாப்பிட்ட பிரணத்தியின் புடவையில் கீர்த்தனா இழுத்த இழுப்பில் அவள் அப்பொழுது எடுத்துக் கொண்டிருந்த சிக்கன் மஞ்சூரியன் லேசாக ஆட்டம் கண்டு பின் புடவையில் சரிந்தது.

''ஐ யம் சாரி!'' என்று திருப்பித் திருப்பிச் சொன்னதையே சொன்ன கீர்த்தனா தன் கைக்குட்டையைக் கொண்டு சுத்தம் செய்ய முனைந்தாள்.

உடனே கழுவவில்லை என்றால் கறை புடவையின் அழகைப் பாழாக்கி விடும் என்று புரிந்து பிரணத்தியின் கண்கள் பாத்ரூமைத் தேடின.



''பிரணத்தி! உன் அழகுக்குத் திருஷ்டி கழிச்சாப்ல ஆயிடுச்சு. ஆனா காஸ்ட்லி புடவை!'' என்று இழுத்தபடி கவலையுடன், நிவேதாவும் தன் பங்குக்குக் கைக்குட்டையால் சுத்தம் செய்ய,

''பிரணா, பாத்ரூம் போய்க் கழுவி விட்டு வரலாம். ஹாலில் இருந்து வெளியே இடப்புறம் பாத்ரூம் உள்ளதாம்,'' என்று ரம்யா சொல்ல.

''நீ சாப்பாட்டை கண்டினியூ பண்ணு. நான் நிமிடத்தில் வாஷ் பண்ணிட்டு வந்துடறேன்,'' என்று பிரணத்தி துணையை மறுத்தாள்.

மெல்ல ஹாலை விட்டு வெளியே வந்தாள் பிரணத்தி. உள்ளே இருந்த ஆர்ப்பாட்டம் வெளியே இல்லை. அமைதியாக இருந்தது. ரம்யா சொன்னது போல இடப்புறம் திரும்பினாள் நீண்டதொரு காரிடார் அது. அமைதியும், பழக்கமில்லாத மஞ்சள் விளக்கு வெளிச்சமும் பிரணத்திக்குச் சிறிது அச்சத்தைக் கொடுத்தது. தனக்குத் தானே தைரியம் சொல்லியபடி பிரணத்தி புடவைக் கொசுவத்தைச் சற்று உயர்த்திப் பிடித்தபடி மெதுவாக முன்னேறிச் சென்றாள்.

அவள் அப்படி தனியாக ஆட்கள் நடமாட்டமில்லாத பக்கமாகச் சென்றதை இரு கண்கள் நோட்டமிட்டன. பெண்கள் டாய்லெட் சற்றுத் தள்ளி இருந்த அறையின் கதவை லேசாகத் திறந்து கொண்டு அவள் நடந்து வருவதையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் கண்களில் வெறியிருந்தது.

பெண்களுக்கு என்று பாதை குறி போட்டு இருந்த அந்தக் கதவைக் கொஞ்சம் தள்ளி உள்ளே நுழைந்தாள் பிரணத்தி. இங்கு தனியாக வந்திருக்கக் கூடாது என்று அப்பொழுது புரிந்தது அவளுக்கு. அவள் அறியாமல் நெஞ்சம் தடதடத்தது. இங்கிருந்து வேகமாகச் சென்று விட வேண்டும் என்று உள்ளுணர்வு சொன்னது. 'டப்' திறந்து கர்ச்சிப்பில் தண்ணீர் நனைத்து அவள் வேகவேகமாகக் கறையைக் கழுவ,

சட்டென்று அவளுக்குப் பின்புறம் இருந்து ஒரு கை நீண்டு அவள் வாயைப் பொத்தி அவளைத் தன் புறம் திருப்பியது.

நொடியில் பிரணத்தியின் அழகு முகத்தில் வியர்வைத் துளிகள் வியாபித்தன. கத்தக்கூட முடியாமல் அவள் வாய் மூடப்பட்டது. ஒரு வினாடி அதிர்ந்து செய்வதறியாமல் மருண்டவள் தன் பெண்மை பாதிக்கப்படப் போகிறது என்றதும் வெகுண்டாள்.

கைமுட்டியை இறுக்கி வேகமாக அவன் வயிற்றுப் பகுதியை நோக்கிக் குறி வைத்தாள் பிரணத்தி. ம்மா என்று முனகினான் அவன். வலி ஒன்றும் அந்தக் கொடிய வாலிபனின் பிடியைத் தளர்த்தவில்லை. மேலும் அவளைத் தன்னுடன் இறுக்கி அணைத்தான். நன்றாகக் குடித்திருப்பதை அறிய முடிந்தது. பிரணத்தி தன் நீண்ட விரல் நகங்களால் அவன் தாடையைக் கீறினாள்.

நெஞ்சில் பொங்கிய பயத்தில் கை கால்கள் நடுங்கத் தொடங்கின. துவண்டு விழும் நேரம் இதுவல்ல, போராட வேண்டும், இல்லை என்றால்... நடுங்கும் பற்களை அழுந்தக் கடித்தபடி, தன் பலத்தை எல்லாம் திரட்டி அவன் நெஞ்சில் கை வைத்து விந்தித் தள்ளினாள். வெற்றியும் கண்டாள். தடுமாறி விழுந்தான் அவன்.

மடமடவென்று அங்கிருந்து வாசல் வரை ஓடி வந்த பிரணத்தியை மீண்டும் அவன் தாவி வந்து கைப் பிடித்து இழுத்து அவனுடன் சுருட்டினான். திமறி விடுபட்ட பிரணத்தியின் ரவிக்கை கைப் புறம் கிழிந்தது.

மீண்டும் வழியை அடைத்தபடி வேறு எங்கும் அகல முடியாதபடி அவள் அவனிடம் போராடும் வலிமையையும், தைரியத்தையும் இழந்த பிரணத்தி கத்துவதற்கு வாயைத் திறந்தாள். சட்டென்று அவள் வாயை மறுபடி பொத்தினான் அவன்.



வெறியுடன் ஆக்ரோஷத்துடன் அவன் அவளை நெருங்க மூச்சுக்கூடச் சீராக வரவில்லை பிரணதிக்கு. மூச்சு இழுக்கையில் பயத்தில் திணறியது.

பிரணத்தியை ரொம்ப நேரமாகக் காணவில்லையே என்று ரம்யா என்கேஜ்மெண்ட் ஹாலில் இருந்து பாத்ரூமிற்கு வந்து கதவைத் தட்டினவள் உள்ளே பிரணத்தியின் போராட்டத்தையும், நிலைமையையும் கண்டு எல்லையில்லாத அதிர்ச்சியடைந்து வீல் என்று கத்திக் குரல் கொடுத்தாள்.

ஆகாஷைக் கண்டு கொண்டு அவனிடம் பெரும் புள்ளி ஒருவர் விடாமல் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருக்க, நிதானமாகச் சிறிது நேரம் பேசிவிட்டுத் திரும்பினவனின் கண்கள் கூட்டத்தில் பிரணத்தியைத் தேடின. எங்கும் காணாததைக் கண்டு அவசரமாகச் செல்ல வேண்டும் என்று உணவை மறந்து விடை பெற்றுக் கொண்டு கிளம்பினான்.

இன்னும் ஒரு முறை அவள் தரிசனத்திற்காக உள்ளம் ஏங்கியது. அவள் ஹோட்டல் வளாகத்தைத் தாண்டும் முன் கண்டு பிடித்து விடலாம் என்ற நோக்கத்தில் ஹாலை விட்டு வெளியே வந்தவன் காதுகளில் மிக மெல்லியதாக ரம்யாவின் கூக்குரல் கேட்டது.

ஏதோ ஆபத்து என்று அந்தக் குரல் சங்கதி சொல்லிற்று. என்னவோ, யாருக்கோ என்று தாவிக் குரல் வந்த திசையை நோக்கித் திரும்பி ஓடியவன் கண்ட காட்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்தான். அவன் போன அதே நிமிடம் பிரணத்தி மூச்சுவிட முடியாமல் மயங்கிக் கண்கள் செருக, கால்கள் வலு விழந்து விட, சரிந்தாள். அந்தக் காமுகன் அவள் கீழே விழாமல் தன் மேல் சரித்துக் கொண்டு உதடு கோண, கண்களில் வெறியுடன் பிரணத்தியின் முகம் நோக்கிக் குனிந்து கொண்டிருந்தான்.

ரம்யாவின் ஆவேசமான குத்துக்கள் சின்னக் கொசுக்கடி போல அவன் உணர்ந்தான்.



அவ்வளவுதான். ஆகாஷுக்குத் தான் படித்த படிப்பு மறந்தது. தன் பதவி மறந்தது. தன்னவளின் நிலைமை அறிந்து தன்னை மறந்தான். அந்தக் கொடியவனின் பிடியில் இருந்த பிரணத்தியைப் பலம் கொண்டு பிடித்து இழுத்து ரம்யாவின் மேல் சரித்து விட்டவன், கொடியவனின் கை எதிர்த்து ஒரு முறை கூட ஓங்கி விடாதபடி மின்னலெனத் தன்னுடைய வலிய கரத்தினால் அடித்து முறித்து விட்டான்.

பெண் அவளிடம் காட்டிய அந்தக் கொடியவனின் வீரம் ஆண்மை நிறைந்த ஆகாஷின் வீரத்தின் முன் தொய்ந்தது.

மூக்கில் ரத்தம் வழிய, தலையில் ரத்தம் வழிய, கண்கள் பொங்க, மேலும் மேலும் விழுந்த அடிகளைத் தாங்க முடியாமல், அவன் தள்ளாடிக் கீழே விழ, ஆகாஷ் மேலும் நிறுத்தாமல் அவனைக் கொன்றே விடும் நோக்கத்தில் கண்களில் கனல் புகைய, கை ஓங்க,

ரம்யா பிரணத்தியைப் பிடித்தபடி, ஆகாஷ் கைகளைத் தடுத்தாள்.

''ப்ளீஸ் விட்டுடுங்க. இவன் செத்துகித்துப் போய்விடப் போகிறான். அப்புறம் காப்பாற்ற வந்த உங்களுக்கும் கஷ்டம், முதலில் இவளைக் கவனிக்க வேண்டும். ப்ளீஸ்...'' என்று சுயநினைவில்லாமல் இருந்த பிரணத்தியைக் காட்ட,

ஆகாஷின் முழுக் கவனமும் அவளிடம் திரும்பியது. அவனின் தேவதை இருந்த கோலம் அவன் நெஞ்சைக் கசக்கியது. 'சட்' என்று அவளைத் தூக்கிக் கொண்டு அருகில் கிடந்த சோபாவில் இருத்தி, தன்னுடைய கைக்குட்டையை நீரில் நனைத்து அவள் முகத்தைத் துடைத்தான். அவள் மெல்ல அசைவதைக் கண்டவுடன், ''நீங்கள் இனிக் கவனமாகப் பார்த்துக் கொள்வீர்கள் இல்லையா?'' என்று கேள்வி கேட்டு ரம்யாவை நிமிர்ந்து பார்த்தான். அவள் ஒன்றும் புரியாமல் நிற்கவும், ''அவர்கள் விழித்தவுடன் நேரத்தை விரயம்



செய்யாமல், உடனேயே இங்கிருந்து அகன்று வீட்டுக்குச் சென்று விடுங்கள். இனி நீங்கள் இங்கே இருக்க வேண்டாம்!'' என்றவன், ஒரு முறை பிரணத்தியை அவளின் நலத்தைக் கவனித்தவன், பின்பு அங்கிருந்த டெலிபோனை நாடினான். எல்லாம் சில நிமிடங்களில் நடந்து முடிந்திருந்தது.

தகவல் சொல்லி போலீசை வரச்சொல்லி வேண்டிய ஏற்பாடுகள் செய்தான். தரையில் அசைவின்றிக் கிடந்தவனைப் பார்க்கையில் ஆகாஷின் ரத்தம் கொதித்தது. என்ன செய்ய நினைத்து விட்டான்? அதுவும் யாரை? நினைக்க நினைக்க அவன் நிதானத்தை இழந்தான்.

பிரணத்தி வேறு யாருக்கோ நிச்சயிக்கப்பட்ட பெண் என்பது நிறையச் சமயங்களில் அவனுக்கு மறந்தது.

## 10

மகள் வீடு வந்து சேர்ந்த கோலத்தைப் பார்த்தவுடன் சுப்ரஜாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

ரம்யா விஷயத்தை விளக்க, கலங்கிய கண்களுடன் பிரணத்தி தாயின் நெஞ்சில் சரணடைந்தாள். ''அந்தப் புதியவர் சமயத்திற்கு வந்து அந்த ரௌடியைக் கவனித்திரா விட்டால் நிலைமை கஷ்டம் தான் ஆன்ட்டி.''

''விஷயம் வெளியே வேறு யாருக்கும் தெரியாமல் பார்த்துக் கொண்டார் ஆன்ட்டி. உடனே எங்களை அங்கிருந்து போகச் சொல்லி விட்டார். வேறு யாராவதாக இருந்தால் இன்னும் நாலைந்து பேரைக் கூட்டி வந்து அவனை அடித்து நாற்பது

பேருக்கு ஒரு காட்சியை உருவாக்கிக் காட்டியிருப்பார்கள். நல்ல மனிதர். என்னவோ தன் வீட்டுப் பெண்ணுக்கு வந்த துன்பம் மாதிரி துடித்துப் போய் விட்டார். ஸ்ட்ரேன்ஜ்மேன்!'' என்றாள்.

பிரணத்தியை விடவும் சுப்ரஜா நொறுங்கிப் போய் விட்டார். தன் சின்னச் செல்லப் பெண் எப்படிப் பயந்து நடுங்கிப் போயிருப்பாள். எப்படித் தவித்துப் போயிருப்பாள் என்று நினைத்து, நினைத்து அழுதது அந்தத் தாயுள்ளம்.

வீட்டிற்கு வந்தவுடன் விஷயம் கேள்விப்பட்ட ராஜ் குமாரும் 'ஷாக்' அடித்தது போல விரைத்தார். விஷயம் விபரீதமாகி விடவில்லை என்ற போதும் இந்த மாதிரி கஷ்டங்களைத் தன் மகள் சந்திக்க வேண்டியிருக்கிறதே என்ற கவலைதான் அதிகம்.

ஒன்றும் ஆகவில்லைதான். ஆனாலும் மனதளவில் பிரணத்தியின் பாதிப்பு எந்த அளவில் இருக்கும். இதனால் எதிர்கால வாழ்க்கையில் பாதிப்பு இருக்குமா என்று குழம்பினர் அந்த தம்பதியர்.

குளித்து உடை மாற்றியபடி வந்த பிரணத்தி எதிர்பாராமல் நடந்த நிகழ்ச்சியில் தன்னைவிட தன் பெற்றோர் மிகவும் மன உளைச்சலில் இருப்பதைக் கண்டு தன்னை நிதானித்துக் கொண்டாள். தொடக்கத்தில் இருந்த பதட்டமும் பயமும் பெருமளவு குறைந்து விட்டிருந்தது.

வீட்டிலேயே இருந்தால் நினைவுகள் தாக்கம் மகளுக்கு அதிகம் இருக்குமோ என்று எண்ணி மறுநாள் வழக்கம் போல பிரணத்தியை வேலைக்கு சுப்ரஜாவே கொண்டு போய் விட்டு வந்தார்.

கல்யாணம் நிச்சயமான தினத்திலிருந்து நடக்கும் நிகழ்ச்சிகள் ஒன்றும் அந்தத் தாயுள்ளத்திற்குப் பிடிக்கவேயில்லை.



என்னவோ நடக்கப் போகிறது என்று அவள் உள்ளுணர்வு எச்சரிக்கை விடுத்தது.

இரண்டு நாட்கள் பிரணத்தியை அலுவலகத்தில் தானே கொண்டு போய் விடுவதும், பின் தானே அழைத்து வருவதுமாய் இருந்த சுப்ரஜா பெண் நார்மலாகவே எந்த பாதிப்பும் இன்றி சகஜமாக இருக்கிறாள் என்று புரிந்த பின் தான் பிரணத்தியைத் தனியே பாதுகாப்பின்றி அனுப்பினார்.

சுப்ரஜா உள் ரூமில் தீஸிஸ் ஏதோ சீரியஸாக எழுதிக் கொண்டிருக்க, பிரணத்தி வருணுக்குப் போன் செய்ய டெலிபோனை எடுத்தாள்.

அவள் "ஹலோ" என்றதும்தான், தாமதம்! உடனே, "பிரணத்தி சுகம்தானே, ஆர் யூ ஆல்ரைட்?'' என்று வேகவேகமாகக் கேட்டவன் குரலில் உணர்ச்சி கொப்புளித்ததைப் பிரணத்தியால் உணர முடிந்தது.

இதற்கு முன்னாலும், இதே போன்ற அவனின் உணர்ச்சி மயமான குரல், அவள் கேட்ட மாதிரி இருந்தது.

எதிர்ப்புறத்தில் சலனம் எதுவும் இல்லாமல் போகவே,

''பிரணா, இஸ் எனிதிங் ராங்? இரண்டு நாட்கள் நீ என்னிடம் பேசவில்லை. ஞாபகமிருக்கிறதா?'' என்று கேட்ட அவன் குரல் நிதானமடைந்திருந்தது.

அம்மா, அப்பா, கலவரப்பட்டதுபோல், அவனையும் கலவரப்படுத்த நினைக்காமல் விஷயத்தை மறைத்து மற்ற விஷயங்களைப் பற்றி அவனிடம் பேசினாள் பிரணத்தி.

நாட்கள் டெலிபோன் பேச்சில் சுகமாகப் பறந்தன. இடையில் பிரணத்தியின் நலம் விசாரிக்க வந்த ரம்யா. பிரணத்தி வெகுவாக நிதானமடைந்திருப்பதில் திருப்தியடைந்தாள். கூடவே பிரணத்தியிடம் ஹோட்டலில் காப்பாற்றிய மனிதனைப் பற்றியும் சிலாகித்துச் சொன்னாள்.



''பிரணா அந்த மனிதனுக்கு உன்னிடம் ஏதோ பற்றுதல் இருக்க வேண்டும். இல்லை என்றால் போன ஜென்ம பந்தமோ... ஏதாவது இருக்குமோன்னு எனக்குச் சந்தேகமா இருக்கு.''

சோபாவில் அமர்ந்திருந்த ரம்யாவின் தலையைச் செல்ல மாகத் தட்டியபடி அவளருகே அமர்ந்த பிரணா,

''எந்த ஒரு நல்ல மனிதனும் குற்றம் கண்டு பொறுக்க மாட்டான். பாராட்டப் பட வேண்டிய விஷயம்தான். ஆனா அதைப் போய்ப் பற்றுதல், பூர்வ ஜென்ம பந்தம் என்று என்ன உளறல் ரம்யா?''

''பிரணா! உனக்கு என்னைப் பற்றி நல்லாத் தெரியும். அனாவசியமான வம்பு பேசுவது எனக்குப் பிடிக்காது. அதனால் நான் இப்ப சொல்றதும் வம்புப் பேச்சுக் கிடையாது. சத்தியமாகச் சொல்லுவேன். அந்த மனிதன் உனக்கு ஏற்கனவே அறிமுகமானவராக இருக்கும். உன்னிடம் தன் இதயத்தைப் பறி கொடுத்தவராகக் கூட இருக்கலாம். அந்தக் கண்கள், அந்தப் பதட்டம், அந்த வீரம். எல்லாம் தன்னுடையவள் ஆபத்திலிருக்கும்போது மட்டுமே ஒரு ஆண் மகனிடம் இருந்து வெளிப்படுவது.''

''உன்னைப்போல் மனிதர்களின் மனோதத்துவம் படித்தவர்கள்தான் பெரும்பான்மை மனிதர்களைக் கேள்விகள் கேட்டே குழப்புவது ரம்யா.''

சுப்ரஜா ட்ரேயில் டீ, பிஸ்கெட் அடுக்கி வைத்தபடி வந்து டீபாயில் வைத்து இருவரையும் சாப்பிடச் சொல்லி, தானும் ஒரு டீ கோப்பையைக் கையிலெடுத்து சோபாவில் அமர்ந்தார்.

''என்ன ஆன்ட்டி இளைச்சாப்ல தெரியறீங்க!'' என்றாள் ரம்யா.

''பிரணத்திக்கு இப்ப நடக்கற நிகழ்ச்சிகளை எல்லாம் நினைச்சுப் பார்த்தா ஒரே பயமா இருக்கு. ஏதோ கெட்ட



கிரஹம் வந்து அவளைப் பாடாப்படுத்தறது மாதிரி; கல்யாண நிச்சயமான சமயத்துல இந்த மாதிரி சம்பவங்கள் நடப்பது, ஏதோ அபசகுனம் மாதிரி. இந்த நினைப்பே என்னைக் குடையுது. இதில் உடம்பை யார் கவனிக்கிறா?'' சலித்தபடி சுப்ரஜ பேச,

ரம்யா அவளுக்குத் தெம்பு ஏற்படும் வரை கொஞ்ச நேரம் இருந்து பேசிவிட்டுச் சென்றாள்.

## 11



குருமூர்த்தி பிராஜெக்ட் விஷயமாகப் பிரணத்தியை மூன்றாவது மாடிக்கு அனுப்ப, அங்கு பிரணத்தி, சம்பந்தப் பட்ட மனிதனுடன் பேசி, சில குறிப்புகள் தன்னுடைய நோட்டில் குறித்துக் கொண்டு, எதிர்ப்பட்ட காலேஜில் தன்னுடன் படித்த சீனியருடன் சிறிது நேரம் பேசிவிட்டு மீண்டும் கீழ்த் தளத்திற்கு வர லிப்டுக்குக் காத்திருந்தாள்.

காலியாக வந்தது லிப்ட். இவள் உள்ளே நுழைந்து லிப்ட் கதவு மூடும் சமயம், புயல் போல் உள்ளே நுழைந்தான் ஒரு நெடிய மனிதன். எதிரே பிரணத்தியைக் கண்டதும் அதிர்ச்சியோ, ஆச்சரியமோ ஏதோ ஒன்று அவனிடம் தெரிந்தது. அதை அவளால் இனம் கண்டுபிடிக்க முடியவில்லை.

பிரணத்தியின் கண்கள், அவனுடைய கண்களைச் சந்திக் கையில் அந்தக் கண்கள் அவளிடம் ஏதோ ஒரு செய்தியைச் சொன்னது போல் இருந்தது.

லிப்ட் கீழே ஒவ்வொரு ப்ளோராக இறங்கியது. இருவரின் கண்களும் பார்வையை மீட்டுக் கொள்ளவில்லை. அவனைப்

பிரணத்திக்கு எங்கோ, எப்போதோ பார்த்தது போல் இருந்தது. அவனுடைய பார்வையின் தீவிரத்தில் நெஞ்சம் படபடக்கத் தொடங்கியது. இனம் புரியாத கூச்சத்தில் பார்வையைத் தழைத்தாள்.

மீண்டும் நிமிர்ந்து பார்க்கையில் இன்னும் அவன் அங்குலம் அங்குலமாக அவளையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும், பிரணத்திக்கு மெலிதாகக் கோபம் எட்டிப் பார்த்தது. அவனைக் கண்டு காரணம் அறியாமல் படபடக்கும் தன்னைக் கண்டா? இல்லை, அவனின் பார்வையைக் கண்டா என்று தான் புரிந்து கொள்ள முடியவில்லை.

அதற்குள் கீழ்த்தளம் வர, லிப்ட் கதவும் திறந்தது. விழுந் தடித்துக் கொண்டு வெளி வந்தாள் பிரணத்தி. எதிலிருந்தோ தப்பித்து வந்தது மாதிரியிருந்தது.

''ஏய்... என்ன கடைசியில் நம்ம ஹீரோவைப் பார்த்தாச்சா?'' என்று பக்கத்தில் இருந்து வந்து குரலில் திடுக்கிட்டாள்.

''எங்கே? எங்கே? இன்னும் இல்லையே!'' என்ற ஆசையில் பக்கத்தில் இங்கேதான் இருக்கிறானா என்று பரபரப்புடன் கண்களைச் சுழலவிட,

''பிரணா, நிஜமா தெரியாதா?'' என்று கண்களை விரித்த மோகினி, ''உன்னுடன் லிப்டை விட்டு வெளிவந்த அவரை யார் என்று நினைத்தாய்?'' என்று கேள்வி கேட்டாள்.

பிரணத்தியின் தொண்டையில் இருந்து அவளறியாமல் ''ங்ங்கா...'' என்ற சத்தம் உண்டானது.

''அடக் கடவுளே! அவனா? அவனுக்குத் தானே புரிந்திருக்க வேண்டியது. இப்படித் தோழி சொல்லித் தெரிய வேண்டியிருக் கிறதே. அந்தக் கம்பீரம், தோரணை, பார்வை எல்லாம் இவ்வளவு பெரிய நிர்வாகத்தை நிர்வகிக்கும் திறமையைப் பறைசாற்றத்தான் செய்தன.



அவன் பார்த்த பார்வையின் அர்த்தம் மட்டும் பிரணத்திக்குப் புரியவில்லை.

இல்லை, அது அவள் ஊகம்தானோ?!

''என்ன ஆச்சு?'' என்று புருவத்தை வளைத்துக் கேட்க.

''ஒன்றுமில்லைப்பா!'' என்று முணுமுணுத்தபடி அங்கிருந்து அகன்று தன்னுடைய கேபினுக்கு வந்தாள். உட்கார்ந்து வேலையைத் தொடங்கும்போது அவன் உருவம் அவள் நெஞ்சில் வந்து மோதியது.

ச்சே.. இது என்ன மடத்தனம் என்று தலையைக் கைகளினால் தட்டிக் கொண்டு வலுக்கட்டாயமாக வேலையில் கவனத்தைத் திருப்பினாள் பிரணத்தி. அதற்குள் காவ்யாவும் மெல்ல முணுமுணுத்தபடி பிரணத்தியிடம் பேச, ஒன்றும் புரியாமல் பிரணத்தி, ''என்ன விஷயம்?'' என்று கேட்க,

''எல்லாம் இந்த மோகினியால் வந்தது. வர வர ரொம்ப வால்தனம் பண்ணுறா'' எரிச்சலில் தொண்டையைச் செருமியபடி,

''ஒரு லெட்டரைக் கொண்டு வந்து, எனக்கு லாரன்ஸ் கொடுத்தார்ன்னு சொல்லி வந்து கொடுத்தாள். படிச்சா லவ் லெட்டர். கோபத்துலே அந்த மனுஷனைப் போய் வாய்க்கு வந்தபடி திட்டிட்டு வந்தேன். அவர் என்னடான்னா, ஐயோ எனக்குக் கல்யாணமாகி ஐந்து வயசில் பொண்ணு இருக்கா. நான் அந்த மாதிரி ஆள் இல்லைன்னு ஒரே புலம்பல். அப்புறம் இந்த மோகினி, அங்கே ஓரத்தில் என்னை வேடிக்கை பார்த்துக் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்குது. சந்தேகம் வந்து கேட்டா, அம்மா இவளே லெட்டரைக் கிறுக்கிட்டு வந்து விளையாடியிருக்கா, ஜாலிக்காம். ஆபீஸ்லே வேலை வேலைன்னு போர் அடிக்கு தாம். எதிலே விளையாடறதுன்னு விவஸ்தை இல்லை. எனக்கு மானம் போச்சு!''

பிரணத்திக்குச் சிரிப்பு வந்தது. ''நீயும் சேர்ந்து சிரிக்காதே பிரணா, எனக்குக் கோபம் கோபமா வருது. பாவம், அநியாயமா



அந்த மனுஷனைத் திட்டிட்டேன். திருதிருன்னு முழிக்கும் போதே கொஞ்சம் சந்தேகமாகத்தான் இருந்தது!'' என்று காவ்யா புலம்பினாள்.

## 12



அன்று ஞாயிற்றுக் கிழமை சாயங்காலம்.

ராஜ்குமாரும், சுப்ரஜாவும், ராஜ்குமாருடன் வேலை பார்ப்ப வரின் பையன் திருமண வரவேற்புக்குச் சென்றிருந்தார்கள்.

பிரணத்தி வீட்டில் பொழுது போகாமல், பிலிமஸ் டுடேவைப் புரட்டிக் கொண்டிருந்தாள். மனசு வருணின் நினைவுகளில் மூழ்கியிருந்தது. தினம் என்று இல்லாவிட்டாலும், கிடைக்கும் பொழுதெல்லாம், அவனுக்கும் போன் செய்து விடுவாள். இப்பொழுதெல்லாம் அவனுடன் பேசாமல் அவளுக்கு இருக்க முடிவதில்லை.

அவனைப் பற்றி சகலத்தையும் அவனிடம் சொன்னாள். தன்னுடைய விருப்பங்கள், எதிர்கால ஆசைகள் இப்படிப் பல. அதில் சிலவற்றை அவனின் ரசனைக்கேற்ப அவன் விமர் சிக்கும் விதம் எல்லாம் அவளுக்கு வருங்காலத்தில் அவனுடன் இணைந்து இல்லறம் நடத்துவதைப் பற்றிப் பல இனிய கனவுகளைக் காண வைத்தது.

இப்படி அவள் எண்ணங்கள் முழுக்க அவன் நிறைந்திருக்க, வாயிலில் 'காலிங் பெல்' ஒலித்தது.

உதட்டில் சின்னச் சிரிப்புடன் வாயிலின் கதவைத் திறந்த வளுக்கு அங்கே நின்று கொண்டு இருப்பவனைக் கண்டதும் முகம் சிவந்தது.



யாரை நினைத்துக் கொண்டிருந்தாளோ, அவன். எதிர்பாராத இன்ப அதிர்ச்சி.

நின்று கொண்டிருந்தவன் வருண்.

''உள்ளே வாங்க!'' என்றபடி கதவை விரித்து திறந்து கொஞ்சம் ஒதுங்கி நின்றாள்.

நெஞ்சம் தன் வேலையைத் தொடங்கியது.

''அம்மாவும், அப்பாவும் ரிசப்ஷனுக்குப் போயிருக்காங்க!'' அவனுடன் கூடவே நடந்தபடி பேசினாள் அவள்.

''ம்ம்ம்...'' என்று குரல் கொடுத்தபடி அருகில் சோபாவில் அமர்ந்தான் வருண்.

அவனின் மௌனம் அவளைச் சங்கடப்படுத்தியது.

''ஏதாவது முக்கியமான விஷயமா? அம்மா அப்பாகிட்டே ஏதாவது சொல்லணுமா?'' என்று பிரணத்தி கேட்க, பதிலுக்கு அவன் பேசியதைக் கேட்டபோது வீடு தட்டாமாலையாகச் சுற்றியது பிரணத்திக்கு.

''ஏன் பிரணத்தி என்னை 'அவாய்ட்' பண்ணுகிறாய்? ஏன் நான் போன் பேசியபோதெல்லாம் 'கட்' செய்தாய்? உன்னிடம் போனை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்ததுதான் மிச்சம்? என்னை வேண்டும் என்று நீ 'அவாய்ட்' பண்ணவில்லை தானே. உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதுதானே?'' என்று கேட்டவனின் குரலில் கவலையின் ரேகையும், எதிர்பார்ப்பின் ரேகையும் ஒருங்கே கலந்திருந்தன. முகத்தில் தண்ணீரை வாரியிறைத்தது போல் பிரணத்தியின் முகம் வியர்வையில் நனைந்தது. மேலே சிந்திப்பதற்குக் கூடப் பயமாக இருந்தது.

''உங்களுக்கு நான் போன்...'' என்று மெல்லியதாகக் கூறிய பிரணத்தியைத் தொடர்ந்து,

''வேலைக்குக் கூடப் போறியாமே, பிரணத்தி. என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் வேண்டாம் என்றா

சொல்லியிருப்பேன்!'' என்று அவன் குண்டைத் தூக்கிப் போட்டதும்.

பிரணத்தியின் கால்கள் நிற்பதற்குரிய தெம்பை இழந்தன. 'பொத்' என்று அருகில் கிடந்த சோபாவில் அமர்ந்தாள். தன் விரல்களையே வெறித்தாள்.

பிரணத்தியிடமிருந்து பதில் கிடைக்காமல் போகவே, வருண் மெல்ல அவளருகில் நடந்து வந்து அவள் தோளைத் தொட்டான். சரேலென்று விலகினாள் பிரணத்தி.

வருண் முற்றிலும் வேற்று ஆளானான்.

குழப்பமான மனநிலையில், கண்களில் பொங்கிய கண்ணீரை அடக்கியபடி, அவள் பேச எத்தனிக்கையில், வெளியில் கார் சப்தம் கேட்க, சட்டென்று கண்களில் வழிந்த நீரைச் சுண்டியபடி,

''அம்மா, அப்பா வருகிறார்கள். நான் உள்ளே போகிறேன்,'' என்று விருட்டென்று தன் அறைக்குள் சென்று முடங்கினாள் பிரணத்தி.

வருணுக்குப் புருவம் முடிச்சிட்டது. ஏதோ சரியில்லை என்று உறைத்தது. வலது கையால் முடியைக் கோதியவன்,

''வாங்க, வாங்க!'' என்று வாய் நிறையப் புன்னகையுடன், சந்தோஷமாக வரவேற்றவர்களைக் கண்டதும் மென்மையாகச் சிரித்தான்.

''சும்மா இந்தப் பக்கமா வந்தேன். அதான் உங்களை எல்லாம் பார்த்துவிட்டுப் போகலாம் என்று...'' அவன் இழுத்த இழுப்பில் ராஜ்குமாரும், சுப்ரஜாவும் பளிச்சென்று சிரித்து விட்டார்கள். மருமகனுக்கு வருங்காலத் துணைவியைக் காணும் ஆவல் என்று புரியாமலா இருக்கும்.

விருந்து உபசரணைகளை மறுத்து வருண் ஏதோ பேசிக் கொண்டிருப்பது பிரணத்தியின் காதில் விழுந்ததும் கல்லா



யிருந்தாள். மனம் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது.

யாரோ? எப்படிப்பட்டவனோ, எவ்வளவு வயசுக்காரனோ? மிகவும் கீழ்த்தரமானவனாக இருந்தாலொழிய இப்படி அவள் பேசும் பொழுதெல்லாம்கூடப் பேசி அவளை முட்டாளாக்கி யிருக்க மாட்டான்.

தவறாக எண்ணி ஒரு பெண் பேசுகிறாள் என்றால், உண்மையுள்ள, நல்ல புத்தியுடைய நியாயமான அறிவுடைய ஒரு மனிதன் எப்படி ரியாக்ட் பண்ணியிருக்க வேண்டும். நீங்கள் நினைக்கும் மனிதன் நான் இல்லை, இது தவறான நம்பர், மன்னிக்கவும் என்று நாகரீகமாகச் சொல்லியிருக்க வேண்டாமா? சொல்லவில்லையே... அப்படி என்றால் அவன் நடத்தையில் மிகவும் மோசமானவனாக இருக்க வேண்டும். பெண் என்றால் அலையும் சபல புத்திக்காரனாக இருக்க வேண்டும். ஐயோ... ஐயோ... என்று உள்ளம் 'ஹோ' என்று கதறியது. கண்களில் நிற்காமல் கண்ணீர் பெருகியது. எவ்வளவு பெரிய அவமானம்... ச்சே... என்று மனசு நிதானத்தையிழந்தது.

சாதாரணமாகவா? உளறினாள். இல்லையே. வருங்காலக் கணவன் என்கிற நினைப்பில் என்னவெல்லாம் பேசியிருக் கிறாள்... கதறியது நெஞ்சம்.

முகம் அழுகையில் சிவந்தது. கண்கள் உப்பி, தன் அறையிலேயே துவண்டு கிடந்த பிரணத்தியைக் கண்டு பதறினார் சுப்ரஜா.

''பிரணத்தி, என்னடா செல்லம். என்ன ஆச்சு?''

துடித்துக் கொண்டு வந்த அழுகையை உதட்டைக் கடித்து நிப்பாட்டிய பிரணத்தி, முன்னுரையும், பின்னுரையும் இல்லாமல்,

''அம்மா, எனக்குக் கல்யாணம் வேண்டாம்மா!'' என்று திடுக்கிடும் முறையில் மிகவும் தீவிரமாகச் சொன்னாள்.

தூக்கி வாரிப்போட்டது சுப்ரஜாவுக்கு.



''பிரணா...'' என்று மேலும் ஒரு வார்த்தை கூடப் பேச முடியாமல் சுப்ரஜா நிற்க,

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே வந்தார் ராஜ்குமார்.

''நாங்கள் கல்யாண வீட்டிற்குக் கிளம்பும்போது நன்றாகத் தானே இருந்தாய்? அப்புறம் இந்த ரெண்டு மணி நேரத்தில் ஏனிந்த மாற்றம்? வருண் ஏதாவது சொன்னானா?'' அவரின் கேள்வியில் ஆராய்தல் இருந்தது.

''ப்ளீஸ்ப்பா... கல்யாணம் வேண்டாம்!'' என்று கண்களைத் துடைத்தபடி பிரணத்தி சொல்ல, தன்னுடைய கோபத்தை அடக்கியபடி,

''ஏன் வருணைப் பிடிக்கவில்லையா?'' என்று கேட்க, பிரணத்தியிடம் இருந்து பதிலொன்றும் வராமல் போகவே,

''அப்படின்னா முதல்லேயே சொல்லியிருக்கணும். இப்போ எல்லாம் நிச்சயித்தப்புறம், நகை, புடவை வாங்கும்போது கூட நீ ஒன்றும் பேசாது இருந்து விட்டு, இப்போ என்ன பிரணத்தி, புத்தி கித்தி பேதலித்து விட்டதா உனக்கு?'' என்று கோபப் பட்டார் ராஜ்குமார்.

''எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம்,'' என்று சொன் னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல் மீண்டும் மீண்டும் அதையே சொன்னாள் பிரணத்தி.

''அடி பிய்ச்சுப்புடுவேன் பிய்ச்சு! இது என்ன பொம்மைக் கல்யாணமா பண்ணறாங்க. உங்க அக்கா வாங்கிட்டுப் போன கொஞ்ச நஞ்ச மானத்தையும் நீ வாங்கிடலாம்னு நினைச்சியா? நீ நினைச்சதும் வேண்டாங்கறது. என்ன இதெல்லாம்? கல்யாண கார்டு கூட அச்சடித்து நாளை வந்துவிடும். விளையாட்டா?

''நீதான் அவளுக்குச் செல்லம் கொடுத்துக் குட்டிச் சுவராக்கி யிருக்க. விவரம் தெரிஞ்ச பெண் பேசற பேச்சையா பேசுறா.



பைத்தியம் புடிச்சது போல. தொலைச்சுப்புடுவேன்!'' நெற்றி நரம்புகள் புடைக்கக் கத்தியபடி -

கையிலிருந்த பேப்பரை அவள் மேல் வீசி அடித்தபடி கோபத்தில் அவர் நகர,

சுப்ரஜாவின் குழப்பமான பார்வை மகளின் மீது கவலை யுடன் படிந்தது.

தலையணையில் முகத்தைப் புதைத்தபடி அழும் மகளிடம், அந்த நேரத்தில் பேசுவது பயன் தராது என்று புரிந்து தலையைத் தடவிக் கொடுத்து விட்டு வெளியே வந்தார்.

## 13

பிரணத்தி முதன் முதலாக வருணைச் சந்தித்தபோது அதில் காதல் இல்லை. அப்பா அம்மா தனக்காகப் பார்த்து வைத்திருக்கும் தன் வருங்காலக் கணவன் என்கிற ஆசை இருந்தது. ஆனால் அவனுடன் டெலிபோனில் பேசக் கூட அவ்வளவு துடிப்பு இருந்ததில்லை. ஆனால் அப்படி அவள் பேசியபோது, அவனுடைய பேச்சில் ஓர் லயிப்பு ஏற்பட்டது நிஜம். அவன் பேச்சில் இருந்த ஆண்மை அவளைக் கவர்ந்தது மறுக்க முடியாத உண்மை. அந்தக் குரலுக்குரியவனை மிகவும் ஆழமாக நேசிக்கத் துவங்கியிருந்தாள். இவை யாவும் வருணுக்குச் சொந்தமானவை இல்லை என்னும்போதே, என் வருண் இவன் இல்லை என்று நெஞ்சு அடித்துக் கொண்டது. அதே உணர்வு வருணை வெறுக்க வைத்தது.

இந்தச் சில நாட்கள் வார்த்தைகள் பரிமாற்றத்தில், எண்ணங்கள் பரிமாறப்பட்டு, பிரணத்தியின் உள்ளத்தில்

நீங்காத இடத்தைப் பிடித்து விட்டிருந்தான் அவன். அவனை மறப்பது சுலபமான காரியமாகத் தெரியவில்லை பிரணத்திக்கு.

ஆனால் இதற்கு எதிர்காலம் இருக்கிறதா இல்லையா என்று புரியாமல் குழம்பியதில் பிரணத்தியின் மனசு ரணகளமாகியது.

வீட்டில் அம்மாவும், அப்பாவும் பார்க்கும் பார்வையும், பேசும் பேச்சும் வேறு அவளை அடுப்பில் வைத்தது போல் தகித்தது.

வீட்டில் இருந்தால் பைத்தியம் பிடிக்கும் நிலை வரும் என்று உணர்ந்து, பிரணத்தி மறுநாள் வழக்கம் போல வேலைக்குக் கிளம்பினாள். அவன் வாங்கித் தந்த வேலைக்குப் போகணுமா என்று ஒரு எண்ணம் எழுந்தது, அந்த எண்ணத்தை அடக்கினாள். வேலைக்குப் போவதற்குப் பிடித்திருந்தது. அதுவும் அவளுக்குக் கொடுத்திருந்த ப்ராஜெக்ட் இன்னும் முடியவில்லை. அரை குறையாக அதை முடிக்காமல் விடுவதற்கும் பிரணத்திக்குப் பிடிக்கவில்லை. மிகுந்த ஈடுபாட்டுடன் அவள் செய்யும் அந்த ப்ராஜெக்ட் ரொம்பவும் நன்றாக வந்திருந்தது. அதை முடித்து, கம்பெனியில் தன் திறமையைக் காட்டி நிலையான ஒரு வேலையில் அமர்ந்து விட வேண்டும் என்று மனதில் முடிவெடுத்தாள்.

மெதுவாக அவள் தனக்கு வேலை வாங்கிக் கொடுத்தவனைப் பற்றித் துப்புத் துலக்கவும் தொடங்கினாள்.

''டாப் லெவல்'' இன்ப்ளுயன்ஸ் என்றுதான் விடை கிடைத்ததேயொழிய யார் என்ன என்கிற விவரம் மட்டும் விடியக் காணும்.

ஆகாஷ் நிலை கொள்ளாமல் தவித்தான்.

தினமும் பிரணத்தி அலுவலகத்திற்கு வருவதைப் பார்க்கிறான். ஆனால் போனில் பேசுவதில்லை. என்ன ஏது என்று



புரியாமல் தவித்தவனுக்கு, வேலை கொடுத்தவனைப் பற்றி பிரணத்தி விசாரித்த விவரம் காதில் எட்டியவுடன் புரிந்து விட்டது. தான் அவளின் வருங்காலக் கணவன் இல்லை என்ற குட்டு வெளிப்பட்டு விட்டது என்பது. அப்படிப் புரிந்து கொண்டதும் அவளுடைய மனநிலை எப்படி இருந்திருக்கும் என்பதுதான் ஆகாஷை இரவு நேரங்களில் தூங்க விடாமல் செய்தது.

உடனே மறந்திருப்பாளோ?

ஆகாஷ் என்கிற தனி மனிதனின் தாக்கம் சிறிது கூட இருந்திருக்காதா? அந்த வருண் எப்படிப்பட்டவனாக இருப்பான்? அவன் உருவத்தில் பிரணத்தி மயங்கியிருப்பாளோ?

பிரணத்தியை இனி நெருங்குவது இயலாத காரியமா?

அவள் இனித் தனக்குக் கிடைக்கப் போவதில்லை என்று புரியப் புரிய ஆகாஷுக்கு நெஞ்சு தவித்துப் போனது.

அவனால் முடியாததா?

தனி ஒருவனாக இத்தனை சாதனைகளைப் படைத்து, சகல தகுதிகளையும் சேகரித்து வைத்து இருக்கும் அவன் தன் வாழ்க்கைத் துணையை இணைவது முடியாததா?

முயற்சி செய்து பார்க்காமல் விடப் போவதில்லை அவன்.

வழக்கமாகப் பிரணத்தி அவனிடம் பேசும் அதே சாயங்கால நேரம் ஆறு மணி. ஆகாஷ் மனதைக் கொஞ்சம் நிலைப்படுத்திக் கொண்டு, குறித்து வைத்திருந்த அவளின் நம்பரை டயல் செய்தான்.

போனை எடுத்தது பிரணத்திதான். ''ஹலோ'' என்ற குரல் ஓசை கேட்டவுடன் பிரணத்தியின் நெஞ்சுக் கூடு சில்லிட்டுப் போனது. தொண்டை வறண்டது. உதட்டை ஈரப்படுத்திக் கொண்டு,



''யூ ஸ்கௌண்ட்ரல்! எவ்வளவு தைரியம் உனக்கு. எவ்வளவு தைரியம்! பொய்யுரைப்பது கேவலமாயில்லை. சொல், நீ யார்?'' என்று பேசுவதற்குள் பிரணத்திக்கு மூச்சிரைத்தது. குரல் கிறீச்சிட்டது.

''பிரணத்தி ஐ யம் சாரி. ப்ளீஸ்...'' என்று அவன் பேசத் தொடங்க,

பிரணத்திக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. தான் செய்த காரியத்திற்கு 'சாரி' என்ற ஒரே வார்த்தையில் தப்பிக்க அவன் நினைக்கிறான் என்று புரிந்தவுடன், வானமே இடிந்து தன் தலையில் விழுந்து விட்டது போல் துடித்துப் போனாள்.

''ஐ ஹேட் யூ. யூ ரோக். நான் உன்னைப் பரிபூரணமாக வெறுக்கிறேன். நாடகம் முடிந்து விட்டது. இனி என்னைத் தொடர்பு கொள்ளாதே!'' என்று உணர்ச்சி வசத்தால் மாறிவிட்ட கீச்சுக் குரலில் கத்தியபடி போனை அழுத்தமாகத் தாங்கியில் வைத்த பிரணத்தி, சுவரில் அப்படியே சரிந்தாள். கண்களில் கண்ணீர் கசிந்தது. நெஞ்சு வெறுமையானது.

இரண்டு மூன்று நாட்களாகவே சதா சிந்தனையிலேயே இருக்கும் மகளைக் கண்டு சுப்ரஜாவிற்குக் கவலையாயிருந்தது.

வேலைக்குப் போவதால் வீட்டில் வயது வந்த பெண்களைச் சரிவரக் கவனிக்க முடிவதில்லையே என்ற நினைப்பு சுப்ரஜாவை எப்பொழுதும் உறுத்தும்.

அதுக்கேற்றாற் போல மூத்தவள் கௌசல்யாவும் வேறு இனத்தவனைக் காதலித்து, பெற்றோரிடம் மிகுந்த சண்டைகளுக்கிடையே கைப் பிடித்தாள்.

இப்பொழுது, பிரணத்தி.

கல்யாணம் நிச்சயித்து, கல்யாண வேலைகளை எல்லாம் தொடங்கப் போகும் சமயத்தில், ''கல்யாணத்தை நிறுத்



துங்கள்!'' என்று அலறவும், சுப்ரஜாவிற்குத் தாயின் கவனிப்பு பிள்ளைகளுக்குச் சரிவரக் கிடைக்கவில்லையோ! என்ற எண்ணம் உறுதியாகி விட்டது.

அவரைப் பொறுத்தவரையில் கடைக்குட்டி பிரணத்தி இன்னும் குழந்தைதான்.

கல்யாண நிச்சயமான தினத்திலிருந்து சகுனம் ஒன்றும் சரியாக இல்லாதபொழுதே, சுப்ரஜாவுக்கு, என்னவோ நடக்கப் போகிறது என்ற உள்ளுணர்வு சொன்னது நடந்தே விட்டது. ஆனால் காரணம், காரியமே இல்லாமல் பிரணத்தி அழுவதும், சில சமயங்களில் தனக்குத் தானே பேசிக் கொள்வதைப் பார்த்ததும் பெற்ற மனம் தவித்துப் போனது.

விஷயம் கேட்டால்,

''ப்ளீஸ்மா, ஒன்றும் கேட்காதீங்க!'' என்று தழைத்துப் போன குரலில் பிரணத்தியிடம் இருந்து பதில் வந்தது.

தன்னை மணந்து கொள்ளப் போகிறவன் என்ற நினைப்பில் யாரோ முன்பின் அறியாதவனிடம் டெலிபோனில் தினம் பேசி மனதைப் பறி கொடுத்த அவமானம் அவளுள் புதையப்பட வேண்டிய ஒன்று.

அம்மாவிடம் சொன்னால் கிறுக்குத்தனம் என்பார்.

ஆனால் பிரணத்தி அத்தனையையும் நிஜம் என்றல்லவா எண்ணியிருந்தாள். உள்ளார்ந்த அன்புடன், எதிர்பாராது கொண்ட முதல் காதல் அவளைப் பாடாய்ப் படுத்தியது.

அந்த முகம் அறியாத மனிதனை அந்தப் பேதை மனம் இன்னும் நேசித்தது.

வேறு ஒருவருடன் திருமண வாழ்வே தனக்கு வேண்டாம் என்ற முடிவும் ஏற்பட்டது.

பிரணத்தி எப்பொழுதும் போல ஒன்றும் பேசாமல் அலுவலகம் செல்வதில் ராஜ்குமாருக்குத்தான் ரத்தம் கொதித்தது.

விட்டுப் பிடிக்கலாம் என்று பொறுத்திருந்தவர் பிரணத்தியின் தீவிரத்தில் செய்வதறியாது திகைத்தார்.

அடித்து உதைத்துச் சம்மதிக்க வைக்கும் விஷயமும் இல்லை. அப்படி ஒரு பழக்கம் இந்தக் குடும்பத்திலும் இல்லை.

மாப்பிள்ளை வீட்டுக்காரர்களிடம் என்ன பதிலைச் சொல்வது என்று கையைப் பிசைந்தார் அவர். அது அவரின் கௌரவ விஷயம் அல்லவா?!

பிரணத்தி இதற்கும், தனக்கும் சம்பந்தமே இல்லை என்கிறாற் போல, கல்யாண விஷயம் பேசும் பொழுதெல்லாம், காது கேளாதவள் போலத் தன் வேலையில் ஆழ்ந்தாள்.

''உன் பொண்ணுக்குக் கிறுக்குப் பிடித்திருக்கிறது!'' என்று திட்டினார் ராஜ்குமார். சில சில சமயங்களில் ரொம்பவும் தாங்காமல் அவளை அடிக்கக்கூட அவர் கை பரபரக்கும்.

ஆனால் சுப்ரஜா பிரணத்தியின் பக்கம்.

இத்தனை கெட்ட சகுனங்களையும் மீறி மகளை வருணுக்குக் கட்டி கொடுக்க அவள் மனம் ஒப்பவில்லை.

நிறைய மனக்கஷ்டங்கள், கருத்து வேறுபாடுகள், விரோதங்களுக்கிடையே மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் பிரிந்து போயினர்.

விஷயம் அறிந்து கௌசல்யாவும், போனில் பிரணத்தியிடம், வருணைக் கல்யாணம் செய்து கொள். மிகவும் நல்லவன். உன்னை ராணி மாதிரி வைத்துக் கொள்வான் என்று அறிவுரை வழங்கத் தொடங்கினாள். பிரணத்தி பதில் பேசாமல் இருப்பதைக் கண்டதும், ''என்ன விஷயம்? என்ன ஆச்சு? அவனிடம் போனிலாவது பேசினாயா?'' என்று கேட்க, பிரணத்தி பதில் ஒன்றும் பேசாமல் போனை அம்மா கையில் திணித்து விட்டு, கண்களைத் துருத்திய கண்ணீரை மறைக்க வேகமாகத் தன்னுடைய அறைக்குள் புகுந்தாள்.



எல்லாம் இந்த போன் செய்ததால் வந்த வினைதானே. போன் பேசாமல் இருந்திருந்தால், காதல் என்னும் உணர்ச்சியையும் அது படுத்தும் பாட்டையும் உணராமல் நிம்மதியாக இருந்திருப்பாளே.

எல்லாம் விதி. விதியின் விளையாட்டை வெல்ல முடியுமா?

## 14



பிரணத்திக்கு நிச்சயித்து இருந்த கணவன் தான் இல்லை என்றவுடன், டெலிபோன் பேசுவதையே அவள் நிறுத்தி விட்டதிலிருந்து, ஆகாஷுக்குப் பிரணத்தியின் மனநிலை சிறிது புரிந்து போயிற்று. அவள் வருண் என்பவனின் தோற்றத்தில் தன்னை இழந்து இருக்கிறாள் என்று புரிந்த விஷயம், அவனின் நெஞ்சைக் கசக்கியது.

பிரணத்தியிடம் இருந்து வந்த,

''நான் உன்னை வெறுக்கிறேன்!'' என்ற ஒரே வார்த்தையில் அந்தக் கம்பீரமான ஆண்மகன் உள்ளம் சிதறிப் போயிற்று.

பின்பு அமைதியாக அவன் உட்கார்ந்து பல விஷயங்களை யோசிக்கையில், பிரணத்தியின் மேல் கோபம் ஏற்பட்டது.

எவ்வளவு எளிதாக விலக்கி விட்டாள். அவனைப் பல உணர்ச்சிகளுக்கு உட்படுத்திய டெலிபோன் உரையாடல்கள் அவளைச் சிறிதும் பாதிக்கவில்லை என்ற நினைப்பு அவனை ஆத்திரம் கொள்ளச் செய்தது.

அவர்களுக்குள் உருவான தொடர்பு கடவுளாகச் செய்த மாய வித்தை என்று அவன் நம்பியிருந்தான்.





வாழ்க்கையில் நடக்கும் அநேக விஷயங்களை நம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை. அதன் காரண காரியங்களும் கண் கட்டு வித்தைதான்.

பிரணத்தி கம்ப்யூட்டரில் தான் சேகரித்து வைத்திருந்த டேட்டா முழுவதையும் 'ஃபீட்' பண்ணிக் கொண்டிருந்தாள்.

''பிரணா, அங்கே பார், அந்த மோனா நம்ம பாஸ் கையை எவ்வளவு இறுக்கமா பிடிச்சிட்டுப் போகுதுன்னு. நான் சொன்னா நம்பமாட்டேன்னு சொன்னேயில்ல!'' என்றாள் பாக்யா.

நிமிர்ந்து பார்த்தாள் பிரணத்தி. இவள் பார்க்கும் முன் அவர்கள் வாயிலைக் கடந்து விட்டார்கள்.

பொறுப்பு மிக்க பதவியில் இருப்பவன் இப்படி ஒரு பெண்ணுடன் பொதுவில் சுத்தலாமா? கேள்வி எழும்பியது பிரணத்திக்கு.

என்னதான் கல்யாணம் செய்து கொள்ளப் போகும் பெண்ணாக இருந்தாலும், இப்படி ஆபீஸுக்குக் கூட்டி வந்து கொட்டம் அடிப்பது அவன் மேல் உள்ள அபிமானத்தைக் கீழே தாழ்த்தியது.

நினைவு அவன் பின்னே சறுக்குவதை உணர்ந்து, ''ச்சு,'' என்றபடி தன் வேலையில் கவனம் செலுத்தினாள் பிரணத்தி.

மதியம் மூன்று மணி வரை வேலை நேரம் சரியாக இருந்தது. திடீரென்று ஆபீஸ் பாய் பிரணத்தியின் முன்னே பிரசன்னமானான்.

''மேடம் பாஸ் உங்களை வரச் சொன்னாங்க. ரூமில் இருக்கிறார்,'' என்றான்.

''யாரு, என்னையா?'' என்று சந்தேகமாக அவள் கேட்க,

''மிஸ் பிரணத்தின்னுதான் சொன்னாங்க,'' என்றான் அவன்.



பிரணத்திக்கு உள்ளே படபடப்பாக இருந்தது. இவ்வளவு பெரிய நிறுவனத்தின் எம்.டி.யிடம் போய்த் தனியாக என்ன பேச என்று யோசனையாக இருந்தது.

அணிந்திருந்த மஞ்சள் நிறப் பூக்கள் வேலைப்பாடுடைய மெரூன் நிறச் சுரிதாரைச் சரியாக இழுத்து விட்டபடி நடந்த பிரணத்தி சடக் என்று பிரேக் போட்டது போல் நின்றாள்.

நெற்றியில் அழுத்தித் தேய்த்து விட்டுக் கொண்டாள். புரிந்து விட்டது. என்ன விஷயமாக எம்.டி. கூப்பிட்டு அனுப்பியிருப்பார் என்று தெளிவாகி விட்டது.

அவன் வாங்கித் தந்த வேலை. அவனே இல்லாமல் போன தன் பிறகு அவன் சிபாரிசில் வந்த வேலையும் இல்லாமல் தானே போகும்.

வேலை நிலைக்கும் என்று நினைத்தது என் மடத்தனம். இந்த விஷயத்தைக் குருமூர்த்தி மூலமாகவே செயல்படுத்தியிருக்கலாமே என்ற கேள்வியும் தோன்றியது.

''எம்.டி.யைப் பார்க்காமலேயே வேலைக்கு 'பை' சொல்லி வீட்டுக்குக் கிளம்பிவிட வேண்டியதுதான் என்ற நினைப்பை ஒதுக்கிவிட்டு, அவன் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து லிப்ட் ஏறிப் பிரணத்தி அவனுடைய தளத்திற்கு வந்தாள். அவனுடைய செகரட்டரியின் அனுமதியுடன் அவன் அறைக்குள் நுழைந்தாள்.

கம்ப்யூட்டரில் எதையோ தட்டிக் கொண்டிருந்தவன் காலடிச் சத்தம் கேட்டதும் நிமிர்ந்தான்.

பிரணத்தி.

அவனுடைய கூர்மையான விழிகள் அவளைத் துல்லியமாகத் துளைத்தன. பிரணத்தி வெலவெலத்துப் போனாள். சத்தியமாய் அந்தக் கண்கள் அவளிடம் ஏதோ கேள்வி கேட்டன. அதைக் கடுமையாக வேறு கேட்டன. அவள் நெஞ்சு காரணமறியா வேகத்துடன் தடதடத்தது.

அதற்குள் அவன் முகபாவனை மாறியது.

"வெல், ப்ளீஸ் பீ சிட்டட்!" என்று ஆங்கிலத்தில் பிரணத்தியை உட்காரப் பணித்தான்.

நன்றி சொல்லியபடி அமர்ந்தாள்.

"இதுதான் உங்கள் முதல் வேலை இல்லையா?"

"ஆமாம்."

"ப்ராஜெக்ட் அஸிஸ்டண்ட் ஆக நீங்கள் ரொம்பவும் இன்னோவேட்டிங்'காக நிறைய ஐடியா கொடுத்திருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இந்த மாதிரி இளைஞர்கள், புதுமையாகச் சிந்திப்பவர்கள்தான் என் ஆர்கனைசேஷன் வளர்ச்சிக்கு துணை!" அவன் பேசுகையில் அவனது பார்வை அங்குலம் அங்குலமாக அவளைத் துளைத்தது. ஏன் என்றே பிரணத்திக்குப் புரியவில்லை. அவனுக்கு முன் மேல் அமர்ந்திருப்பதைப் போன்ற வேதனையைக் கொடுத்தது. அவளால் அவனை நேருக்கு நேர் கூடப் பார்க்க முடியவில்லை. அவன் கணைகளின் தீவிரம் அவளைத் தலை குப்புறக் கவிழ்த்தது போன்ற வேதனை. அது அவளை என்னவோ செய்தது.

"அதனால் இப்பொழுது ஒரு விளம்பர கம்பெனி, தங்கள் விளம்பரங்களைக் கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸில் கேட்கிறார்கள். அந்த ப்ராஜெக்ட் முழுவதும் உங்கள் பொறுப்பு. அதற்கான டீடெய்ல்ஸ் முழுவதும் நாளை மாலை உங்கள் மேஜையில் இருக்கும். அஸிஸ்டண்ட்ஸுக்கும் குருமூர்த்தி ஏற்பாடு பண்ணிடுவார்!" என்று சொல்லியபடி ஆகாஷ் பிரணத்தியின் முகத்தைக் கவனித்தான்.

வேலையை ஏற்றுக் கொள்ளப் போகிறாளா இல்லையா என்பதுதான் ஆகாஷின் தற்போதைய சந்தேகம். அவன் தொடர்ந்து,



"புது ப்ராஜெக்ட் ஆரம்பித்தால் முடிய இன்னும் 6 மாதம் வரைக்கூட ஆகலாம். பாதியில் வேலையை அரை குறையாக விட்டு விட்டுப் போக மாட்டீர்கள் என்று நம்புகிறேன்," என்றான். அவனுக்குப் பிரணா, சொன்ன தேதியில் வருணைத் திருமணம் புரியப் போகிறாளா என்று அறிய வேண்டும். அப்படி மணக்கப் போகிறவளால் இந்த வேலையை ஏற்க முடியாதே. கல்யாணத்தின் பிறகு வேலைக்குச் செல்லக்கூடாது என்று வருண் வீட்டுக்காரர்கள் சொல்லியிருப்பதாகப் பிரணத்தி சொல்லியிருப்பது அவன் ஞாபகத்தில் உறைந்து போயிருந்தது.

பிரணத்தி வேலையைத் தொடரச் சம்மதித்தால், அவள் கல்யாணத்தையும் நிறுத்தியிருக்கிறாள் என்றுதானே அர்த்தம். டெலிபோனில் கணக்கில்லாமல் பேசியவனிடம் மனதைத் தொலைத்து விட்டாள் என்று சொல்லாமல் சொல்லியதாகத் தானே அர்த்தமாகிறது.

அவளின் பதிலில் தன் உயிரே இருப்பதாகப் பட்டது ஆகாஷுக்கு. படபடக்கும் நெஞ்சத்தோடு கண்களில் கூர்மையுடன் அவன் அவளையே பார்த்தபடி இருக்க,

இங்கோ, பிரணத்தியின் முகம் பூவாக மலர்ந்தது. இதழ்களிடையில் புன்சிரிப்பு அடக்கியும் கேளாமல் விரிந்தது. அது அவளைப் பேரழகியாகக் காட்டியது.

"தாங்க்யூ சார், தாங்க்யூ. நான் இந்த மாதிரியான வாய்ப்புகளுக்காகவே காத்திருந்தேன். என் முழு முயற்சியுடன், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையை முழு ஈடுபாட்டுடன் முடித்துத் தருவேன் சார்!" என்று சேரில் இருந்து எழுந்து விட்டாள்.

அவள் தந்த பதிலில் ஆகாஷுக்கு இத்தனை தினங்களாக நெஞ்சின் மீது இருந்த பெரும் சுமை இறங்கியது. எதிர் காலத்தைப் பற்றிய நம்பிக்கையும் பிரம்மாண்டமாக எழுந்தது.



"சார்! எனக்கு முதன் முதலில் இந்த வேலையைச் சிபாரிசு செய்தவர் யார் என்று சொல்ல முடியுமா?" பிரணத்திக்கு திடீரென்று ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டோம் என்று புரியவில்லை. அவளுடைய 'நா' அவளையும் மீறிக் கேட்டே விட்டது.

அவள் கேள்வியில் ஆகாஷ் முகம் மிருதுவானது. கண்களில் சட்டென்று குறும்பு விளையாடியது. கை கொண்டு தலை முடியைப் பின்புறமாகத் தள்ளினான். சுழல் நாற்காலியில் வசதியாகச் சாய்ந்து கொண்டான். பின்,

"ஏன்?" என்றான் ஒற்றைச் சொல்லாக.

"இல்லை, என் வேலையை என் தகுதியால்தான் நான் தக்க வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று தெளிவுபடுத்தி விடலாம் என்றுதான். யார் சார் அது?" என்றாள்.

"குருமூர்த்தியோட ப்ரண்டுக்கு ப்ரண்ட் ரெகமண்டேஷனாம்!" என்று பொய்யுரைத்தபடி ஆகாஷ் மெல்லப் புன்னகைக்க,

அந்தப் புன்னகைத்த முகம், பிரணத்தியின் நெஞ்சில் அவளறியாமல் பதிந்து போனது.

அறையை விட்டு வெளிவந்த பின்பு பிரணத்திக்குப் பறப்பது போன்ற சுகமான உணர்வு ஏற்பட்டது. கடந்த ஒரு வார காலமாக ஒரு வினாடி விடாமல் அனுபவித்த துன்பம் பஞ்சாய்ப் பறந்தது போன்ற உணர்வு.

ஏன்? என்ன? புரியவில்லை.

வேலையின் முன்னேற்றத்திலா?

ஆகாஷ் பாராட்டியதாலா?

ஒன்றும் தெளிவாகப் புரியவில்லை. ஆனால் அந்த உணர்வே சுகமாக...



## 15

பிரணத்தி தற்போது செய்து கொண்டிருந்த கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் மூளையின் பெரும் பகுதியை ஆக்ரமித்துக் கொண்டது.

நாட்கள் சில ஓடின. அன்று தன்னுடன் கல்லூரியில் படித்த நெருங்கிய தோழிக்குத் திருமணம் கொச்சியில். போக முடியவில்லை என்றாலும் பரவாயில்லை. ஒரு வாழ்த்து மடலையாவது அனுப்ப வேண்டுமே என்று அவள் 'லாண்ட் மார்க்' புத்தகக் கடையில் நல்லதாக 'கார்டு' தேடிக் கொண்டிருக்கையில், தற்செயலாக அவனைப் பார்த்தாள். "ஆகாஷ்."

கூடவே அந்தப் பெண் மோனா. இருவரும் ஆங்கில இலக்கியப் பகுதியில் நின்று புத்தகம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதும் அந்த பெண் ஆகாஷ் கைகளை விடவேயில்லை.

பிரணத்திக்குச் சென்ற வேலையில் கவனம் சிதறிப் போயிற்று. ஆகாஷ் கண்களை நிறைத்தான். அந்தப் பெண் நெஞ்சில் கனலை நிறைத்தாள்.

வழக்கமாகப் பார்க்கும் ஆகாஷுக்கும் இந்த ஆகாஷுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருந்தன. உடை படு காஷுவலாக இருந்தது. லெமன் யெல்லோ டீசர்ட், கிரீம் கலர் ஜீன்ஸ், ஸ்போர்ட்ஸ் ஷூ என்று இன்றைய சமுதாயத்தின் மன்னனாக இருந்தான்.

சதா கண்கள் அவன் புறமே ஈர்த்தன. இந்த நிலை நீடித்ததும், பிரணத்திக்குத் தன்னிடம் ஏதோ சரியில்லை என்று புரிந்து

போயிற்று. தப்பு செய்கின்ற உணர்வு தாக்க, சட்டென்று அந்தப் பிரிவிலிருந்து நகர்ந்து 'சி.டி.'யிருக்கும் பகுதிக்குச் சென்றாள். அங்கிருந்து பார்க்கையில் ஆகாஷ் அவள் கண்களுக்குத் தெரியவில்லை. 'அம்மாடி' என்று நிம்மதியுண்டாயிற்று. அம்மாவுக்கு ஜேசுதாஸ், ஆடியோ, சி.டி. வாங்கலாமே என்று தோன்றியதில் ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்கையிலேயே, மனசு ஏதோ செய்தி சொல்ல, கழுத்தைத் திருப்பினாள்.

அங்கே ஆகாஷ் பற்கள் மின்னச் சிரித்தபடி, ''ஹலோ...'' சொன்னான்.

திடீர் என்று பிரணத்திக்கு சுவாசம் தடைப்பட்டது. அவளை அச்சமயத்தில் ஆக்ரமித்த உணர்ச்சிகளிலிருந்து விடுபடும் மனவலிமை அவளிடம் இல்லை. கையிலிருந்த சி.டி.யின் பட்டியை அழுத்தியபடி பதில் ''ஹலோ'' சொன்னாள். வேலை மெனக்கெட்டு வந்து தன்னிடம் ''ஹலோ'' சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்று மனசு கணக்குப் போட்டது. கண்கள் அவனைச் சுற்றின. பக்கத்தில் மோனா இல்லை.

அவனின் கண்கள் அவள் பார்வையைத் தொடர்ந்தன.

''யாரையோ தேடுகிறீர்கள் போல இருக்கிறது. உங்க கூட வந்தவர்களைத் தேடுகிறீர்களா?'' நெற்றியைச் சுருக்கியபடி சம்பாஷணையைத் தொடங்கினான்.

''ம்ஹூம்...'' என்று சின்னதாய்ச் சொன்ன பிரணத்தி அவனிடம் பேசுவதற்கு வார்த்தைகளைத் தேடினாள். அதற்கு அவன் அவள் கையிலிருந்த சி.டி.யைப் பார்த்தான்.

''பர்சேஸிங் முடிந்து விட்டதா?'' என்றான்.

பிரணத்திக்கு அவன் அருகில் இருந்து விடுபடச் சரியான காரணம் கிடைத்துவிட்டது என்று நிம்மதியானது.

''ஆமாம். இதோ கிளம்பறேன்,'' கூந்தல் அசையத் தலையை ஆட்டினாள். மோனா என்ன ஆனாள் என்று மூளை குடைந்தது.



''என்னோடதும் முடிந்தாச்சு. வாங்க போகலாம்,'' என்று அவளிடம் சொன்னபடி ஏதோ இருவரும் சேர்ந்தே கடைக்கு வந்தது போல, கவுண்டரை நோக்கி நடந்தான்.

பக்கத்தில் யாரோ தன்னையே வெறிப்பதைக் கண்டு பார்வையைத் தழைத்தவள், மீண்டும் உயிர் பெற்று, வேகமாகக் கண்களை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். பிரணத்தியின் முகம் நொடியில் மாறிப் போனது.

அவன் வருண். அவன் கண்களில் விரோதம் தெரிந்தது, ஏமாற்றம் மின்னியது. கூடவே ஏக்கமும் எட்டிப் பார்த்தது. தன்னை அடக்கியபடி,

''பிரணத்தி! ஹவ் ஆர் யூ?'' என்றான். பிரணத்திக்கு வருணைக் கண்டதும் குற்ற உணர்வு நாவைக் கட்டிப் போட்டது. பேசாமல் கண்கள் தரையைத் தொட்டன.

''எனக்கு நேரிலே உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும். ஆனால் எப்படிச் சந்திப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். பரவாயில்லை. கடவுள் இந்த அளவுக்கு என் மேல் கருணை வைத்து இருக்கிறார்!'' என்று பேசியவனை மேலே பேச விடாமல்,

''ஸாரி, இப்பொழுது ஒன்றும் வேண்டாமே!'' என்று பிரணத்தி கெஞ்சுதலாகப் பேசினாள்.

''இல்லை பிரணத்தி, எதில் தவறு, எப்பொழுது வந்தது, என்று அறிந்து கொள்ள வேண்டும். எல்லாம் பிடித்துத் தானே நிச்சயம் ஆயிற்று. பிறகு எப்படி தப்பாயிற்று? எதில் கோளாறு வந்தது?''

''ப்ளீஸ் வருண். இந்த விஷயம் பற்றி வேண்டாம். ஒரு ப்ரண்ட்டா வேறு ஏதேனும் பேசுங்கள் ப்ளீஸ்...'' என்கையிலேயே கண்களில் கண்ணீர் திரண்டு வந்தது.

''என்னை நிராகரித்த காரணத்தை அறியாமல் நான் இங்கிருந்து போக மாட்டேன்!'' என்று பிடிவாதமாக முகம் சிவக்கப் பேசினான்.

யாருக்கோ விளையாட்டுப் பொம்மையாகி அதில் அவள் முழு மனதுடன் தன்னைப் பறிகொடுத்த வேடிக்கைக் கதையை என்னவென்று சொல்வாள்?!

''எதுவுமே நாம் நினைப்பது போல் நடப்பது இல்லை, வருண், எல்லாம் விதி விட்ட வழி!'' என்று விரக்தியாக இவள் பேச,

''உளறாதே பிரணத்தி! எனக்குக் காரணம் தெரிஞ்சாகணும்.''

பின்னால் பிரணத்தி தொடர்ந்து வராததை உணர்ந்த ஆகாஷ் திரும்பினான். பிரணத்தி ஓர் ஆடவனுடன் பேசிக் கொண் டிருப்பதைக் கவனித்தான். கூர்மையான அவன் கண்கள் இருவரையும் ஆராய்ந்தன. மற்றவனின் குரல் கொஞ்சம் தூக்கலாய் இருப்பதைக் காணவும் சட்டென்று பிரணத்தியின் அருகே வந்தான்.

''என்ன ஆச்சு? ஐ யம் வெயிட்டிங் ஃபார் யூ தேர்!'' என்றான் குரலில் அன்னியோன்யத்துடன்.

வருணின் பார்வை ஆகாஷையும், பிரணத்தியையும் மாறி மாறிப் பார்த்தது. பின்,

''ஷிட், பிரணத்தி! விஷயத்தை நான் ஊகித்திருக்க வேண்டும். நீ ஒரு ஏமாற்றுக்காரி, மோசமானவள். நீ ஒருத்தி செய்த தவறால் நான் பெண்ணினத்தையே வெறுக்கிறேன்!'' மேலே அங்கே நிற்கப் பிடிக்காமல் சிவந்த முகத்துடன் வேகமாக நகர்ந்து மறைந்தான் அவன்.

பிரணத்திக்கு அதுவரை அடங்கியிருந்த கண்ணீர், வருணின் கடைசி வார்த்தையில் 'குபுக்' என்று கொப்புளித்தது. குரல் உடைய அவள் முணுமுணுத்தது: 'மன்னியுங்கள் வருண்!'



என்றது வருணுக்குக் கேட்டதோ இல்லையோ, ஆகாஷுக்குத் தெளிவாகக் கேட்டது.

ஆகாஷின் பார்வையைக் கண்டதும் சட்டென்று கைக் குட்டையை விரித்துக் கண்களைத் துடைத்தபடி,

''ஓ... சாரி...'' என்று உடைந்த குரலில் அவள் பேசவும், ஆகாஷ் அவளிடம் வேறு ஒன்றும் பேசவில்லை. அவள் கைகளிலிருந்து பொருட்களை வாங்கி, கடகடவென்று பில் போட்டுப் பார்சலை வாங்கிக் கொண்டான். தன்னுணர்வு வந்து,

''இல்லை. நான் 'பே' பண்ணிடறேன்!'' என்று குரல் கொடுத்த பிரணத்தியைக் காது கொடுத்தே கேட்கவில்லை. வெளியே வந்த பின்பும் அவளிடம் அவன் பொருட்களைக் கொடுக்கவேயில்லை.

முழுவதும் தன்னைச் சமநிலைப்படுத்திய பிரணத்திக்கு ஆகாஷின் செய்கைகள் ஒருவிதப் பிரமிப்பையே உண்டு பண்ணின.

''நீங்கள் என் பொருட்களைக் கொடுத்திங்கன்னா, நான்...'' என்றவளை மேலே பேசவிடாமல்,

''நோ. ப்ராப்ளம். நானே உங்களை 'டிராப்' செய்து விடு கிறேன்,'' என்றதும் பிரணத்திக்கு விழிகள் தெறித்து விடும் போல் விரிந்தன.

எவ்வளவோ மறுத்துப் பேசியும் விடவில்லை அவன்.

அவள் வசிக்கும் பகுதியைப் பற்றிக் கேட்டு அறிந்து, காரை ஓட்டினான் ஆகாஷ். பின் தங்களுக்குள் இருக்கும் மௌனத்தைக் கண்டு சகிக்காமல், அலுவலக விஷயங்களைப் பற்றிப் பேசினான். ஜன்னல் புறமாக ஒட்டி அமர்ந்திருந்த பிரணத்தியும், க்ராபிக்ஸ் செய்வதற்குரிய சில யுக்திகளை அவன் சொல்லக் கேட்டு மெல்ல இறுக்கம் தளர்ந்து சகஜமானாள்.



தன்னுடைய ப்ராஜெக்ட் விஷயமாகச் சில சந்தேகங்கள் அவளுக்கு இருந்தன. அவனிடம் கேட்கலாமா கூடாதா என்று உள்ளுக்குள் அதுவரை நடந்த போராட்டம் அவ னுடைய சகஜமான பேச்சில் மறந்து போய், பிரணத்தியும் அவனிடம் நிறைய விஷயங்களைக் கேட்டு அறிந்து கொண் டாள். அவனுடைய கம்ப்யூட்டர் ஞானம் அவளுக்குப் பெரும் பிரமிப்பை எப்பொழுதும் போல அப்பொழுதும் உண் டாக்கியது.

வருணைக் கண்டதும்தான் ஆகாஷுக்கு முழு உயிர் திரும்பி வந்தது. பிரணத்திக்கும், வருணுக்கும் இடையில் ஒன்றுமே இல்லை என்று ஐயம் திரிபற அறிந்தபோது, உள்ளத்தில் பெருத்த நிம்மதி உண்டாயிற்று.

இனி மெல்ல அவளிடம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வேகம் இருந்தது. ஆனால் அதை அவள் எப்படி உள் வாங்கிக் கொள்வாள் என்ற பயமும் அவனின் தைரியத்தைக் குலைத்தது.

தன் காதலுக்கு யாரும் 'வில்லனில்லை' என்ற நிம்மதி அவனுக்குப் பெரும் பாக்கியமாக இருந்தது.

பாவம், தன் காதலுக்குத் தானே வில்லன் என்பதை ஆகாஷ் அப்போது உணரவில்லை.

## 16

அன்று தூங்கி எழுகையிலேயே மனசு சந்தோஷமாகப் பரபரத்தது பிரணத்திக்கு. நேற்று ஆகாஷ் மிகுந்த தோழமை



யுடன், கொஞ்சம் கூடப் பேதம் பார்க்காமல், அவளிடம் பேசியதும், அவளை வீட்டில் வந்து இறக்கி விட்டதும், அவளை இனம் புரியாத சந்தோஷத்தில் ஆழ்த்தியது. அலுவலகத்தில் நுழையும்போது கூட அப்படித்தான். கம்ப் யூட்டரில் வேலை செய்து கொண்டிருக்கும்போதும் அப்படித் தான். ஆனால் அந்த சந்தோஷம் எல்லாம் அழுது கொண்டே வந்த சக தோழி மோகினி சொன்ன செய்தியில் வரண்டு போனது.

காவ்யாவும் பிரணத்தியும், அழுகையில் குலுங்கிய மோகினியைப் பார்த்துக் கலங்கி விஷயத்தைக் கேட்க,

''மோகினி, பாஸ் ரூமுக்கு தானே ஃப்ளாப்பியைக் கொடுக்கப் போனே! அவர் ஏதாவது திட்டிட்டாரா?'' காவ்யா வருத்தப்பட்டுக் கேட்க,

''கம்ப்யூட்டர்லே பாஸ்வேர்ட் மாத்தி, கித்தித் தொலைச் சுட்டியா? விஷயத்தைச் சொல்லிட்டு அழுடி!'' என்று பிரணா அவள் முதுகில் தட்ட, மெல்ல நிமிர்ந்த மோகினி தன்னுடைய அழகான விரல்களால் கண்ணீரைச் சுண்டியபடி,

''பாஸ் ரூம்லே... பாஸ்... நான்... உள்ளே போனதும், கதவை மூடிட்டு என்னை... என்னை... உதட்டிலே கிஸ் பண்ணிட்டு...'' சொல்லியபடி மீண்டும் கவிழ்ந்து கிடந்து அழ, எல்லோரும் மூர்ச்சையாகி விழாத குறைதான்.

''மை காட்! பாஸ் இவ்வளவு மோசமா? என்னால் நம்பவே முடியவில்லை!'' காவ்யா முணுமுணுக்க,

உடனே நிமிர்ந்த மோகினி, பட் என்று காவ்யாவின் கையைத் தட்டி விட்டாள்.

''பின்னே இங்கே நான் என்ன கதையா சொல்றேன். நம்ப முடியவில்லையாமே!'' என்று முறைக்க,

மேலே ஒன்றும் பேசாமல் பிரணத்தி எழுந்து தன்னுடைய கம்ப்யூட்டரின் முன் சென்று அமர்ந்தாள்.

அவர் இப்படிப் பண்ணியிருக்கக் கூடாது என்று தன் மனதில் சொல்லிக் கொண்டவள், அதற்கு மேல் அந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்க விரும்பவில்லை.

சாயங்காலம் வீட்டில் நுழைகையில் அதிசயிக்கத்தக்க வகையில் ராஜ்குமாரும் அன்று சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்திருந்தார். கொஞ்ச காலமாகவே பிரணத்தியிடம் முகம் கொடுத்தே பேசாதவர் அன்று அவளைக் கண்டதும் முகம் மலர்ந்தார். ''வாம்மா!'' என்று அன்பாய் அழைத்தார்.

அப்பாவிடம் ஏதாவது மாயாஜாலம் நடந்து விட்டதா என்று விழி விரித்து, கண்களால் கேட்க, ராஜ்குமாரும் மீண்டும் புன்னகைக்குத் தாவினார்.

''கை, கால் கழுவி டிரஸ் மாத்திட்டு வாடா. உன்கிட்டே பேசணும்.''

''அதெல்லாம் அப்புறம் பண்ணிக்கலாம்ப்பா. நீங்க என்கிட்டே என்ன பேசணுமோ அதைச் சீக்கிரமா சொல்லுங்க. எனக்குத் தலை வெடிச்சிடும் போல் இருக்கே. ரொம்ப முக்கியமானதாப்பா?'' என்று ஆர்வம் மேலிடத் தந்தையின் அருகே ஒட்டி அமர்ந்தபடி கேட்க, மெல்ல அவள் தலையை வருடியபடி ராஜ்குமார்,

''வருண் இன்னைக்கு என்னோட ஆபீஸ் வந்திருந்தான். நேற்று 'லேண்ட் மார்க்'லே உன்னைப் பார்த்தானாமே. திருமணத்தை நிறுத்தியதற்கு ரொம்பவும் வருத்தப்பட்டான். அந்தக் கோபத்தில் ஏதோ உன்னிடம் மனம் நோகப் பேசியிருந்தால் மன்னித்துக் கொள்ளச் சொன்னான்.''

தலையைக் குனிந்து உதட்டை மென்றாள் பிரணத்தி. அப்பாவின் பீடிகை புரிந்து போனது.



''நல்ல பையன் அவன். உனக்கு ஏம்மா பிடிக்காமல் போனது. அங்கிள் நான் இன்னும் பிரணத்தி மேலதான் ஆசை வைச்சிருக்கேன். என்னிடம் ஏதாவது குறையிருந்தால் சொல்லச் சொல்லுங்கள். அவளுக்காக நான் என்னை மாற்றிக் கொள்ளத் தயாரா இருக்கேன்னு சொன்னதும் எனக்கே வெல வெலத்துப் போச்சும்மா. அவனைக் கல்யாணம் செய்து கிட்டே உன்னோட வாழ்க்கை நல்ல விதமா அமையும்னு நான் நம்பறேன் பிரணா நீ. என்ன சொல்றே?'' என்று ராஜ்குமார் பொறுமையுடன் கேட்க,

அப்பாவின் கையை எடுத்துத் தன் மடிமேல் வைத்து விரல்களுக்குச் சொடுக்கு விட்டுக் கொண்டிருந்த பிரணத்தி, மெல்ல அவர் தோளில் தலையைச் சாய்த்தாள்.

''அப்பா, ப்ளீஸ்ப்பா... கோபப்படாதீங்க. ஆனா இந்தக் கல்யாண விஷயத்தைப் பற்றிக் கொஞ்சம் நாள் கழிச்சுப் பேசலாமே ப்ளீஸ். இன்னைக்கு வேண்டாமே!'' என்று அச்சமயத்திற்குத் தந்தையைச் சமாளிக்க, பிரணத்தி பேச,

அவர் பிரணத்தியின் தலையை வருடியபடியே,

''அம்மா, அப்பா எது செய்தாலும் உன் நல்லதுக்குத்தான் பிரணா. புரிஞ்சுகிட்டு நட, நீ படித்த புத்திசாலிப் பெண். இவ்வளவு வருஷம் நாங்கள் பார்த்து வளர்த்த பெண். ஆனா உன் மனசில் என்ன இருக்கிறது என்று சொல்லமாட்டேங்கறே. நிச்சய தார்த்தம் வரை வந்த கல்யாணத்தை ஒரு பெண் வேண்டான்னா, நான் என்னம்மா நினைக்கிறது. அப்பா அம்மாவுக்கு இதை நினைச்சு எவ்வளவு வருத்தம் வரும். எங்களைப் பத்தி நீ யோசிக்கவேயில்லையா பிரணா?'' என்று அப்பா சொல்ல,

அவர்களின் மனக்கவலையைக் குறைக்க என்ன சொல்லலாம் என்று பிரணத்தி நகத்தைக் கடித்து யோசிக்கலானாள்.

''கொஞ்சம் யோசிச்சுப் பார் பிரணத்தி. உன்னோட முடிவை எனக்கு அப்புறமா சொல். ஆனால் நல்ல முடிவா இருக்கணும்.



அதோட எனக்கு வருணை ரொம்பப் பிடிச்சிருக்கு. மனசுல வைச்சுக்கோ!'' என்றபடி எழுந்து தோட்டத்துப் பக்கமாக நடக்கச் சென்றார்.

'எப்பொழுது கேட்டாலும் என் பதில் ஒன்றாகத்தான் இருக்கும். அதில் மாற்றமில்லையப்பா' என்று முணுமுணுத்துக் கொண்டு, தன் அறைக்குள் முடங்கினாள் பிரணத்தி.

## 17



அன்று பிரணத்தி குருமூர்த்தியின் கேபினுக்குள் நுழைந்த போது அவர் படு பிஸியாக இருந்தார்.

பிரணத்தியைக் கண்டதும்,

''வாம்மா, வாம்மா, இந்த ஃப்ளாப்பி 'லாக்' ஆகி விட்டதாம். பிடி. உன்னோட கம்ப்யூட்டர்லே இன்னும் அதோட ஒரிஜினல் பிரிண்ட் இருக்குல்ல?'' என்று கேள்வி கேட்டார். அதற்குள் டெலிபோன் மணியடிக்க, அதை எடுத்துப் பேசினார். அதில் என்ன செய்தியோ என்னவோ? ஆனால் அதைக் கேட்டவுடன் குருமூர்த்தி முகத்தில் கவலை ரேகைகள்.

பேசி முடித்தவுடன்,

''நம்ப கம்ப்யூட்டர்...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவர், வேகவேகமாக மேஜையில் அங்கும் இங்கும் தீவிரமாக எதையோ தேட ஆரம்பித்தார்.

''பிரணா, எம்.டி.யை பர்சனல் செல்போனில் டைரக்டா பிடி, அவசரமா விஷயம் சொல்லணும்,'' என்றார்.



''நம்பர் சொல்லுங்க சார்,'' என்று கேட்டு, அவர் சொல்ல, டெலிபோனில் நம்பரை ஒற்றிய விரல்கள் அதன் பின் நகரவேயில்லை. இந்த நம்பர்... இந்த நம்பர்...''

''ஆகாஷ்! மைகாட்!'' என்று அவள் அதரங்கள் முணு முணுத்த சப்தம் அவளுக்கே கேட்கவில்லை. கண்கள் நிலை குத்தி நின்றன. அதன் பிறகு பிரணத்தியின் நிலையைச் சொல்ல வார்த்தைகளே இல்லை. விக்கித்து நின்று விட்டாள். மார்பு துடிப்பதை நிறுத்தியது. அடுத்த கணம் பிரணத்தி தடால் என்று தரையில் சரிந்தாள்.

உடல் நலம் சரியில்லை என்ற அறிவிப்போடு, அரை நாளிலேயே வீட்டுக்கு வந்தாள் பிரணத்தி.

வீட்டிற்கு வந்த பிறகும் கூட பிரணத்தியால் நம்பவே முடிய வில்லை. அவனிடம் உரிமையுடன் தான் பேசிய பேச்செல் லாம் நினைத்து அவமானம் பிடுங்கித் தின்றது.

வருங்காலக் கணவன் என்று எண்ணி, இவள் வேலைக்கு அனுமதி கேட்டதும் அவன் சம்மதித்ததையும் நினைத்தால் செத்து விடலாம் போல இருந்தது அவளுக்கு.

ஆகாஷ் பற்றியும், அவனுடைய மோனா பற்றியும், அவனின் பெண் சபலம் பற்றியும் கேள்விப்பட்டிருந்ததால், பிரணத்திக்கு ஆகாஷ் சத்தியமாக நன்றாகத் தன்னிடம் விளையாடி விட்டான் என்ற எண்ணம் உறுதியாக இருந்தது.

வேலையும் கொடுத்து, பக்கத்திலேயே இருந்து சிரித்திருக் கிறான். யாரிடம் எல்லாம் சொல்லிச் சிரித்திருக்கிறானோ? டெலிபோன் உரையாடல்கள் ஒவ்வொன்றும் அவன் வாழ்வே அதுதான் என்று ரசித்துக் கொண்டிருக்க, அவன் அங்கு அவளை கேலிக்குரியவளாக... ச்சே! என்ன அவமானம்!

யாரோ? என்னவோ முகம் தெரியாத மனிதன் தன்னை முட்டாளாக்கிக் கேலிக்குரிய பொம்மையாக்கி விட்டான்

என்று மனம் வெதும்பிப் போயிருந்தவளுக்கு, அவன் யாரோ எவனோ இல்லை, 'ஆகாஷ்' என்றதும் மனசுபட்ட பாட்டை அடையாளம் காண முடியவில்லை. முதலில் தோன்றிய வெறுப்பு மாறி, தான் அந்த மனிதனை நேசிப்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. மனம் கல் விழுந்த குட்டையாகக் குழம்பிக் கிடந்தது. பிரணத்தியைத் தொடர்ந்து மூன்று நாட்களாக அலுவலக வளாகத்தில் காணாமல் தவித்தான் ஆகாஷ். விடுப்பு கடிதம், தகவல் ஒன்றையும் காணும். உடனே டெலிபோனில் வேலைக்கு வராததற்கு விவரம் கேட்கச் சொன்னான். தொடர்ந்து அங்கே வேலை செய்வதில் விருப்பம் இல்லை என்று பதில் வந்தது.

''அவங்களுக்கு உடம்பு ரொம்ப 'வீக்'கோ, என்னவோ சார். அன்னைக்குக் கூட வேலை விஷயமா அவசரமா உங்களை செல்லுலே கூப்பிடச் சொன்னேன். கையிலே போனை வைச்சுக்கிட்டே மயங்கிப் பொத்துன்னு கீழே விழுந்துட்டாங்க!'' என்று குருமூர்த்தி பேசிக் கொண்டிருக்க,

ஆகாஷ் பாறையாக இறுகி விட்டான். விஷயம் தெளிவாகி விட்டது. தன்னைக் கண்டு கொண்டாள் என்று புரிந்தது.

தன் அறையில் தனியாக அமர்ந்து அமைதியாக யோசித்தவன், பின்பு ஏதோ முடிவு செய்தவனாக, தயங்கியபடி, பிரணத்தியின் வீட்டு நம்பரை மெல்ல டயல் செய்தான்.

டெலிபோனை எடுத்தது சுப்ரஜா. ஆகாஷ் பிரணத்தியிடம் பேச வேண்டும் என்று கேட்டவுடன் சுப்ரஜாவின் புருவம் உயர்ந்தது. தோட்டத்தில் நின்று தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த பிரணத்தியிடம் வந்து நின்றாள்.

''பிரணா, உனக்குப் போன் வந்திருக்கு!'' என்றார். தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த டியூப்பை அம்மாவிடம் தந்து விட்டு, வீட்டுக்குள் சென்று போனைக் கையிலெடுத்து, ''ஹலோ...'' என்றாள்.



ஆகாஷின் ஆண்மைக் குரல் பதிலாகச் செவிகளில் பாய, மார்பு அவமானத்தில் துடிக்கப் பிரணத்தி கண்களை இறுக மூடினாள். அவளின் கழுத்து நரம்புகள் புடைத்தன. மெல்லிய சிவந்த செவ்விதழ்களை மெல்லப் பிரித்து, மிகவும் கெஞ்சிய குரலில்,

''ப்ளீஸ் தயவு செய்து தொடர்பு கொள்ளாதீர்கள். இந்தப் போனினால் நான் பட்ட அவமானம் போதும். ஒரு நல்ல மனச்சாட்சி உள்ள மனிதன் என்றால் நிச்சயமா செய்த காரியம் அவன் நெஞ்சை உறுத்தும். இனிமேல் எதுவும் வேண்டாம். உங்க வேலை உங்க நடிப்பு ஒன்றும்...'' என்று பேசிக் கொண்டு போனவளை,

''எனக்கு உன்னிடம் பேச வேண்டும்,'' என்று நிதானமாகக் கேட்டான்.

அவள் இவ்வளவு பேசியும், அவனின் நிதானம் அவளைச் சினமூட்டியது. இன்னும் அவளுடன் விளையாட்டைத் தொடர நினைக்கிறானா? அந்த எண்ணம் அவள் நெஞ்சைக் கலக்கியது. அந்தக் கசங்கலுடன்,

''அண்டப் புளுகன், ஆகாசப் புளுகன், பொய் புரட்டுக்காரன், ஏமாற்றுக்காரன், பித்தலாட்டுக்காரன்களிடம் எல்லாம் பேசவும், கேட்கவும் எனக்கு ஒன்றுமில்லை!'' அடிக்குரலில் சீறினாள் பிரணத்தி.

''வார்த்தைகளைக் கொட்டாதே பிரணா. நேரில் உன்னுடன் எனக்கு அவசியமாகப் பேச வேண்டும். நீ வருகிறாயா? இல்லை, நான் வரட்டுமா?'' பேச்சு ஒரு மிரட்டலானது.

முதலாளி ஆர்டர் போட்டால், வேலையாள் உடனே பணிந்து விட வேண்டுமா?

''முடியாது. எனக்கு உங்களிடம் பேசவோ, கேட்கவோ தேவையில்லை!'' என்று இறுகிய குரலில் சொன்ன பிரணத்தி போனை 'டக்' என்று வைத்து விட்டு அதையே வெறித்தாள்.

இது என்ன இம்சை என்று கண்களில் நீர் கோர்த்தது. எல்லையில்லாப் பிரபஞ்சத்தில் யாருமற்ற தனிமையில் ஓடி ஒளிந்து கொள்ள ஏங்கியது நெஞ்சம்.

## 18

சுப்ரஜா, சிரிப்பிழந்து பேச்சையும் குறைத்து விட்ட மகளைக் கண்டு, கலங்கி விட்டார். கல்லூரிக்கு விடுமுறை எடுத்து வீட்டிலிருந்தபடி பிரணத்தியைக் கண்காணிக்கலானார். ஏதாவது ''ப்ராப்ளமா'' என்று அவளிடம் நேருக்கு நேர் கேட்டாகியும் விட்டது. பிரணத்தியின் செவ்விதழில் இருந்து பதில் வந்தால்தானே.

ஒன்றும் விளங்காமல் ராஜ்குமாரிடமும் பிரணத்தியைப் பற்றிப் பேசினார் அவர். 'காதல்' என்னும் வியாதி தொற்றி விட்டதோ என்ற எண்ணம் இருவருக்கும் எழாமல் இல்லை. ஆனால் அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. எனவும் ஒரே யோசனையாக இருந்தது.

பிரணத்தியோ, தன் வாழ்க்கையின் கோணமே மாறி விட்டதை உணர்ந்தாள். எவ்வளவு சந்தோஷமாகக் கவலையின்றி ஓடி ஆடிய பெண். டெலிபோன் பேச்சால் கொண்ட காதல் அவளைத் துன்பப் புயலில் மாட்டி விட்டதே. அதற்குக் காரணமான ஆகாஷை விண்ணளவு வெறுத்தாள் பிரணத்தி. ஆனாலும் நினைவுகள் ஆகாஷையே சுற்றிச் சுற்றியே வந்தன.

தன்னால் ஆகாஷ் என்ற மனிதனை விடுத்து வேறு ஒருவரையும் கணவனாக வரிக்க முடியாது என்ற ஒரு உண்மை அவள் மூளையில் எட்ட,



எந்த நிலையிலும், எக்காரணம் கொண்டும், இனி ஆகாஷைத் தன்னிடம் நெருங்க விடக்கூடாது என்று முடிவெடுத்து விட்டாள். உண்மையான அன்புடன் அவள் கொண்ட நேசம், அந்தப் பெண் பித்தனுக்குத் தெரியவே கூடாது. தானே வந்து சிக்கிய மீன் என்று அவன் குதூகலத்துடன் இருந்தது, இனித் தொடரக் கூடாது. அவனிடம் யாரும் அப்படி மயங்கி விடவில்லை என்று தெளிவுபடுத்தி விட வேண்டும். அப்படி மயக்கம் ஏற்படுத்தும் எந்தவித நல்ல குணமும் அவனிடம் இருக்கவில்லை என்று சொல்லி அவமானப்படுத்தி விட வேண்டும் என்பதில் குறியாக இருந்தாள்.

ஆகாஷுக்குப் பிரணத்தியை அணுகும் வழிமுறைகளை எத்தனை முறை யோசித்தாலும் புரியவில்லை. அவள் தன் உண்மையான அன்பையும், நேசிப்பையும் புரிந்து கொள்ளாமல், பேசிய பேச்சுக்கள் அவன் நிம்மதியைப் பெருமளவு குலைத்தன.

இரண்டு நாட்கள் பொறுத்தவனுக்கு அதன் பிறகு தாங்க முடியவில்லை.'சாயங்காலம் கம்பெனியில் இருந்து கிளம்பியதும் நேரே பிரணத்தியின் வீட்டின் முன்புதான் இறங்கினான்.

சுப்ரஜா பக்கத்தில் கோவிலுக்குப் போய்ப் பிரணத்தியின் பேரில் அர்ச்சனை செய்து விட்டு வருவதற்காகப் போயிருந்தபடியால், வீட்டில் பிரணத்தி மட்டுமே இருந்தாள்.

'காலிங் பெல்' கேட்டுக் கதவைத் திறந்த பிரணத்தி, கொஞ்சம் கூட எதிர்பார்க்காத வண்ணம் ஆகாஷ் நின்று கொண்டிருப்பதைப் பார்த்துச் சிலையென ஒரு நிமிடம் நின்று விட்டாள். அவனுடைய கண்கள் அவளை விட்டு அகல மறுத்தன. மெல்ல அவளைத் தாண்டி வீட்டுக்குள் நடந்தான்.

பிரணத்தி மெல்ல உணர்வு பெற்றாள். கோபம் பெருகியது. தன் நிம்மதி, சந்தோஷம் எல்லாவற்றையும் குலைத்தவன் இவன்தான் என்ற எண்ணம்தான் மேலோங்கியது.

அவளின் மனநிலை தெரியாமல், நேரடியாக அப்படி அந்தப் பேச்சை எடுத்திருக்கக் கூடாது. ஆனால், அவளின் நல்ல பதிலை எண்ணி ஏங்கியிருந்தவனுக்கு, உடனடியாக அது தெரிந்தே விட வேண்டும் என்ற வேகம் இருந்தது. வெளியே வராமல் தொண்டைக்குள் புதைய நினைத்த வார்த்தைகளை லேசாகச் செருமிக்கொண்டு,

''பிரணத்தி, நீ என்னைத் திருமணம் புரிந்து கொள்வாயா?'' வார்த்தைகள் மிகத் தெளிவாக, சாதாரணமாக வந்து விட்டன ஆகர்ஷுக்கு. அவளுடைய பதிலுக்காகக் காத்திருந்தவனின் நெஞ்சு அதனிடத்தில் இல்லை.

எதிர்பாராமல் அவன் கேட்ட கேள்வியில் பிரணத்தியின் நெஞ்சு உதறியது. ஆனால் உடனே விரைப்பாக,

''கல்யாணம் செய்து வாழ்க்கை முழுவதும் உங்களோடு குப்பை கொட்ட, நம்பும்படியான காரியம் என்ன செய்திருக்கிறீர்கள்? இவ்வளவு பொறுக்கித் தனமான வேலையைச் செய்த நீங்கள்...''

''ஜாக்கிரதை... வார்த்தைகள் பிரணா!'' நெற்றி நரம்புகள் விண்ணென்று நொடியில் தெறித்தன.

''ஆமாம், போனில் பேசிக் காதல் சல்லாபம், ஆபிஸில் வேலை பார்க்கும்போது காதல் சல்லாபம், மோனாவிடம் காதல் சல்லாபம், என்னைப் பார்த்தால் பைத்தியக்காரி போலிருக்கிறதா உங்களுக்கு? ஆமாம், என்னைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும் மிஸ்டர்? சொல்லுங்க.''

அவனின் தூய காதலைப் பிரணத்தி கொச்சைப் படுத்திப் பேசிய விதம், ஆகாஷை அதிர்ச்சியடையச் செய்தது.

''வாழ்க்கையில் எத்தனையோ காரியங்களை நேர்மையாகச் சாதித்தும், மனசு மட்டும் விகல்பம், அந்த ஆண்களின் கோணப் புத்தி மட்டும் மாறாமல்...''



''ஷட் அப்!'' கர்ஜித்தான் அவன், கட்டுக்கடங்காமல், குமுறிய வார்த்தைகள் நின்றபாடில்லை.

''வருங்காலக் கணவன் என்று எண்ணி ஒரு பெண் உங்களிடம் பேசியபொழுது நீங்கள் நினைக்கும் மனிதன் நான் இல்லை, 'ராங் நம்பர்' என்று சொல்லி வைத்து விடும் நேர் புத்தி உங்களிடம் இல்லை. கணவனாகப் போகிறவர் என்ற உறவு முறையில், நான் பேசிக் கொண்டிருந்ததை ரசித்துக் கேட்ட நீங்கள் கேவலமான, விரசமான, நியாயமில்லாத ஆள், உங்களுக்கும், ரோட்டில் போகும் பெண் பொறுக்கிக்கும் வித்தியாசம் கிடையாது, ஐ டோண்ட் லைக் யூ... ஐ ஹேட் யூ'' படபடவென்று பொரிய,

''என்னை இவ்வளவு கேவலமாக இதுவரை யாரும் பேசியதில்லை. பிரணத்தி. இதற்காக நீ என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்!'' என்றான் உறுமியக் குரலில்.

''இதுவரை யாரும் உங்களிடம் உண்மையைச் சொல்லியதில்லையோ என்னவோ!'' கலங்காமல் பதில் வந்தது பிரணத்தியிடமிருந்து.

''ப்ளீஸ் ஸ்டாப் திஸ் பிரணத்தி. முழுத்தவறையும் என் மீது சுமத்தாதே. என் மேல் தவறு இருந்தாலும், சரிபாதி உன்னிடமும் தவறுதானே. நான் உன்னிடம் முதலில் பேசவில்லை. முதலடியையும் நான் எடுத்து வைக்கவில்லை. சும்மா இருந்தவனுடைய மனசைக் கலைத்தவள் நீதான். சொல்.. சொல்.. பிரணத்தி, எதிலேயாவது, என்றைக்காவது நான் பொய் சொல்லியிருக்கேனா? நீயாகக் கேள்வி கேட்டதற்குப் பதில்கள், நமது கருத்துப் பரிமாற்றங்கள் தவிர நம் பேச்சில் வேறு ஏதாவது இருந்ததா? உன் திருமணத்தை நீயே நிறுத்தி வைத்ததிலிருந்து, இடையில் விஸ்ரசமற்று வந்தவனிடம் உன் மனதைப் பறிகொடுத்து விட்டாய் என்ற விஷயம் எனக்குப் புரியவில்லை என்றா நினைக்கிறாய்? ஏனோ, அதை ஒத்துக் கொள்ளத்தான் உனக்கு மனமில்லை.''




ஆகாஷ்க்குத் தன் மனநிலை புரிந்திருந்தது. அவளுக்கு அவமானமாக இருந்தது. கண்களில் அவளறியாமல் குளம் கட்ட, மறுத்துப் பேச வாய் திறந்தாள்.

''இல்லை என்று பொய்யுரைக்கத் தேவையில்லை பிரணத்தி. ஆனால் ஏன் மறுக்க வேண்டும்? மனங்கள் இணைந்த பிறகு மணம் புரிந்து கொள்வதில் என்ன தடுமாற்றம்?''

என்ன அழகாகப் பேசுகிறான். அவளும் அவன் மேல் காதல் கொண்டு விட்டாளாம். அதையும் மறுக்க விடாமல் எப்படி பிட்டு வைக்கிறான். இப்படித்தான் அவன் பெண்களிடம் பேசி மயக்குவானாயிருக்கும் என்று தொடர்ந்து, அந்த எண்ணம் தோன்ற மயங்கிய தன் தலையைச் சிலுப்பியபடி,

''எனக்கும் வருணுக்கும் வருகிற நல்ல முகூர்த்தத்தில் கல்யாணம் நடக்கப் போகிறது. அதுதான் கடவுள் எனக்கு நிச்சயித்த திருமணம். வந்து உங்கள் வாழ்த்தைச் சொல்லுங்கள். நீங்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் இதில் விடை இருக்கிறது. உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன். அல்லாமல் நீங்கள் கற்பனை செய்தது போல், இவ்விடத்தில் உங்களுக்காக எந்த அலையுறுதலும் இல்லை!'' என்று மூச் சிரைக்கச் சொல்லி விட்டு, அவன் இருக்கிறானா, போனானா என்று கூடக் கவனிக்காமல் ஓடிப்போய்த் தன் அறையில் தன்னை அடைத்துக் கொண்டாள்.

## 19



ஆகாஷுக்குக் கண்மண் தெரியாமல் கோபம் வந்தது. எவ்வளவு அருவருக்கத்தக்க வகையில் பேசி விட்டாள். மனசு



வலித்தது. கண்களில் இதுவரை அவன் அறியாத கண்ணீர், சூடாகக் கன்னத்தில் தெறித்தது.

பெரிய அரக்கன் அவனைத் தூக்கி, ஒரு குலுக்குக் குலுக்கி எறிந்தது போல் அவனுடைய எல்லா உறுப்பும் குலுங்கியது. தெளிவில்லாமல் ஆடியது.

என்னைப் பற்றி இவ்வளவு கீழ்த்தரமான நினைப்பா அவளுக்கு. அவனால் நம்பவே முடியவில்லை.

வீட்டிற்கு வந்து வரவேற்பறை சோபாவில் களைத்துப் போய்க் கால் அகட்டிச் சரிந்த போதும் நெஞ்சின் பாரம் குறையவேயில்லை.

கல்யாணத்தைப் பற்றி அவள் சொன்னதை நம்பவில்லை அவன். ஆனாலும்.. அவளின் கோபப் பேச்சு ஒவ்வொன்றும் அவன் காதுகளிலேயே ரீங்காரமிட்டு அவன் நிம்மதியைக் குலைத்தது.

இனி எந்த முறையில் அவளை அணுகுவது என்று யோசித்துப் பார்க்கையில், அவனது நெஞ்சில் முதல் முறையாகப் பிரணத்தி கிடைப்பாளா மாட்டாளா என்ற சந்தேகம் உதித்தது.

ஓடிந்து போய் வந்த மகனைக் கண்டதும் கண்ண பிரானுக்குத் திகைப்பாய் இருந்தது.

ரிட்டையர்டு ஐ.ஏ.எஸ். அதிகாரியான அவர், தன்னுடைய கடைசிக் கட்ட வாழ்க்கையை மிகவும் அனுபவித்து வாழ்ந்து கொண்டிருந்தார். பழகுவதற்கும் வெகு சுவாரசியமான மனிதர் அவர்.

''என்ன மேன். எனிதிங் ராங். கம்பெனியிலே ஏதாவது ப்ராப்ளமா?'' என்று மகனின் தலையைக் கோதியபடி அவன் அருகில் அமர்ந்தார் அவர். ''டென்ஷன்'' என்று ஒரே வரியில் முனகலாகப் பதில் வந்தது ஆகாஷிடம்.

''கம்பெனியில் என்ன டென்ஷன்? டூ யூ நீட் மை ஹெல்ஃப்?'' என்றார் மகனுக்கு உதவும் நோக்கத்துடன்.

கம்பெனி தொடங்குகையில் மகன் மீது நம்பிக்கை வைத்து நிறைய விதத்தில் கை கொடுத்த நல்ல தந்தை அவர். அந்த நம்பிக்கையும் பொய்க்கவில்லை.

''இல்லப்பா. கம்பெனி விஷயமில்லை. இது வேற...'' என்று மகன் தலையைக் கோதியபடி மீண்டும் தெளிவற்று முனகவும்,

கண்ணபிரான் கண்கள் சட்டென்று கூர்மையாயின. பின் நிதான குரலில்,

''மாய வலையில் மாட்டிக்கிட்டியாப்பா?'' என்றார்.

மகனிடம் இருந்து எந்தப் பதிலும் வரவேயில்லை.

தொப்பையைப் பிடித்துக் கொண்டு,

''ஹ்ம் ஹ்ம் ஹா...'' என்று சிரிக்கலானார். சிரிப்பினூடே தன் மனைவியையும் அழைத்தார்.

''சுசி... சுசி... என்னால் சந்தோஷத்தைத் தாங்க முடிய வில்லை. கம் அண்ட் ஷேர் மை ஹேப்பினஸ்.''

''ப்பா... ப்ளீஸ், சிரிக்காதிங்க!'' என்று சிவந்த முகத்தில் ஆகாஷ் சொல்ல,

''இத்தனை நாளாய்க் கல்யாணம் இறுக்குத்தனம், காதல் பைத்தியக்காரத்தனம், குப்பைத் தொட்டின்னு சொல்லி முறுக் கிட்டு இருந்திட்டு இப்ப நீயும் அதில் தொபுகடீர்னு விழுந் தாச்சா?'' என்றவர் பின், ''லவ் தானே ஆகாஷ்?'' என்று உறுதிப் படுத்திக்க வேண்டி மென்மையாகக் கேட்டார் அவர். அதற்குள்,

''என்னங்கக்கூப்பிட்டீங்களா?'' என்றபடி வந்துநின்ற சுசிலாவிடம்,

''உன் பையன், ஆண் பிள்ளையாய் லட்சணமாய் ஒரு நல்ல காரியம் பண்ணியிருக்கான். என்னன்னு நீயே கேளேன்.''



சுசிலாவின் கண்கள் விரிய ஆகாஷைப் பார்க்க,

ஆகாஷ் தன் கண்கள் கசியப் போவதை உணர்ந்து 'சட்'டென்று தலை குனிந்தான்.

அவனுடைய மனநிலை உணராமல் தாயும், தந்தையும் ஒரே ஆர்ப்பாட்டம் செய்தனர். மகன் கல்யாண வயது வந்தும் கல்யாணத்தைப் பற்றிப் பேச்சு எடுக்காமல், மறுத்தும் கிண்டல் பண்ணிப் பேசி இருவரையும் கலங்க வைத்திருந்தான்.

மகன் கல்யாணமே செய்து கொள்ளவே போவதில்லையா என்று எண்ணியிருந்தவர்கள், இப்போது அவனை உண்டு இல்லை என்றாக்கினர்.

''யார் அவள்!? யார் அவள்!?'' என்று மாறி மாறிக் கேட்டனர்.

தலையைக் குனிந்தபடி இருந்த ஆகாஷ், தாயார், தந்தை, இருவரின் கேள்விகளையும் மறுக்க முடியாமல்,

''அம்மா, அவளிடம் இருந்து இன்னும் சம்மதம் கிடைக்க லம்மா,'' என்று சொன்னபடி விசுக்கென்று எழும்பித் தன் னுடைய சிவந்த முகத்தை மறுபுறம் திருப்பியபடி தன்னுடைய அறையை நோக்கி நடந்தான்.

''ஆகாஷுக்கு வெட்கத்தைப் பார்த்தீங்களா? முகம் எப்படி சிவந்து போயிடுச்சு!'' மகன் நடந்து போவதை ரசித்தபடி சொன்னாள் சுசிலா.

## 20



முடிவு தெரிந்துவிட்ட பட்சத்தில் பிரணத்தி இந்த இரண்டு வாரத்தில் ஓரளவு நிதானத்திற்கு வந்து விட்டாள்.



தன்னைத்தானே சமாதானம் செய்வதற்கு அந்த இரண்டு வாரத் தனிமையும் மிகவும் உதவி செய்தது.

சுப்ரஜா இலைமறை காய்மறைவாக ஓரளவு விஷயத்தைக் கிரகித்துக் கொண்டாள். நம்பவே முடியாத அதிர்ச்சிதான். இது போலவும் நடக்குமா என்பதுதான் அவரை அதிர்ச்சிப் பட வைத்தது.

மற்றப்படி விஷயம் அறிந்தவுடன், இது ஒன்றும் மீள முடியாத துயர் இல்லை. காலப் போக்கில் சரியாகி விடுவாள், அவளை அவள் போக்கிலேயே விட்டுப் பிடிக்கலாம் என்று நிம்மதியானார் அவர்.

அன்று சுப்ரஜா கல்லூரியில் இருந்து வரும்போது கூடவே பிரணத்தியின் சிநேகிதிகள் என்று நுழைந்த பெண்களைப் பார்த்து,

''ஓ....'' என்று முகம் மலர்ந்து அவர்களை வரவேற்று, பின்,

''பிரணா! உன்னோட ஃப்ரண்ட்ஸ் வந்திருக்காங்க. சீக்கிரம் வா!'' என்று குரல் கொடுத்தார்.

''ஹாய், வாங்க, வாங்க, என்ன ஆச்சர்யமான வருகை.''

''எல்லாம் உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாம்னுதான். அதெப்படி இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் சடக்குன்னு வேலையிலிருந்து நின்னுட்டே?'' என்றாள் காவ்யா.

சாதகமானதொரு பதிலை ஏற்கெனவே தயாராக வைத்திருந்த பிரணத்தி.

''மேலே படிக்கப் போகிறேன். ஃபிரிபேர் பண்ணனும் இல்லையா? அதான் வேலையை விட்டாச்சு. சரி, அதை விடு, மோகினியின் முகத்தில் சந்தோஷம் கொப்பளிக்குது. ம்ம்... ம்.. என்னவோ இருக்கு சொல்லு, சொல்லு...'' என்று பிரணத்தி, மோகினியின் கன்னத்தை நிமிண்டிக் கொண்டே கேட்க,



''கல்யாணம் ஃபிக்ஸ் ஆகியிருக்குப்பா எனக்கு. நெக்ஸ்ட் மன்த் கல்யாணம். கல்யாணம் முடிந்தவுடனேயே விடு ஜூட் தான். எங்கேன்னு கேளு. அம்மா ''ஸ்வைங்...''ன்னு லண்டனுக்குப் பறக்கப் போறாங்க!'' என்று கலகலவென்று சிரித்தாள் மோகினி.

''அவன், இவகிட்டே மாட்டிட்டு, எப்படி எப்படி எல்லாம் முழிக்கப் போகிறானோ, பாவம். ஆனா உன்னோட புளுகு மூட்டையை மட்டும் அவிழ்த்து விட்டு விடாதேடி. பயந் துடும்'' என்று காவ்யா கிண்டலடிக்க,

''நானா, பொய்யா? சொல்லுவேனா என்ன?'' என்று பொய்க் கோபத்துடன் படபடத்துக் கேட்ட மோகினியை அடிக்கக் கை ஓங்கினாள் காவ்யா.

''அம்மா! தாயே! உன் பொய்கள் ஒன்றா, இரண்டா வரிசைப் படுத்திச் சொல்லக் கணக்கில்லாமல், நான் நம்பியிருக்கேன் தெரியுமா? எப்படி என்னை ஏமாத்தியிருக்கே! கல்யாண விஷயம் மட்டும் நிஜமாவே உங்க அம்மாவும் சேர்ந்து சொல்லும் வரை எனக்கு நம்பிக்கையே இல்லை.'' இதைக் கேட்டுக் கொண்டிருந்த பிரணத்தி, மோகினிக்கு உதவியாக,

''ச்சீ, சும்மா விளையாட்டுப் பொய்தான், அதுக்கு ஏன் காவ்யா அவளை வாரி விடுறே?'' என்றாள்.

''விளையாட்டுப் பொய், சீரியஸ் பொய், அப்படி எல்லாம் இவளுக்கு வகை பிரிக்கத் தெரியாது. எல்லாமே தமாஷ் தான் இவளுக்கு!'' என்று காவ்யா சொல்ல மோகினிக்குச் சிரிப்புதான் வந்தது.

''பிரணத்தி! அன்னைக்கு ஒரு நாள்... நீ கூட இருந்தியே ஞாபகம் இருக்கா, இவள் பாஸ்ஸைப் பார்த்துட்டு வந்து கம்ப்யூட்டர் டேபிள்லே முகம் சிவக்கக் குப்புறப் படுத்து அழுதாளே,கேட்டதுக்கு என்ன சொன்னா?''

பிரணத்திக்குத்தான் இமை பிசகாமல் ஞாபகம் இருக்கே. இதழோடு இதழ் பொருத்தி ஆகாஷ் இவளை முத்தமிட்டு விட்டான் என்றல்லவா சொன்னாள்.

மனசுக்குள் திக் என்றது.

அதுவும் பொய்தானா? அடக் கடவுளே... இப்படியும் ஒருத்தியால் பொய் சொல்ல முடியுமா?

''நான் சொன்ன பொய்யிலேயே 'டாப்' அதுதான். நீங்கல் லாம் நல்லா ஏமாந்தீங்களா!'' என்று நினைத்து நினைத்துச் சிரிக்க, அவளுக்குக் கிறுக்குத்தான் பிடித்து விட்டதோ என்று பிரணத்திக்குத் தோன்றியது.

''பின்னே என்னவாம், மெனக்கெட்டு அலங்காரம் பண்ணி என்னவெல்லாமோ கற்பனைப் பண்ணிட்டு நான் அவன் முன்னால் போய், நின்றால், அது என்னைத் திட்டுச்சு. அதான் நான் நினைத்தது நடந்த மாதிரி கற்பனை பண்ணிக்கிட்டேன்!'' என்று மோகினி மீண்டும் சிரிக்க,

''இதுதான் மான, அவமானம் பார்க்காத பொய்!'' என்று சொல்லியபடி காவ்யா மோகினியின் முதுகில் அடிக்க,

''ச்சீய். இது ஜாலி பொய்ப்பா!'' என்று அவள் கையைத் தட்டிவிட்டபடி மோகினி சொல்ல,

பிரணத்திக்குத்தான் நெஞ்சு துடித்தது. என்ன பேசுவ தென்றே தெரியவில்லை. கண்களில் பொங்கிய வேதனையை மறைக்க முகத்தைத் திருப்பினாள்.

ஆகாஷை நான் தவறாகக் கணித்து விட்டேனா? அப்படி என்றால் அவன் பெண் பித்தன் இல்லையோ என்று அவள் சிந்திக்கையிலேயே, எப்படியும் இருக்கட்டும். அந்தப் பெண் மோனா, உண்மைதானே. அவனும், அவளும் சேர்ந்து சுற்றியது ஆபீஸ் முழுக்கப் பேச்சுதானே.



அவளைப் பற்றி நல்லதை ஏற்றுக் கொள்ள மனம் ஏனோ தயங்கியது.

பிரணத்தி தங்கள் பேச்சில் ஒன்றாததைக் கண்டு,

'சொடக்' விட்டு அவளை அவர்கள் பேச்சில் திசை திருப்பினார்கள்.

மேலும் பல கதைகளைப் பற்றி அரட்டையடித்தபடி, கல்யாணத்திற்குக் கண்டிப்பாக வரணும் என்ற கோரிக்கை யோடு விடைபெற்றனர் தோழியர். விடை பெறுமுன், ''மோனா வுக்குக் கல்யாணம் ஆகி இரண்டு வயதில் குழந்தையுமிருக் காம். அவள் கணவனும் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் என்ஜினியர் தானாம். அவளைப் பார்த்தா வயசே தெரியவில்லை பார்த்தியா! சின்னப் பெண் என்று நினைத்துப் பொறாமையில் கன்னா பின்னான்னு தப்புத் தப்பா பேசிட்டோமில்லையா!'' என்று லேசாக வருத்தப் பட்டுக் கொண்டார்கள். வம்புக்காரப் பெண்கள். பிரணத்திக்குத்தான் மண்டை குழம்பியது.

## 21

பொழுது போகாமல் தோட்டத்தில் குரோட்டன்ஸ் எல்லாம் லெவல் கட்டிங் செய்து கொண்டிருந்தாள் பிரணத்தி. கடைசித் தொட்டியாக இருந்த அந்தச் சிகப்பு ரோஜாச் செடி நான்கைந்து பூங்கொத்துக்களாகப் பூத்து இருப்பதைக் கண்ட வுடன், ஆசையாக அதன் பட்டிதழ்களை வருட, திடும்மென ரோஜாப் பூங்கொத்துச் சேலை நெஞ்சில் பசுமையாய்ப் படர்ந்தது. எல்லாவற்றையும் விட்டுவிட்டு, வீட்டுக்குள் ஓடினாள் பிரணத்தி.



தன்னுடைய அறைக்குள் வந்து, அந்தப் பட்டுச் சேலையை விரித்து அதன் சரிகை வேலைப்பாட்டினைத் தடவினாள். அவளுக்குள் பல கற்பனைகளை அள்ளித் தந்த சேலை, அப்பொழுதும் அவளுள் அந்த வேலையைச் செய்ய, மனசுக்குள் ஆகாஷ் நிறைந்தான். ஒருவித ஏக்கம் அவளை ஆக்கிரமித்தது.

தொலைபேசி சிணுங்கவும், அம்மா எடுப்பார்கள் என்று அந்தச் சேலையை விட மனமில்லாமல் பிடித்தபடி நின்றிருந்த பிரணத்தி, ''போனை அட்டெண்ட் பண்ணும்மா!'' என்று கிச்சனில் இருந்து வந்த வேகக் குரலில் புடவையை மடித்து வைத்துவிட்டு, சத்தம் நிற்கும் முன் பாய்ந்து சென்று போனை எடுத்தாள்.

''என்னடி பண்ணிட்டு இருக்கே. ரொம்ப நேரமா போன் அடிக்குது!'' வேகவேகமான குரலில் ரம்யா.

''என்ன விஷயம், சொல்லு.''

''நான் போனைக் காதிலேயே வைத்திருக்கேன். நீ ஓடிப் போய் டி.வி.யை ஆன் பண்ணி 'ஸ்டார் ப்ளஸ்' சேனலைப் போடு!'' ஆணை பிறப்பித்தாள் அவள்.

''இப்ப டி.வி.யோ, எந்தக் கருமாந்திரமோ, அதைப் பார்க்கும் மனநிலையில் நான் இல்லை. உன்னிடம் கொஞ்சம் பேசணும் ரம்யா.''

''நன்றி கெட்டவள் முதலில் டி.வி.யைப் போடு. அப்புறம் வேறு பேசு.''

''ம் ம்.. ம்.. இப்ப டி.வி. ரொம்ப அவசியம்தான்.'' அலுத்தபடி அருகிலிருந்த ரிமோட் கண்ட்ரோலை இயக்கி ஸ்டார் ப்ளஸ் சேனலை நிறுத்தினாள்.

டி.வி.யைப் பார்த்த கண்கள் அதில் தெரிந்த முகத்தைக் கண்டதும் சிமிட்டக்கூட இல்லை. சொல்ல மடியாத உணர்வுகள் அவளைத் தாக்கின. பற்கள் உதட்டை அழுத் தியதில் சிறு பொட்டு ரத்தம் உதட்டில் கசிந்தது.



''ஏய்... போட்டியா?'' மறுமுனையில் சத்தத்தைக் குறைக்காமல் ரம்யா கத்த,

''ம்ம்... ம்.. என்ன வந்தது?'' தன்னைச் சமனப்படுத்தியபடி பிரணத்தி டி.வி. திரையில் இருந்து கண் அகட்டாமல் கேட்க,

''இப்ப டி.வி.யில் வருகிற முகம், இவர்தான் அன்று ஹோட்டலில் ஹீரோ வேலை செய்து உன்னைக் காப்பாற் றியவர். புரிந்ததா? நன்றாகப் பார்த்துக் கொள். இவர்தான் நீ வேலை பார்த்தாயே, அதே கம்பெனி எம்.டி. இலீடிங் தொழில் அதிபர் 'ஆகாஷ்' இவ்வளவு பெரிய 'பிக் ஷார்ட்'னு யார் கண்டா? அன்று இவர் முகத்தில் என்ன ஆக்ரோஷம், அந்தப் பொறுக்கியை, உண்டு, இல்லை என்றாக்கிவிட்டு, உன்னை அப்படியே பூப் போலத் தூக்கிச் சோபாவில் வைத்து, கைக் குட்டையால் முகத்தை ஒற்றிய பின், என்னிடம் ஜாக்கிரதை யாக உன்னை வீட்டுக்குக் கூட்டிப் போகச் சொல்ல ஏவி, உன்னிடம் ஏதோ பற்றுக் கொண்டிருந்தவனைப் போல் செயலாற்றிய விதம், எனக்கு நிஜமாகப் பிரமிப்பைத்தான் தந்தது.

அறிமுகமில்லாத பெண்ணுக்கு உருகிப்போய் உதவு பவனைக் கண்டு...'' என்று ரம்யா பேசிக் கொண்டிருந்தாள்.

ரிஸீவர் எப்பொழுது பிரணத்தியின் கைகளிலிருந்து விழுந்தது என்று தெரியாது. அவள் எவ்வளவு நேரம் அப்படியே சிலை போலக் கண்களில் வைரம் ஜொலிக்க நின்றாள் என்று தெரியாது.

ஒரு தட்டில் நிலக்கடலையோடு வந்து டி.வி. பார்க்கும் எண்ணத்தில் சோபாவில் உட்கார்ந்த சுப்ரஜாவும், பேட்டியைக் கூர்ந்து கவனித்தார். முக்கியமாகப் பேட்டி அளித்தவரின் முகத்தை இதற்கு முன் எங்கேயோ, பார்த்த மாதிரி... சட்டென்று புரிந்து விட்டது சுப்ரஜாவிற்கு. உடனே திரும்பி மக்களைக் கூப்பிட்டு,

''பிரணாகுட்டி, இவர்தான். இவர்தான் அன்று புடவைக் கடையில் உன்னை ஆபத்திலிருந்து காப்பாற்றியவர், பார்த்தாயா, பெரிய மனிதன் பெரிய மனிதன்தான். சாதனையாளர் வரிசையில் உள்ள பேட்டியில் அல்லவா அவனைப் பேட்டி எடுக்கிறார்கள். யார்? என்ன? என்று விவரமாகப் பார்த்து, கோவிலில் அவன் பெயருக்கு ஒரு அர்ச்சனை பண்ணிடணுமா, எங்கிருந்தாலும் நன்றாக மனநிறைவோடு வாழணும். முன்பின் அறியாதவர்களுக்கு, எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் உதவி செய்த நல்ல மனுஷன்னு சதா அந்தப் பையனைப் பற்றி நினைப்பேன். அவர் வாழ்க்கையிலும் சாதனை படைத்தவரா?'' என்று பேட்டியைக் கவனித்தபடி சுப்ரஜா பேச, பிரணத்திக்குக் கை, கால்கள் தாளம் போடத் தொடங்கின.

உதடு சிரிப்பில் விரிய, ஆனால் கண்களில் மடை திறந்தாற் போலக் கண்ணீர் பாயத் தன் நிலையை மறைக்க, சடக்கென்று பக்கத்து அறைக்குள் நுழைந்தாள் அவள். நாற்காலியில் சரிந்து, கண்களை மூடியவளின் மனக்கண் முன் நிகழ்ச்சிகள் கோர்வையாக வந்தன.

அவ்வளவு நாள் அவன் பேசிய பேச்சுக்களில் இருந்த உண்மையும் சுட்டது. அவளையே சுற்றிச் சுற்றி அவன் வந்து கொண்டிருக்க, எப்படிப்பட்ட பட்டத்தை வழங்கியிருக்கிறாள், 'பொம்பளைப் பொறுக்கி!' அந்த ஏச்சு எவ்வளவு தூரம் அவனைக் காயப்படுத்தியிருக்கும். மன்னிப்பானா?

## 22



மறுநாள் காலையில் எழுகையிலேயே பிரணத்தியின் காதல் தகதகவென்று மின்னியது முகத்தில், கண்களில்



சந்தோஷ ஒளி, சிவந்த உதடு சிரிப்பில் விரிந்து முணுமுணுத்த பாட்டில் என்ன ஒரு சிலிர்ப்பு. இவ்வளவு இருந்தும் அடி நெஞ்சில் சிறிய பயம் இருந்து கொண்டேதான் இருந்தது.

மனதுள் முடிவெடுத்த பிரணத்திக்கு அதைச் செயல் படுத்துவது மிகவும் கடினமான விஷயமாகப் பட்டது.

தன்னால் ஆகாஷைத் தவிர வேறு யாரையும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது என்பது தெரிந்த விஷயம்தான். அவனுக்கும் அவள்பால் ஈர்ப்பு உண்டு என்பதையும் உணர்ந்தேயிருந்தாள். ஆனால் அன்று அவனிடம் அந்த அளவு மனம் நோகப் பேசிவிட்டு, இப்பொழுது எதைப் பேசுவது, எப்படித் தொடங்குவது என்பது ரொம்பவும் கஷ்டமானதாகப்பட்டது அவளுக்கு. வீட்டில் தொலைபேசி தொடர்புக்கு ஏதோ கோளாறு ஏற்பட்டிருந்ததால் பிரணத்தி காலையில் அம்மா, அப்பாவும் வழக்கம்போல் வேலைக்குக் கிளம்பிச் சென்றவுடன் தானும் குளித்து உடையணிந்து சமையல்கார அம்மாளிடம் சொல்லிவிட்டு ரோட்டில் நடந்தாள். நடை பாதையின் ஓரத்தில் இருந்த அந்த பி.சி.ஓ.வினுள் நுழைந்தாள்.

தன் வாழ்க்கைக் கோணத்தையே திசை திருப்பிய அந்த செல் நம்பரை டெலிபோனில் மெல்ல அமுக்கினாள்.

பதிலுக்காகக் காத்திருக்கையில் என்ன பேச வேண்டும் என்று ஒருமுறை மனதில் சரி பார்த்த பிறகும், மறுமுனையில் ஆகாஷின் 'ஹலோ' என்ற குரல் கேட்டவுடன், பிரணத்திக்கு யோசித்து வைத்திருந்த வார்த்தைகள் ஒட்டு மொத்தமாக மறந்து போயின.

நிதானமற்றுப் பலமுறை 'ஹலோ' சொல்லிய ஆகாஷ், கீழே வைக்கும் முன் பிரணத்தியின் செவ்விதழ்கள்,

''நா... நான்... பி... ரணத்தி!'' என்று திக்கின.

''பிரணத்தி!'' என்றவன் குரலில் அதிர்ச்சி தெரிந்தது. டெலிபோன் ரிசீவரை வலது காதுக்கும், இடது காதுக்குமாக



மாறி மாறி வைத்த பிரணத்திக்கு மேலே ஒன்றும் பேச 'நா' எழும்பவில்லை.

அவன் விஷயத்தைச் சொல்லும் வரை அவன் பேசக் கூடாது என்று விரதம் இருந்ததுபோல் மறுமுனையில் இருந்து வேறு சத்தத்தையே காணோம்.

சில நிமிடங்கள் மௌனத்தால் கரைந்தன.

''எனக்கு அவசரமா பேசணும். லைன் கிடைக்கலன்னா வைக்கறிங்களா?'' என்று பக்கத்தில் இருந்து வந்த குரலில் பிரணத்தி தன் நிலை உணர்ந்து தன்னைச் சுதாரிப்பதற்குள்,

''எனக்கு உங்களிடம் பேசணும்,'' என்று சொல்லிய பிரணத்திக்கு, எங்கே பேசுவதற்கு ஒன்றும் இல்லை என்று போனை வைத்து விடுவானோ என்று உள்ளே கடுகளவு இருந்த பயம் பொறி பெரிய நெருப்புப் பந்தாகி அவள் நெஞ்சத்தை எரித்தது. ஆனால் அவன்,

''நாம் கம்பெனிக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறேன், முடிந்தால் வா!'' என்று பட்டென்று வைக்க,

பிரணத்தி, அவனுக்குத் தன் மேல் உள்ள பிடிமானம் அற்றுப் போய் விட்டதோ என்று, ஆடிப் போனாள். ஒட்டுதலோ, பற்றுதலோ இல்லாது வந்த வார்த்தைகள் அவளைச் சஞ்சலப்படுத்தின. இருந்தாலும், இருபது நாட்களில் திருமணம் என்று வாய்ச் சவடாலாகப் பேசியவனிடம் அவள் என்ன காதல் பேச்சா பேசுவான், என்று அவள் மனம் அவளைக் குத்திக் காட்டியது.

பலதையும் சிந்தித்தபடி அவன் கம்பெனியை அடைந்தாள். ஆட்டோவில் இருந்து இறங்குகையிலேயே அவனுடைய காரும் அங்கே நிற்பதைப் பார்த்து நேரே அவன் இருக்கும் மாடிக்குச் சென்றாள். நெஞ்சு டப் டப் என்று அடித்துக் கொண்டது. அனுமதி கிடைத்தவுடன் ஆகாஷின் அறைக்குள்



நுழைந்த பிரணத்தி, அவனைக் கண்ட மாத்திரத்தில் சகலத்தையும் மறந்தாள்.

தன்னுடைய சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்த ஆகாஷ், தன்னுடைய கூர்மையான விழிகளால், பிரணத்தியின் கண்களைச் சந்தித்தான். பிரணத்தி அவனுடைய கண்களில் தீர்க்கத்தை நீண்ட நேரம் தாங்கும் வலிமை இல்லாமல் சட்டென்று இமை தாழ்த்தினாள்.

அவளை எதிர்புறத்தில் உள்ள நாற்காலியில் உட்காரப் பணித்தான்.

''கல்யாண ஏற்பாடெல்லாம் வேகமாக நடந்து கொண்டிருக்கும் என்று நினைக்கிறேன்!'' என்றான் முரடாக.

பிரணத்திக்கு அவனுடைய பேச்சு மனத் தைரியத்தைப் பெரிதும் குலைத்தது.

தன் காதலைப் பற்றிச் சொல்லி, அதற்கு அவன் மறுப்பாக ஏதேனும் சொல்லி விட்டால்... அவளால் தாங்கிக் கொள்ளவே முடியாது என்று தெரியும். அவளிடம் பதில் வராமல் போகவே,

''கல்யாணப் பத்திரிகை எனக்கு உண்டா...?'' அவனின் கேள்வியில் சீற்றத்தை அடக்கிய நிதானம் தெரிந்தது.

எவ்வளவோ பேச வேண்டும், கேட்க வேண்டும் என்று ஆசையுடன் ஓடி வந்த பிரணத்தி, அவனின் ஈடுபாடு இல்லாத குரலில் தொய்ந்தாள்.

அவளின் மௌனத்தில் அவனுக்குக் கோபம் ஏற்பட்டது இயலாமை! அதே கோபத்தில்,

''இந்த ஏமாற்றுக்காரனை, பொய்யனை, பொறுக்கியைப் பார்க்க வந்த காரணம் சீக்கிரம் சொல்லாயா?'' என்றான்.

...இப்படி அவன் பேசுகையில், பிரணத்திக்கு நெஞ்சு அந்தரத்தில் ஊஞ்சலாடுவதுபோல் பயமாயிருந்தது. ஆனால்

வாய் இயந்திரத் தனமாகத் திறந்து பேசியது. நெஞ்சு தடதடத்தது. அவளின் காதலுற்ற இதயத்திலிருந்து வார்த்தைகள் முட்டி மோதிக் கொண்டு, ஓடி வந்து ஓடிய அவளின் உதட்டை முட்டித் துடிதுடிக்க வைத்தது. பற்களால் உதட்டைக் கடித்தபடி அமர்ந்திருந்த பிரணத்திக்கு, தன்னுடைய வரவால் பாதிக்கப் பட்ட ஆகாஷின் மனநிலை எள்ளளவும் புரியவில்லை.

அழகு ஓவியமாக வந்து நின்ற பிரணத்தியை வாரி அணைத்துக் கொள்ளப் பரபரத்த கைகளை அடக்கச் சிரமமாக இருந்தது ஆகாஷிற்கு. ஆனால் அவன் காதலுக்கு எதிர் காலமே இல்லை எனும்போது அதை மேலும் மேலும் வளர்த்துத் தன்னையே அழித்துக் கொள்ளவும் தயாராயில்லை.

'யார்? என்ன? என்ற விவரங்கள் தெரியாமல் பல சந்தர்ப்பங்களில் எனக்கு உதவியிருக்கிறீர்கள், அந்த நன்றியை ஒரு நாளும் தெரிவிக்க முடியாமல் இருந்து விடுமோ என்று எண்ணிக் கஷ்டப்பட்டிருக்கேன். ஆனால் நேற்று டி.வி.யில் பார்த்தவுடன்தான், அம்மாவும் ரம்யாவும் சொன்ன பிறகுதான், துணிக் கடையிலும், ஹோட்டலிலும் என்னைக் காப்பாற் றியவர் நீங்களேதான் என்று புரிந்தது. எந்த வகையில் உங்களுக்கு நன்றி சொல்வது...''

அவள் அவனைச் சந்திக்க விரும்பிய காரணத்தை யோசித்துக் கொண்டிருந்த ஆகாஷ், பிரணத்தியின் நன்றிப் பேச்சைக் கேட்டதும் 'கோபம் வெடித்துக் கொண்டு கிளம்பியது. இவளின் நன்றிக் கடனுக்கு... என்று எண்ணியவன்,

''ஸ்டாப் இட். உன்னோட நன்றியை நீயே வைத்துக் கொள். நீயும் போய் விடு. இனி எனக்கு உன்னைப் பார்க்க வேண்டும் என்று இல்லை!'' என்று பேசிக் கொண்டு போனவனை டெலிபோன் மணி அடித்து அழைத்தது.

''ஹலோ...'' என்றான். பின் அவனே தொடர்ந்து, ''ம்ம்... நாளைக்கு இரண்டு மணி ஃப்ளைட்லே போறேன். ஓ... ஓ... சரியா ஒரு மாதத்திலே திரும்பிடுவேன். மேற்கொண்டு பேசுவதை நான் லண்டன் போய், பேச்சு வார்த்தை முடித்தவுடன் வைத்துக் கொள்ளலாம். ஓ... ஃபைன்!'' என்றபடி ரிசீவரை அதன் தாங்கியில் வைக்க,



பிரணத்தி இருக்கையை விட்டு எழும்பி விட்டாள். அவளுடைய ஆகாஷை அந்த நிமிடத்தில் இருந்து தன்னுடனேயே, தன்னருகிலேயே இருத்திக் கொள்ள வேண்டும் என்று ஆசை கட்டுக் கடங்காமல் பொங்கியது.

''நீங்கள்... எங்கேயும் போகக்கூடாது. என்னுடனே இருக்...க்..''

என்ன என்பது புரியாமல், புருவத்தை உயர்த்தினான் ஆகாஷ்.

''நீ... நீங்கள்... சாரி... நான்... ஐ...'' என்று பேச முடியாமல் திணறியவளை ஆகாஷ் தடுக்கவில்லை. அவள் பேச்சு முடியும் வரை விடப் போவதாகவும் தெரியவில்லை அந்தப் பார்வை.

மீண்டும் டெலிபோன் மணியடிக்க, பதில் பேசாமல் கட் செய்து போனை வெளியே வைத்தான்.

பிரணத்தி உதட்டைக் கடித்துத் தன்னை நிதானப் படுத்திக் கொண்டு,

''வாழும் காலம் முழுவதும் நான் உங்களுடன் வாழ ஆசைப்படுகிறேன். நான் நிறையத் தவறுகள் செய்திருக்கிறேன். வார்த்தைகளை மிக மிகத் தவறுதலாகப் பிரயோகித்திருக்கிறேன். என்னை மன்னித்து ஏற்பீர்களா?''

கெஞ்சும் குரலில் கேட்ட பிரணத்தியை வைத்த விழி மாறாமல் பார்த்தான் ஆகாஷ்.

சில நொடிகள் மௌனத்தில் கரைந்தன. கண்களில் தேங்கிய கண்ணீரை மறைக்கக் கண்களைத் தாழ்த்தினாள் பிரணத்தி.

ஆகாஷ் மெல்ல நடந்து அவளின் அருகே வந்து, ஒற்றை விரலால் அவளின் நாடியை நிமிர்த்தி அவளின் முகம் பார்க்கச் செய்தான்.

''நான் அயோக்கியன், பொம்பிளைப் பொறுக்கி, பெண் பித்தன்... என்று தெரிந்த பின்புமா?'' என்றவனின் குரலில் ஏக்கம் இருந்தது. தவறாக என்னைக் கணித்து விட்டாயே என்ற கவலை இருந்தது.

ஏன் என்றே புரியாமல் பிரணத்தியின் கண்களில் இருந்து கண்ணீர்த் திவலைகள் மடமடவென்று இறங்கின. அவளருகில் இருந்த ஆகாஷ் மெல்லச் சன்னல் புறமாக நகர, அந்த இடைவெளியைத் தாங்க முடியாமல் பிரணத்தி அவனுடைய கைகளைப் பற்றினாள்.

ஆனால் அடுத்த வினாடி பிரணத்தி ஆகாஷின் கையணைப்பில் கட்டுண்டாள். அவனுடைய மார்பில் முகத்தைப் மறைத்த பிரணத்திக்கு எல்லையில்லா நிம்மதி ஏற்பட்டது.

அவளுடைய கழுத்து வளைவில் முகம் புதைத்த ஆகாஷ், மெல்ல அவள் செவிகளில்,

''ஐ லவ் யூ பிரணா!'' என்று முணுமுணுத்தான்.

பிரணத்தியின் முகத்தில் நாணம் குடி புகுந்தது. மெல்ல அவன் அணைப்பில் இருந்து விடுபட முயன்றாள். அவளுடைய முயற்சியை உணர்ந்த ஆகாஷ் மெல்ல நகைத்தபடி, அவனுடைய பிடியை மேலும் இறுக்கினான்.

பிரணத்திக்கு வெட்கத்தில் முகம் சிவந்து போனது.

''என்னால் நம்ப முடியவில்லை. பிரணா. நடப்பது கனவா, நினைவா என்றே தெரியவில்லை. இது கனவென்றால் நான் எழப் போவதில்லை. நினைவெல்லாம் இக்கணத்தில் இருந்து உன்னை விட்டுப் பிரியப் போவதில்லை'' என்று வசனம் பேசினான் ஆகாஷ்.